# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

டிசம்பர் 1954 ★ விலை ஆறு அணா

883



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-DEC 1954
MADRAS
883.
4-54

சாந்தி

கலை இலக்கிய மாத இதழ்



REGISTRAR OF BOOKS
4-DEC 1954
MADRAS
1766

★

இந்த இதழில்....

சாந்தி மலர்கிறது .... 3

நாம்
திருச்சிற்றம்பலக் கவிராயர் .... 5

தண்ணீர் சுந்தர ராமசாமி .... 9

பழிக்குப்பழி கே. ஏ. அப்பாஸ் .... 21

பாரதி வசனம்
மு. சண்முகம் பிள்ளை .... 36

மழை இரவு அகிலன் .... 42

கட்டபொம்மு துரை கதை
ரகுநாதன் .... 51

சாந்தி 'தமிழ் ஒளி' .... 61

தாய் உள்ளம் (குட்டிக் கதை) .... 62

புத்தக விமர்சனம்
நா. வானமாமலை .... 63

டாக்டரின் கோபம்
சி. வி. எஸ். ஆறுமுகம் .... 65

எழுத்தாளர்களைப் பற்றி .... 71

---

கதைகளில் வரும் பெயர், சம்பவம் அனைத்தும் கற்பனை; எவரையும் குறிப்பிடுவன அல்ல.

திருமணப் பத்திரிகை முதலிய வேலைகளும், எல்லாப் புத்தக வேலைகளும், கல்லூரிகளுக்கும், உயர்பள்ளிகளுக்கும் உரிய எல்லா அச்சு வேலைகளும் அருமையாகவும் கண்ணைக் கவரக் கூடிய அழகிய முறையிலும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★

# கணேசன் அச்சகம்

திருநெல்வேலிச் சந்திப்பு.

---

# டி. ஏ. எஸ். காப்பி டிப்போ

சென்ட்ரல் பாங்கு பக்கம் - திருநெல்வேலி ஜங்ஷன்.

உயர் ரக காப்பிக்கொட்டை
காப்பி பவுடர் வாங்குவதற்கு
நம்பிக்கையான இடம்

இந்தியன்
காப்பி போர்டு
பெர்மிட்தார்

★

ஸ்டேன்ஸ்
காப்பி & தேயிலை
ஸ்டாக்கிஸ்டு

[illegible]ர்:- T. A சங்கரநாராயணன்

சாந்தி

"நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல்" — பாரதி

மலர் 1 | ஜய, கார்த்திகை ○ டிசம்பர், 1954 | இதழ் 1

# சாந்தி மலர்கிறது

○

**சாந்தி** இன்று மலர்கிறது.

'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே தோய்ந்து சங்கத் திருப்பிலே வளர்ந்த' எழிலரசியாகத் தமிழன்னையைக் கவிஞர்கள் பாராட்டுகிறார்கள். அதுபோல் 'தென்னன் புகழ் தோய்ந்த' திருநெல்வேலிச் சீமையிலே பிறந்து, தமிழர் பெரு மக்களின் கரங்களிலே தவழ்ந்து, கருத்திலே தோய்ந்து, அவர் தம் ஆதரவிலே வளர விரும்பும் பெரு விருப்போடு **சாந்தி** இன்று மலர்கிறது.

பாட்டுக்கொரு புலவன் பாரதியும் தேசபக்த சிரோமணி சிதம்பரம் பிள்ளையும் சிறுகதைக்கோர் தனி நாயகன் புதுமைப் பித்தனும் தோன்றிய சீமையிலிருந்து **சாந்தி** மலர்வதில் பெருமை கொள்கிறது; அவர்கள் கற்பித்துத் தந்த லட்சிய மார்க்கத்தையும் இலக்கிய போதத்தையும் கருத்திலே கொண்டு, புதிய இலக்கியங் களைப் படைத்து, அவர்களைப்போல் தமிழர் நெஞ்சில் தனித்ததோர் இடம் பெற்று வாழவேண்டும் என்ற ஆர்வத்தோடு **சாந்தி** இன்று மலர்கிறது.

தமிழ் மொழியையும் தமிழர் வாழ்வையும் மேம்படுத்த உதவும் சிறந்த சிந்தனைச் செல்வங்களையும், மனித குலத்தின் மாண்பையும் மகோந்நதத்தையும் சித்தரிக்கும் இலக்கிய

சிருஷ்டிகளையும், பண்டுதொட்டு உருவாகி வந்துள்ள நமது கலாசாரபாரம் பரியத்தையும் பண்பையும் உணர்ந்தறிந்து, அதன் ஞானப்பிரகாசத்திலே நவ நவமாம் புதுமைகளைத் தோற்றுவிக்கும் கற்பனைக் களஞ்சியங்களையும் வரையாது வழங்கவேண்டும் என்ற உணர்வோடும் உத்வேகத்தோடும் உன்னத லட்சியத்தோடும் **சாந்தி** இன்று மலர்கிறது.

சொத்தைக் கருத்துக்களும் சொற்சிலம்பங்களும் மிகுந்த இலக்கியப் போலிகளை இனம் காட்டவும், வெள்ளிக் காசுக்கும் விதேசியச் சிறுமைக்கும் இருதயத்தையே எடை போட்டு விற்றுவிட்ட எழுத்துலகத் துரோகிகளை அம்பலப்படுத்தவும், நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் பாஷை வளத்தையும் இழிவு படுத்தும் நாசக் கற்பனைகளை வேரறுக்கவும், தெம்பும் திராணியும், இளமையும் புதுமையும் நிறைந்த இலக்கிய சிருஷ்டிகளை வரவேற்கவும் வளர்க்கவும் புனித சங்கல்பம் பூண்டு **சாந்தி** மலர்கிறது.

எனவே சாந்தியின் வளர்ச்சிக்கு நல்ல இலக்கியத்தை வாழ்த்தி வரவேற்கும் வாசகநேயர்களின் உதவியும் ஒத்துழைப்பும்தான் தேவை. சாந்தியின் வாசகர் கூட்டத்தைப் பெருக்கவும், சாந்தியின் சந்தாதார்களாகச் சேர்ந்து எங்களை ஊக்குவிக்கவும், சாந்தியில் வெளிவரும் இலக்கிய சிருஷ்டிகளைப்பற்றிய அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதியனுப்பி, சாந்தியை மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு உதவவும் வாசக நேயர்கள் முன்வர வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்; வேண்டுகோள்.

---

## குறிப்புக்கள்

'பாரதி வசனம்' சென்ற பாரதி தினத்தையொட்டி சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட பேச்சாகும்.

'தாய் உள்ளம்' என்னும் கதை பிரபல அமெரிக்க எழுத்தாளர் ஹோவார்ட் பாஸ்ட் எழுதிய 'ஸ்பார்ட்டக்கஸ்' என்னும் நவீனத்தில் காணப்படும் சிறு சம்பாஷணையிலிருந்து பெயர்த்து உருவாக்கப்பட்ட கதையாகும். ★



# நாம்

**திருச்சிற்றம்பலக் கவிராயர்**

காடுகளாய் மலை மேடுகளாய் எங்கும்
காணக் கிடந்த இப்பூவுலகை
மேடு திருத்தியே கன்னலும் செந்நெலும்
விம்மி விளைந்திடச் செய்தவர் நாம்.

மாலையிள வெயிற் கோலத்திலே மழை
வானவில்லின் ஏழு வண்ணத்திலே
நூலைத் திரித்ததும் சேலைகள் நெய்ததும்
நூற்றுக்கணக்கில் குவித்ததும் நாம்.

வெற்பின் இமகிரி போல் நிமிர்ந்து விண்ணின்
மேகங் கிழிபட நீண்டுயர்ந்த
அற்புத கோபுர கூடமும் மாடமும்
ஆக்கிப் படைத்தவர் நாம், அவர் நாம்.

ஆழ நெடுங் கடற் பேழைக்குள்ளே தவழ்
ஆயிர மாயிரம் முத்தினத்தை
மீளக்கொணர்ந்து குவித்தவர் நாம்; ஒளி
மின்னுஞ் சரங்களாய்க் கோத்தவர் நாம்.

மின்னற் கொடித்திரள் என்னப் பளிச்சிட்டு
வெட்டி மினுக்கும் நவமணியை
கன்னங் கரிய நிலக் கரியை, தங்கக்
கட்டியை வெட்டி எடுத்தவர் நாம்.

வண்ணமலர்க்குலம் புன்னகைக்கும் கரு
வண்டுக் குலம் மது உண்டுறங்கும்
கண்ணைக் கவர்ந்திடும் பண்ணையைத் தேமலர்
காவனத்தை ஆக்கித் தந்தவர் நாம்.

கங்கு கரையற்றுப் பொங்கி மதங்கொளும்
காட்டு நதிகளைக் கால் திருத்தி
அங்குசம் போலணை தேக்கியே மாநிலம்
யாவும் புரந்திடச் செய்தவர் நாம்.

மாயிருட் பாதலப் பாறைச் சிறைக்குளே
மண்டியெழும் எண்ணெய் வாரிகண்டு
ஆயிரமாயிரம் எந்திரத்தால் பொருள்
அல்லும் பகலும் படைத்தவர் நாம்.

கந்தரு வர்குலச் சுந்தரர் போலவும்
கற்பனை வேகத்தி னற்புதம் போலவும்
அந்தர வெண்முகில் மண்டலத்தே செல்லும்
ஆகாச வாகனம் செய்தவர் நாம்.

கல்லையும் காற்றையும் கனலையும் நீரையும்
கண்டவர் நாம்; வெற்றி கொண்டவர் நாம்;
கொல்ல வரும் பஞ்ச பூதமும் எம்முனே
கும்பிட்டு வாழ்ந்திடச் செய்தவர் நாம்.

எண்ணும் கணக்கும்இ றந்தொழிந்தாலென
எண்ணிற் பலப்பல விந்தை யெலாம்
பண்ணிய மானிடச் சாதியர் நாம்; இந்தப்
பாரிற் படைப்புக்க டவுளர் நாம்.

வையம் தழைத்திடச் செய்தவர் நாம்;புவி
வாழ்வை ஒளி பெறச் செய்தவர் நாம்;
ஐயந்திரிபு சந்தேகமின்றி யுல
காளப் பிறந்தவர் நாம், அவர் நாம்!




# விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பின்புறம் கவர் | .... ரூ. | 75—0—0 |
| உள்புறம் கவர் | .... ரூ. | 60—0—0 |
| முழுப் பக்கம் | .... ரூ. | 50—0—0 |
| அரைப் பக்கம் | .... ரூ. | 30—0—0 |

**வருஷ விளம்பரங்களுக்குக் குறைந்த சார்ஜ்**

பிற விவரங்களுக்கு :

**81. ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.**

பிரபல மருந்து வியாபாரிகள்

சகலவிதமான இங்கிலிஷ் மருந்துகளுக்கும்
பிரக்யாதி பெற்ற இடம்

★

காந்திமதி மெடிக்கல் ஸ்டோர்ஸ்
ஹைரோடு – திருநெல்வேலி ஜங்ஷன்.
போன் நம்பர்: 137



நவீனக் கதைகள்

தமிழாக்கம்: ரகுநாதன்

நவசின மக்களின் வாழ்வையும் வளத்தையும்
தியாகத்தையும் திறமையையும் விளக்கும்
ஐந்து சிறந்த சிறு கதைகள்.

விலை அணு பன்னிரண்டு
(தபால் செலவு தனி)

நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிட்டெட்
திருநெல்வேலி ஜங்ஷன்.

★ "புதுமைப்பித்தன்" பரிசுக்கதை




சுந்தர ராமசாமி

**ஊ**ர்ப் பெரிய குளத்தில் பையன்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பெரிய குளமல்லவா? அதனால் விளையாடச்சௌகரியமாக இருந்தது.

பூமிதேவியின் மார்பு அந்த இடத்தில் காய்ந்து பாளம் பாளமாக வெடித்திருந்தது. எனவே, சமயா சமயங்களில் காலும், பந்தும், அதில் அகப்பட்டுக்கொள்ளும். இருந்தாலும் வர வர அவற்றில் மண்ணேறி வந்தது. அவர்களும் விளையாட ஆரம்பித்து ஒன்றிரண்டு நாட்களா ஆகிறது?

பையன்கள் கன குஷியாக விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

கரையில், தலையிலும் மீசையிலும் வெள்ளிமுலாம் ஏறிவிட்ட கிழவனார் ஒருவர், பையன்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் நீண்ட பெருமூச்சு விட்டார்; துக்கம் தோய்ந்த முகத்தோடு திரும்பி நடந்தார்.

இரண்டு கரையையும் ஆவித் தழுவிக்கொண்டு ஓடும் நதி, வண்டிக்காளை போடும் ஜல பாதை மாதிரி வற்றி வறண்டு, அஸ்தமனத்தை அடுத்து விட்டது.

இடுப்புவரை தண்ணீர் சுழித்துக்கொண்டு ஓடுவதுபோல் வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, ஒருவன் மண்வெட்டியால் மண்ணைத்தோண்டிவிட்டு, குழியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் மண்பானையும், வயிற்றில் ஓட்டையுள்ள கொட்டாங் கச்சி ஒன்றும் இருந்தது. குழியில் அணு அணுவாக ஜலம் ஊறிற்று. விரலை ஓட்டையில் வைத்து அடைத்துக்கொண்டு, தண்ணீரையும் அதோடு மண்ணையும் ஏந்தி, பானையில் ஊற்றினான். பானை நிறையுமா?

வீட்டுக் கிணறுகளில் வாளியைப்போட்டால் 'டக்'கென்று கீழே இடித்தது. வெளியே இழுத்தால் வாளி மட்டும் வந்தது.

இணறுகளில் நெல் போட்டு பத்திரமாக வைக்கலாம். ஆனல் அவர்கள் வீடுகளில் மணி நெல் கூட இல்லை! இணறு இணருக இருந்திருந்தால், பானைகள் காலி யாகவும் இருந்திராது.

தவிப்பு என்றாலே, சாதகப் பட்சியின் நிலைதான். தவிப்பு, தவிப்பு, ஓயாத தவிப்பு. தண் ணீர் குடித்தால் தான், தாகம் தணியும். குடிக்கும் நீர் கழுத் துத் துவாரம் வழி வெளியே வழிந்துவிடும்! தணியாத தாகத் தைத் தீர்த்துக்கொள்ள மழை தான் ஒரே கதி. வானை நோக்கி வாயைத் திறந்துவிடலாம். தா கித்து வரண்டுபோய், மழையை எதிர் நோக்கி ஏங்கிக்கிடக்கும் சாதகப்பட்சியின் நிலைமை சோக மயமானது.

கிராமத்து மக்கள் சாதகப்பட் சிகளாக மாறிவிட்டனர்!

கிராமத்து மக்களுக்கு நானு விதமான சிந்தனையும், பலவித மான பேச்சும் என்றுமே கிடை யாது. இருந்தாலும் ஓரளவு சிந் தனையும், குறுகிய வரம்புக்குள் பேச்சுமுண்டு. இன்று சிந்தனை யும் பேச்சும், ஒன்ருகத் திரண்டு ஒரே கேள்வியாகப் பிறந்து விட்டது. பல்வேறு ரூபங் கொண்ட ஆண் பெண் முகங் களில் அந்த ஒரே ஒரு கேள்வி தான்:

மழை வருமா?

கிராமத்திற்குள் நுழையும் பாதையில், பெரியவீதியில் ஒரே பெண்கள் கூட்டம். அவர்க ளைச்சுற்றி செம்பும், குடமும் பானையும் நிறைந்து இருக்கின் றன. அவர்கள் எல்லோரும் காலை எட்டு மணிக்கு அங்கு வந்தவர்கள்; கால்மாற்றி, கால் மாற்றித் தவம் புரிந்துவிட்டார் கள். வெயில், அக்கினியின் மாயா ரூபத்தில் கனன்றுகொண்டிருந் தது. நிழல் காலடியில் பதுங் கும் வேளை. வெளியூர் முனிசிப் பாலிட்டி லாரியில், பெரிய பீப் பாயில், தண்ணீர் வரும். அவ்வ ளவு பேர்கள் திருஷ்டியும் வீதித் திருப்பத்தில் லயித்திருந் தது. இதோ லாரி வரும் சப்தம். எல்லோரும் தங்கள், தங்கள் பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு, ஒருவரை ஒருவர் இடித்துத்தள்ளிக்கொண்டு ஓடி ஞர்கள்; கண்களில்தான் என்ன ஒளி! எவ்வளவு ஆவல்! கூட் டம் விரைவாக முன்னேறிற்று.

காட்டு மரத்தைப் பாரமேற் றிய லாரி யொன்று அவர் களைத் தாண்டிச் சென்றது!

புறப்பட்ட இடத்திலிருந்து, நெடுநீளமான, ஜலதாரையை வார்த்துக்கொண்டு தண்ணீர் லாரி வந்துசேர்ந்தது. பெண்கள் ஒருவருக்கொருவர் முட்டி மோதிக்கொண்டு லாரியைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரே ஆரவாரம்; மீன்சந்தை இரைச் சல். ஆளுக்குக்கொஞ்சம் ஜலம் கிடைத்தது. எந்தச் சிறிய குட மும் நிறையவில்லை. பெண்கள் கெஞ்சினார்கள். கிழவி ஒருத்தி லாரிக்காரன் நாடியைத் தாங்கி ஞள்; முறை பேசி அன்பாகக் கூப்பிட்டாள். லாரிக்காரன் அசைந்தும் கொடுக்கவில்லை. அவனுக்கு இன்னும் எவ்வளவு ஊர்களுக்கோ, தண்ணீர் காட்ட வேண்டுமாம்!

லாரி புறப்படுகிற பொழுது கிழவி கூப்பாடு போட்டுச் சொன்னுள்:

''ஐயா, இந்தப் பீப்பாய் ஓட் டையெ அடைக்கப்பிடாதா?

தண்ணீ பாளாப்போகுதே!''

இதே வார்த்தைகளை கிழவி தினம் தினம் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுக்கோ உடம்பிலிருந்து சதா ரத்தம் ஒழுகிக் கொண்டிருப்பதுபோல் வேதனை. அந்த ஓட்டையை அடைக்க, கிழவி சுண்டுவிரலைக் கேட்டால்கூட வெட்டிக் கொடுத்து விடுவாள்! தண்ணீர் வீணாகிறது. தண்ணீர்! தண்ணீர்!!

மழை வருவதற்கான கடைசி ஆயுதத்தைக்கூட கையாண்டு பார்த்துவிட்டார்கள். ஊரில் எல்லோரிடமும் பணம் பிரித்து கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். இனிமேலும் மழை வராமலிருக்குமா?

அன்று நிம்மதியாக எல்லோரும் படுத்துக் கொண்டனர். நடுச் சாமம்.

வெளியே நார்க் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த சந்தன மூப்பனார் எழுந்தார். தடியை ஊன்றியவாறே வாதக் கோளாறு கொண்ட' காலைப் பம்பிப் பம்பி வைத்து, ஒன்றுக்குப்போய்விட்டு மீண்டும் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார். வானத்தைத் தலை தூக்கிப்பார்த்தார். அவர் தலைக்கு மேல் வானம் வெளுத்திருந்தது. ஆனால் மேல் கோடியில் பார்த்த பொழுது அவர் முகம் மாறிற்று. கண்களைத் தடவிக் கொண்டு மீண்டும் பார்த்தார். அங்கே... அங்கே, மேகம் திரண்டிருக்கிறது! 'கறுகறு' வென்று மேகம் திரண்டு பரவி வருகிறது.

கிழவருக்குத் திடீரென்று பத்து வயது குறைந்து விட்டாற்போலிருந்தது. இருப்புக் கொள்ளவில்லை. பக்கத்து வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த சண்முக அடவியார் பையன் சுப்பிரமணியனை எழுப்பிக் காண்பித்தார்.

'சரிதான். மழை வருகிறது; மழை வருகிறது!'

இருள் ஒன்றுதான் இரவுக்குச் சாட்சியாக இருந்தது. குழந்தை முதல் கிழவி வரை எல்லோரும் எழுந்துவிட்டார்கள். எல்லோரும் வெளியே வந்து அண்ணாந்து பார்த்தார்கள்.

சூல் கொண்டு திரளும் கரு மேகம்!

புதிய ஜீவன் எல்லோர் உடம்புகளிலும் ஊறிற்று. பட்டப்பகல் அரவம். பெண்கள் பெரிய பாத்திரங்களை காலி செய்து வீட்டுக் கூரை முகட்டுக்குக் கீழ் வைத்தார்கள். சொட்டு ஜலமும் வீணாகக் கூடாதே!

சட்டென்று இருண்டு விட்டது; மை இருள்.

மழைக்காற்று வீசிற்று.

கொடும்பாவி கட்டி இழுத்த பின்பு மழை பெய்யாமலிருக்குமா?

கிழக்கே வெகு தூரத்தில் வானம் பொத்துக்கொண்டு கொட்டுவதை ஒருவன் சுட்டிக்காட்டினான்.

''அதோ! அதோ! தெரியுதா? தெரியுதா?''

மின்னல்!

கடைசியில் லேசாக கொசுத் தூறல் போட ஆரம்பித்து விட்டது! அவர்கள் தலையிலெல்லாம் விழுந்தது. ஒருவருக்கும் வீட்டிக்குள் ஏறிவர மனமில்லை. மழை பெய்யட்டும். தலையிலும் உடம்பிலும் விழட்டும். வீடும் கரையும், காடும், கழனியும் மழையில் குளித்தெழட்டும்.



தலைசிறந்த சிறு கதை எழுத்தாளரான 'புதுமைப்பித்தன்' ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி ஒன்றைச் சென்ற ஆண்டில் நெல்லை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறிவித்தது. அந்தப்போட்டியில் முதல்பரிசு பெற்ற கதையே "தண்ணீர்" படத்தில் காண்பவர் கதாசிரியர்: சுந்தர ராமசாமி. சென்ற 16-7-54 அன்று 'அவ்வை' டி. கே. ஷண்முகம் தலைமையில் நெல்லையில் நடந்த 'புதுமைப்பித்தன்' தினக் கூட்டத்தில் சுந்தர ராமசாமிக்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்பட்டது. இந்தச் சிறுகதைப் போட்டியின் நீதிபதிகளாக இருந்தவர்கள் ஐவர். 1. விந்தன் 2. வல்லிக்கண்ணன் 3. ப.சீனிவாசன் 4. தி. க. சிவசங்கரன், 5. ரகுநாதன்.

பரிசுபெற்ற கதையைத்தவிர நீதிபதிகளின் பாராட்டைப்பெற்ற கதைகள் சிலவும் உள்ளன. அவையும் 'சாந்தி'யில் தொடர்ந்துவெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ✱

மறு நாள் காலை வயலும் கரையும் எப்படி இருக்கும்? காலை இளம் வெயிலில் சிரிப்பும் பசப்புமாக குளித்தெழுந்த குமரி மாதிரி............

மண்வெட்டி சகிதம் காலையிலேயே எல்லோரும் வயலுக்குப் போகவேண்டியதுதான். கால் வெட்டிவிட வேண்டும்; நீர் தங்கி நின்றுவிடக் கூடாது. இந்த வருஷம் நல்ல அறுவடைதான்!

ஒவ்வொருவரும் களஞ்சியத்தில் நெல்குவியும் காட்சியை மனக்கண்ணால் கண்டு களித்துக்கொண்டிருந்தார்கள்.

சந்தனமூப்பனார் வீட்டுக்குள் இருந்த வாறே கை நீட்டிப் பார்த்தார். சாரல் விழ ஆரம்பித்துவிட்டது!

சாரல் தூற்றலாக மாறும், தூற்றல் மழையாகி, பேமாரியாகக் கொட்டும்.

ஆனால்—

சூறுவளி!

தெருக் குப்பையும், சருகும், வீட்டுக் கூரையில் சுழன்றடித்தது.

காற்று; பேய்க்காற்று.

மேகம் சிதறுகிறது; விண்ணென்று ஒதுங்குகிறது.

பொழுது விடிந்ததும் வானம் வெளுத்து விட்டது.

அன்று சாயங்காலமும் ஊர்ப் பெரிய குளத்தில் பையன்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நியாயமாக ஊர் ஜனங்களுக்கு தண்ணீர்த் தவிப்பு ஏற்படக்கூடாது. ஏனெனில் அவர்களுக்கு அணை வசதி உண்டு.

சில மைல்கள் தள்ளி ஒரு அணை. பெரிய அணைதான்! இந்தமாதிரி தண்ணீர்த் தட்டுப்பாடு அவர்களுக்கு முன்பெல்லாம் ஏற்பட்டதில்லை. வருண பகவானை மட்டும் ஒரே போக்காக நம்ப வேண்டிய நிர்ப்பந்தம் வந்ததில்லை. அணை மூலம் தண்ணீர் செழிப்பாக வந்து கொண்டுதானிருந்தது. இப்பொழுதும் அணைக்குக் குற்றம் எதுவுமில்லை. அணை, அணையாயாகத் தானிருந்தது. ஆனால் அதற்குள் ஜலம் மட்டும் தங்காது. சேறும் சகதியும் நிறைந்து போயிருந்தது. அந்தப் பிராந்தியத்திலிருந்து பெரிய புகார் கிளம்பிற்று. வயலின் சொந்தக்காரர்கள் புகார் செய்யவில்லை; விவசாயிகள் புகார் செய்தார்கள்.சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவதற்குச் செய்த பிரயத்தனத்தில் கங்கையையேகொண்டு வந்துவிடலாம். கடைசியில் ஒரு தீர்மானம் ஏற்பட்டது. பழைய அணையைத் துப்புரவுசெய்வதில் 'லாபம்' இல்லை. புது அணை கட்ட வேண்டும்.

புதிய அணையைக் கட்டினார்கள், கட்டினார்கள், வருடக் கணக்கில் கட்டினார்கள். கடைசியில் கட்டி முடித்தே விட்டார்கள்!

இனிமேல் விவசாயிகளுக்கு என்ன கவலை? அவர்கள் ஒவ்வொரு நாளும் பட்ட துன்பத்திற்கெல்லாம் முடிவு வரப்போகிறது. அணைகட்டி முடிந்து விட்டால் விமோசனம்தான். தண்ணீர் நெருக்கடி இனிமேல் அவர்கள் ஆயுளில், அவர்கள் சந்ததியார்கள் ஆயுளில் வரப்போவதில்லை. தண்ணீர் தேவைக்குமேல் வந்து பாயப் போகிறது. நாற்றங்காலில் தண்ணீர் ஏறி, பயிரை அடித்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நீர் நிலை குத்தி நின்று இளம் பயிர்கள் அழுகிப்போகாமல் கவனித்துக் கொள்ளவேண்டும்.

விவசாயிகள் பாக்கியசாலிகள்!

அணை திறப்பு விழா பிரமாதமாக நடந்தது. ஒரு பெரிய மனிதர் நிறையப் பேசினார். உட்கார்ந்த இடத்திலிருந்தவாறே அணையைத் திறந்து வைத்தார். மறுநாள் அவர் பேச்சும், படமும், பத்திரிகையில் வெளி வந்தன. சம்பந்தப்பட்டவர்கள் படங்களெல்லாம் வந்தன. அணையின் தோற்றம் வந்தது. ஆனால் அணையில் தண்ணீர் மட்டும் வரவில்லை!

விவசாயிகள் கண்டு கேட்டிராத ஊரிலிருந்து மூன்று பேர்கள் பறந்து வந்தார்கள். அணையின் நோயைக் கண்டுபிடிக்க வேண்டாமா? விவசாயிகள் திரளாகக் கூடினார்கள். வந்தவர்கள் நீண்டநேரம்பேசினார்கள்; போய்விட்டார்கள்.

அவர்கள் என்ன பேசினார்கள் என்பது மட்டும் விவசாயிகளுக்குப் புரியவில்லை!

இப்படி விவசாயிகள் ஒவ்வொரு நாளும் மனத்தில்ஆசையாக, அணுஅணுவாக, ஏக நம்பிக்கையாக, வளர்த்துக் கொண்டுவந்த கற்பனைக் குழந்தை செத்துப் பிறந்தது!

ஒரு நாள் காலை ஊரில் பெரிய ரகளை.

தண்ணீர் வரி பிரிக்க ஆட்கள் வந்தார்கள். தண்ணீர் வரி!

ஏற்கெனவே ஒரு அணை இருந்தது; புதிய அணையும் கட்டி முடிந்தது.

இப்பொழுது அணைகள் இருக்கின்றன; ஆனால் தண்ணீர் இல்லை.

தண்ணீர் இல்லை; ஆனால் தண்ணீர் வரி இருக்கிறது!

சில இளைஞர்கள் வரி கொடுக்க மறுத்தார்கள். ஒரே அடியாகத் தரமுடியாது என்று சாதித்தார்கள். இது ஒரு புதிய அனுபவம்!

ஆனால், இந்தக் காலத்தில் போக்கிரிகள் எங்கும் மலிந்து விட்டார்கள். தண்ணீர் இல்லையென்றால், தண்ணீர் வரி இல்லை என்கிறார்கள். அக்கிரமம் அல்லவா இது? தேசத்துரோகம் அல்லவா? எனவே வரி பிரிப்பவர்கள் அவர்கள் வீட்டில் புகுந்து, அங்கிருந்த அரிய பெரிய பொக்கிஷங்களையெல்லாம் அள்ளி வெளியே போட்டார்கள். கிழிந்த சட்டை, ஒடிந்த குடை, முக்காலுள்ள நாற்காலி, சட்டி, பானை......... இதையெல்லாம் அவர் ஏலம் போட்டார்கள். இப்படி போக்கிரிகள் கட்டவேண்டிய வரியை வசூலித்தார்கள்.

தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் போன தடவை அறுவடை என்பதே இல்லை. அறுவடைச் சமயத்தில் எருமையும் மாடும் வயலில் மேய்ந்து கொண்டிருந்தன. எனவே விவசாயிகளின் வாழ்க்கை மார்க்கம் குலைந்து சீர் கெட்டுவிட்டது. வீடு தோறும் வறுமை; ஊரில் பஞ்சம்!

இந்தத் தடவையும் ஏறக்குறைய அதே நிலைமைதான். கதிர்கள் தலைக் கனம் ஏறி நிற்கும் சமயம். ஒரே ஒரு தடவை தண்ணீர் பாய்ந்து விட்டால் நல்ல போகம் கண்டுவிடும். மகசூலுக்குக் குறைவு ஏற்படாது. போன தடவைக்கு வட்டியும் முதலுமாக வாரித் தட்டி விடலாம். ஆனால், ஆனால், தண்ணீர் வேண்டும். ஒரே ஒரு தடவை ஜலம் பாய்ந்துவிட்டால் போதும். அப்புறம் விவசாயிகள் 'இந்நாட்டு மன்னர்கள்.'

பழைய அணையில் கால்வாசி நீர் இருக்கிறதாம். ஆனால் மடையைத் திறந்து விடுவாரில்லை. அதற்கென்று தனியே ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் உத்தரவின் பெயரில்தான் மடை திறக்கப்படும்.

சாதாரண விவசாயிகளுக்கு அவரைப் பார்த்துப் பேசவே முடியவில்லை. பேசினவர்களுக்குப் பிரயோஜனமும் ஏற்படவில்லை. அவர் வீட்டுக்கு முன் சதா பெரிய பண்ணைகளின் புதிய கார்கள் காவல் நின்றன. அணையிலிருந்து வரும் ஈவிரக்கமற்ற தண்ணீர், பெரிய பண்ணையார் முகுந்தப் பிள்ளையின் நூறு ஏக்கரா புஞ்சையில் சர்வ சாதாரணமாகப் பாய்ந்துவிட்டு, கோவில் பூசாரி ஆண்டியப்பரின் மஞ்சக்காணித் துண்டத்தில் பாயாமல் நின்று கொண்டது! இன்றும், சுவாமியை அனாதையாக விட்டுவிட்டு, காலையிலும் மாலையிலும் ஆண்டியப்பர் உத்தியோகஸ்தர் வீடு தேடி நடந்துகொண்டிருக்கிறார்!

துண்டு துண்டாக நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் ஏழை விவசாயிகளுக்கு விழி

பிதுங்கிற்று. அவர்கள் ஒன்று சேர்ந்து பேசினார்கள். ஒன்று சேர்ந்து பிராதுகள் தயாரித்து அனுப்பினார்கள்; கூட்டங்கள் போட்டார்கள். திறக்கவேண்டிய கதவை தலையால் முட்டித் திறந்தார்கள். கடைசியில் எல்லாவற்றிற்கும் சேர்ந்து ஒரு பதில் கிடைத்தது. அணையில் சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது!

அவர்கள் வயல்கள் வறண்டு கொண்டிருந்தன. பயிர் கரிந்து கொண்டிருந்தது. வயல் பக்கம் போனால் கண்களில் நீர் முட்டிற்று. ஏதோ ஒரு பயங்கரமான ஆவேசம் மனத்துள் தோன்றி பூதாகாரமாக வளர்ந்து வந்தது. மனத்துள் எரிமலை புகைய ஆரம்பித்து விட்டது. அது எந்த நிமிஷமும் வெடிக்கலாம். வெடித்து விட்டால்—?

அதே சமயம், மறுபக்கம், சாம்பிப்போன மனத்தில், எல்லையில்லாத துக்கம் பீறிடும். சில சமயம் அது ஆக்ரோஷமாக மாறும். ஆனால் அதை யாரிடம் காட்டுவது? யாரிடம் காட்ட வேண்டும்? யாரிடம்?

அணையில் தண்ணீர் இருக்குமென்றால், பெரிய புள்ளிகள் நிலங்களிலெல்லாம் ஏற்கனவே பாய்ந்துவிட்டபடியால் மீதி ஜலம் அவர்களுக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையுண்டு.

ஆனால் அணையில்தான் தண்ணீரே இல்லையே!

நாளுக்கு நாள் பயிர்கள் கருகிக்கொண்டே வந்தன. விவசாயிகளும் பயிரின் நிலையை அடைந்துகொண்டிருந்தார்கள். தண்ணீர் கிடைக்கிறதென்றால் அன்று—அன்றே—கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதோ கதிதான். இந்த வருடமும் மாடுகள் மேயவிடலாமா?

அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்குமா? அணைதான் வறண்டு போய்க் கிடக்கிறதாமே!

மழை பெய்யுமா? வருண பகவான் திருக்கண் திறந்து கடாக்ஷிப்பானா?

வீட்டுக்கு உடையவன் செத்துப்போனமாதிரி விவசாயிகளின் வீடுகள் சோகத்தில் அழுந்திப்போயிருந்தன. அவர்கள் செய்த வேலை, உழைப்பு, ஆசை, அபிலாஷைகள் எரியும் வெயிலில் வாடி வதங்கிக் கருகிப்போய்க்கொண்டிருந்தன.

அவர்கள் கண் முன்னால் அவர்களின் ஒரே சொத்து எரிந்துகொண்டிருந்தது அன்றே தண்ணீர் கிடைக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லாம் இதோடுமுடிந்தது. நாசம்தான்! அழிவுதான்!

அவர்களுக்கு தண்ணீர் கிடைக்குமா?

இரவு ஏழு மணி. மேலக்கரை வேலப்பன் வீட்டை ஒருவன் படபடவென்று தட்டினான். வேலப்பன் பசியோடு படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவன் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

வந்தவனுக்கு மூச்சுத் திணறியது. நெற்றியிலிருந்து வியர்வை வழிந்து கொண்டிருந்தது. அவன் தணிந்த குரலில் சொன்னான்.

"அண்ணேய்! சங்கதி தெரியுமா? அணையிலே தண்ணி

கெடக்குதாம்!''

''தண்ணி கெடக்கா? சும்மா ஏதாவது சொல்லாதே''

''எங்கண்ணுணெ! தெரிஞ் சில்லா சொல்லுதேன்!''

வேலப்பன் ஒரு துண்டை தலையில் சுற்றிக்கொண்டு வந்தான். இரண்டுபேர்களும் வெளியேறினார்கள்.

ஊர் ஆலமரத்தடி. அங்கு பழனி, ஆறுமுகம், இன்னும் ஒன்றிரண்டு பேர்களும் இருந்தார்கள். இவர்களும் அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அதே விஷயம் பலர் வாயில் பல ரூபங்களில் வெளி வந்துகொண்டிருந்து.

''அணையில் தண்ணீர் இருக்கிறது!''

''அணையில் தண்ணீர் இருக்கிறது!!''

அந்த தண்ணீர் அவர்களுக்குக் கிடைத்துவிட்டால் போதும். நிலம் விளைந்துவிடும். தலை தப்பிவிடும்.

மடைதிறக்கும் உத்தியோகஸ்தர் வீடு அங்கிருந்து நான்கு மைல்கள் தள்ளி இருந்தது. தலையில் முண்டாசை வரிந்து கட்டிக்கொண்டு மூன்று பேர்கள் ஓடினார்கள்; இல்லை-பறந்தார்கள்!

மீதியுள்ளவர்கள் அங்கேயே குந்தினார்கள். ஒரு கணம் ஒரு மணியாக இழைந்து கொண்டிருந்தது.மனத்துள் ஒரே துடிப்பு; தண்ணீர் கிடைக்குமா, கிடைக்குமா என்ற தவிப்பு.

ஊருக்கு வெளியே பெரிய மாதா கோயிலில் மணி ஒன்பது அடித்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பேசாமல், மௌனமாக, உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். கும்மிருட்டு. மனித சிவன்கள் உட்கார்ந்திருப்பதையே தெரிந்துகொள்ள முடியாது. மையிருட்டில். தரை மட்டத்திற்கு இரண்டடி உயரத்தில், நான்கு தீப்புள்ளிகள் கனிந்து கொண்டிருப்பது மட்டும் தெரிந்தது.

பொழுது ஊர்ந்து கொண்டிருந்தது.

திடீரென்று கால் அரவம் மாதிரி கேட்டது.

சடக்கென்று மடியிலிருந்த தீக்குச்சியை எடுத்து ஒருவன் உரசிப் பார்த்தான். சாக்கடைப் பக்கம் படுத்திருந்த அனுதைக் கழுதை எழுந்து நொண்டி நொண்டிப் போய்க்கொண்டிருந்தது.

குப்பென்று எழுந்த சிரிப்பு மனத்துள்ளேயே அடங்கி விட்டது. வடிவேலு சமாதானம் சொன்னான்.

''நல்ல சகுனம்தான்!''

பெரிய கோயிலில் மணி பத்தடித்தது.

''அண்ணன் சத்தம் தான் கேட்குது!'' என்றான் பழனி. எல்லோரும் காதைத் தீட்டிக் கொண்டார்கள். பேச்சுக் குரல் காற்றில் நெருங்கி வந்துகொண்டிருந்தது. ''அண்ணன் குரல் தான்'' என்று சொல்லியவாறே வேலப்பன் சாடி எழுந்தான். மூன்று பேர்களும் குரல் வரும் திசையை நோக்கி ஓடினார்கள். கட்டுப்படுத்த முடியாத ஆதங்கம், ஆவல், நெஞ்சுத் துடிப்பு!

இரண்டு கூட்டமும் நெருங்கிற்று.

''என்னாச்சு? ... தண்ணி கெடக்கா?'' வேலப்பனுக்கு ஸ்பஷ்டமாகப் பேச முடிய

வில்லை. நெஞ்சு முரசடித்தது.

காளியப்ப பிள்ளை நிதான மாகச் சொன்னான்.

''தண்ணி கெடக்குது. நெசந் தான்.''

''சபாஷ்!'' என்று உரக்கக் கூவிவிட்டுத்துள்ளினான் பழனி. காரிருளில் எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தவர்களின் பற்கள் பளிச்சென்று தெரிந்தன.

''தண்ணி இப்பம் வந்திருமில்லெ! நாம் வீட்டுக்குப்போய் மம்மட்டியை எடுத்திட்டு வந்துருலாம், வாங்க'' என்றான் வேலப்பன்.

''தண்ணியை நமக்குத் தர முடியாதாம்!'' என்றான் ஆறுமுகம்.

''என்ன ? தரமுடியாதா?''

பலர் வாயிலிருந்து ஒரே கேள்வி வெடித்தது.

''ஆமா, தர முடியாதாம்.''

''ஏன்? தந்தா என்ன கொள்ளையாம்?''

''தர முடியாதாம். சொட்டுத் தண்ணி கூட தரமுடியாதாம்!''

''ஏனும் ?''

''...............''

''ஏன்னு கேக்கறேன் ?''

''.......................''

''ஏய், ஏன்னு கேக்கறேன், சொல்லேன். ஏன்னு ?''

''.......................''

சுசீந்திரம் கோயிலில் திருவாசம் புரியும் தாணுமாலையர் சக்தி கொண்டவர். திருமூர்த்தியின் திரு அவதாரம். அந்தப்பக்கத்தில் செல்வாக்கும், மதிப்புமுள்ளவர்மேலும்பெரிய பண்ணை. தேரூர்ப்பற்றில் நூறு கோட்டை விதைப்பாட்டுக்கு மேல் இருந்தது. தேர்த் திருநாள் என்றால் ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடும். சித்திரை மாதம் தெப்பத்திருவிழா. அந்தப் பிராந்தியத்திலேயே அவ்வளவு கூட்டம் வேறு எந்த விசேஷத்திற்கும் திரளாது. பூக்களால் பிரமாதமாக அலங்கரித்து. ஒளியில் ஜகஜ்ஜோதியாகத் திகழும் தெப்பத்தில், ஸ்வாமி குளத்தைச் சுற்றிச் சுற்றி வருவார்; ஜலக்கிரீடை செய்வார்.

தெப்ப விழா நெருங்கிவிட்டது. ஆனால் அங்கும் குளத்தில் தண்ணீர் கிடையாது. ஸ்வாமியின் சொந்தத் தேவைக்கான, ஜலக்கிரீடைக்கான குளமும் வறண்டிருக்கிறது. என்ன அநியாயம்!

குளத்தில் ஜலம் இல்லையென்று தெப்ப விழாவை முடக்கிவிட முடியுமா? தெய்வ தோஷம் கிட்டவா ?

மேற்படி விஷயத்தை சுசீந்திரம் தேவஸ்தானம் அரசாங்கத்தின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வந்து விட்டது. தெப்பத்திற்குத் தண்ணீர் வேண்டுமே. என்ன செய்வது? அதற்கு ஒரே வழி, இருக்கிற தண்ணீரை மறைத்து வைப்பது தான். இந்த விஷயம் பரம ரகசியமாக இருக்கவேண்டும். ஏனென்றால் தெய்வத்திற்காக ஒதுக்கி வைத்திருக்கும் தண்ணீரையும், வயலுக்கு விடுங்கள் என்று சொல்ல நீசர்கள் கூச மாட்டார்கள். எப்படி? வயலுக்கு ஜலத்தைக்கொடுத்து விட்டு தெப்பவிழாவை முடக்கி விடவேண்டுமாம்! இந்தப்புத்தி கெட்ட குழந்தைகளைக் கடவுள் தான் காப்பாற்றவேண்டும்!

பட்டப்பகலில் அணையைத் திறந்துவிட்டால் தண்ணீர் குளத்திற்கு வந்து சேரவேண்டாமா? வெளிக்குத் தெரியாமல் விஷயம் நடந்தேற வேண்டும். கடைசியில் ஒரு முடிவு ஏற்பட்டது. தெப்பத் திருவிழாவுக்கு முந்திய நாள் அர்த்த ராத்திரியில் ரகசியமாக அணையைத் திறந்துவிட்டு விடுவது! காலையில் குளம் நிறைந்து விடும். இரவில் தெப்பத் திருவிழா!

அன்று இரவுதான் வேலப்பனும் கூட்டாளிகளும் கொண்ட, கடைசி நம்பிக்கையிலும் மண் விழுந்தது; திரிசங்கு சொர்க்கத்தில் விழி பிதுங்க நின்றுகொண்டிருந்தார்கள். தண்ணீரை என்ன செய்யப்போகிறார்களென்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்லவில்லை. இருந்தாலும் விஷயம் அங்கு வேலைபார்க்கும் வேலையாள் மூலம் வெளியே கசிந்துவிட்டது. துப்பு இவர்கள் கைக்குள் சிக்கி விட்டது.

இப்பொழுது என்ன செய்வது? என்ன செய்ய முடியும்?

வேலப்பன் திடமான குரலில் சொன்னான்.

''வீட்டுக்குப்போயி எல்லோரும் மம்மட்டியை எடுத்திட்டு வாங்க!''

''எதுக்காம்?'' என்றார் தாணு மூப்பனார்.

''அதெல்லாம் அப்புறம் சொல்லுதேன். எடுத்திட்டு வாங்க. சட்டுனும்''

''நீ போற வழி எனக்குத் தெரியுதுலே!'' என்றார் மூப்பனார்.

''என்ன வேய், குத்தம்? போற வழியிலெ?''

''லேய், சின்னபிள்ளேகளா வௌயாடாதீங்க. தெய்வ தோஷம் புடிச்சுடும்.''

வேலப்பனுக்கு முகம் சிவந்தது. இருந்தாலும் சாந்தமாக நம்பிக்கைதரும் குரலில் அழுத்தமாகச் சொன்னான்.

''ஓய் மூப்பனுரே. விஷயத்தைத் தெரிஞ்சுக்கிடும். நாங்க கடவுளெ எதுக்கலெ! அது எங்க வேலை இல்லை. தண்ணி தெய்வத்துக்குப் போகக்கூடாதுன்னும் நாங்க சொல்லலெ. நமக்குப் பயிருக்குத் தண்ணி வேணும்னு நாம சொல்லுதோம். எங்கெ போகுதூங்கிற தெப்பத்தி எங்களுக்கு அக்கறை இல்லெ. எங்களுக்கு இல்லாமெப்போகுது. அதுதான் விஷயம். நமக்கு தண்ணியில்லாமெ அடிக்கது எதுவோ, அதைத்தான் நாங்க எதுக்கறோம்.''

இரவு மணி பன்னிரண்டடித்தது.

ஐந்து வாலிபர்கள் வரப்போடு தட்டுத் தடுமாறி நடந்து, கால்வாய் ஓரம் அடைந்தார்கள். ஒருவருக்கொருவர் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. வாயில் நெருப்பில்லை. தோளில் மட்டும் மண்வெட்டியிருந்தது. தலையில் முண்டாசு சுற்றி வேஷ்டியை தார்ப்பாய்ச்சிக் கட்டியிருந்தார்கள். முகத்திற்கு முகம் தெரியாத இருட்டு. வாடைக்காற்று பயிர்களின் தலையைத் தடவிக்கொண்டு வருவதில் ஏற்படும் இன்ப இசை. மரங்களிலிருந்து ஆந்தைகளின் முணுமுணுப்பு. அவ்வப்பொழுது பட்சிகளின் சலசலப்பு. சிறிது நேரத்திற்கெல்லாம், அவர்கள் வயலுக்கு மேல் பக்

கத்தில் மண்ணைத் துரிதமாக வெட்டிப்போட்டு அணைபோட்டார்கள். அதை அழுத்தி, மீண்டும் மண் போட்டு திடப்படுத்தினார்கள். கால்வாய் ஓரம் மல்லாந்து விழுந்துகிடந்த குத்துக்கல்லின் மேல் உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

பொழுது நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் காதைத் திட்சண்யமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். பொழுது ஏற ஏற ரத்தத்திற்கு மட்டும் சூடேறிக்கொண்டு வந்தது. தண் காற்று வீசிற்று. காதோரம் சில்லிட்டது. சில சமயம் இனம் தெரியாத பயமும் தோன்றிற்று. ஆனால் மறு நிமிஷம் அது மறைந்தது.

சலசலப்பு!

தண்ணீரின் சலசலப்பு! தண்ணீர் வருகிறது. தண்ணீர் நெருங்கி வந்துகொண்டிருந்தது. வேலப்பன் வறண்ட கால்வாயினுள் இறங்கி நின்றுகொண்டிருந்தான். காதலி மாதிரி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மயான நிசப்தத்தில் நீர் வரும் சப்தம் சங்கீதமாகக் கேட்டது.

ஏதோ ஒரு சக்தி அவனுள்ளிருந்து கொண்டே வேலப்பனை முன்னால் தள்ளிற்று. பொடிந்த சிப்பிகள் காலைப் பதம் பார்த்தன. அவன் பாதத்தைத்தட்டி விட்டுக்கொள்ளவில்லை.

வேலப்பன் காலில் லேசாகக் குளுமை—தண்ணீர்!

வேலப்பனுக்கு அடிமுதல் முடிவரை மயிர் சிலிர்த்தது. வாயைத் திறந்து கூப்பாடு போட்டான். சப்தம் குதிக்கவில்லை. மறு நிமிஷம் அவனை மீறிய வேகத்தில் உரத்த குரலில் சப்தம் வெடித்தது.

''தண்ணி வந்துடுத்து!''

வெகுதூரத்தில், மலையடிவாரத்திலிருந்து இனம் தெரியாத மனிதன் அந்தச் சந்தோஷச் செய்தியை உலகத்திற்கு அறிவித்தான்.

மறு நிமிஷம் பழனி திக்குச் சியை உரைத்தான். தண்ணீர் மளமளவென்று வருகிறது. ஒளியில், ஒரே நிமிஷத்தில் மடையின் வாயை நிதானித்துக் கொண்டார்கள். கணம் தாமதியாமல் மடையை வெட்டி விட்டார்கள். பிரக்ஞையின்றி ஜலம் வயலில் நுழைந்தது. ஒவ்வொரு வயலிலும் பாய்ந்தது. இனம்தெரியாத பக்கத்து வயல்களையெல்லாம் அவர்கள் திறந்து விட்டார்கள். எல்லா வயலிலும் தண்ணீர் நிறைந்தது...

மறு நாள் காலை, ஊருக்குள் ஒரு இடி வண்டி புகுந்தது. இடி வண்டி என்றால் தெரியுமா? ஒரு வண்டி. அதனுள் ஆயுதபாணிகளாக, காக்கி உடை போட்டுக் கொண்டு சிலர் இருப்பார்கள். அவர்களுக்கு ஏழைகளை இடிக்கவும், அடிக்கவும், உதைக்கவும் அதிகாரமுண்டு.

அவர்கள் ஊருக்குள் பிரவேசித்து, ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி, குற்றவாளிகளை இழுத்துக்கொண்டு வந்தார்கள். வேலப்பன், பழனி, ஆறுமுகம், காளியப்ப பிள்ளை எல்லோரும் போலிசாரின் கைக்குள்!

இடிவண்டிக்கு முன் கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும்

அங்கு கொண்டு வரப்பட்டார்கள். அந்தக் கூட்டத்தில் வேலப்பன், பழனி கூட்டாளிகளின் தாயும் தகப்பனும், மனைவி குழந்தைகளு மிருந்தார்கள். முறுக்கிய மீசையும் தொப்பியுமாக, ஆஜானுபாகுவாய் ஒருவர் வண்டிக்குள்ளிருந்து இறங்கி வந்தார். "இவங்க தான் ஆசாமிங்களா?" என்று அதிகார தோரணையில் கேட்டார். "ஆமாம்" என்று பதில் கிடைத்தது.

அவர் சிறிது நேரம் வேலப்பனின் முகத்தையே கூர்மையாக, கண் இமைக்காமல், முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். திடீரென்று அசுர பலத்துடன் வயிற்றில் ஆழமாகக் குத்தி, நாடியை மறுகையால் அலக்காகத்தள்ளி, காலையும் தட்டி விட்டார். வேலப்பன் "ஐயோ" என்று பயங்கரமாக அலறிக் கொண்டு கீழே சுருண்டு விழுந்தான். மண்ணில் தலையை முட்டி முட்டிப் புரண்டான்; சக்கர வளையம் சுற்றினான். கூட்டத்திற்குள்ளிருந்து நெஞ்சைப் பிளக்கும் அலறல் கேட்டது. மறு நிமிஷம் வேலப்பனின் தாய் கீழே விழுந்தாள். அவர் அடித்த அடியின் வேதனையை அவளும் அனுபவித்திருப்பாளோ? பழனி, ஆறுமுகம் போன்றவர்களுக்கும் படபட வென்று தொடர்ந்து அடிவிழுந்தது. மிருகத்தனமான உதை. பூட்சுக்காலால் நெஞ்சில் மிதித்தார்கள். கீழே குனிய வைத்து முட்டு எலும்பால் முதுகில் குத்தினார்கள். தலைமயிரை கையால் அள்ளிப்பிடித்து உசுப்பிக் கொண்டு, இரண்டு கன்னத்திலும் மாறி மாறி அறைந்தார்கள்.

கூட்டத்திற்குச் சூடேறிவிட்டது. அவர்கள் ஊர்வாசிகளல்லவா? அவர்கள் சுகதுக்கங்களில் பங்கெடுத்தவர்களல்லவா? எங்கிருந்தோ ஒன்றிரண்டு கற்கள் போலிசு லாரியின் மீது விழுந்தன; சிப்பாய்கள் மீது விழுந்தன. இன்ஸ்பெக்டரின் தொப்பி கீழே விழுந்தது. மறு நிமிஷம் அவர் கூப்பாடு போட்டு உத்தரவு கொடுத்தார். ஜவான்கள் கழியால் கூட்டத்தைத் தாக்கினார்கள். கூட்டம் வெருண்டு ஓடிற்று. காசநோய்க்காரர் ஒருவரும், எலும்பாடிப்போன கிழவியும், வேடிக்கை பார்த்து நின்ற சிறு பெண் குழந்தையும் அடியால் தாக்கப்பட்டார்கள்.

கீழே விழுந்து கிடந்த குற்றவாளிகளைப் போலீஸ்படை லாரியில் தூக்கிப் போட்டுக் கொண்டு, புறப்பட்டது. லாரி ஊரைச் சுற்றிப் போகிற பொழுது, அடிபட்டு அவல நிலையிலிருந்த வேலப்பனின் கூட்டாளிகள் சிரமப்பட்டு எழுந்திருந்து, லாரியின் வலை வழியே தங்கள் வயல்களைப் பார்த்தார்கள். பூர்ண திருப்தியில், எக்களிப்புடன் தலையாட்டியவாறே, முற்றிய கதிர்கள் வீர வணக்கம் சொல்லி அவர்களை வழியனுப்பி வைத்தன. ★

> கதைகேட்பதும் கதைசொல்லுவதும் தொன்று தொட்டு வந்த பழக்கம். 'ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான்' என்று ஆரம்பிக்கும் இளமை மாருத கிழக் கதைகள் முதல் இன்று இருக்கும் எழுத்தாசிரியர்களின் கனவுகளான சிறு கதைகள் வரை எல்லாம் மனித உள்ளத்தின் அடைய முடியாத ஆசைகளின் எதிரொலி. —"புதுமைப்பித்தன்"

★ இந்தியச் சிறுகதை

# பழிக்குப்பழி



கே. ஏ. அப்பாஸ்

சிவப்பும் மஞ்சளும்! — மஞ்சளும் சிவப்பும்! — இந்த இரு நிறங்களும் அவரை இரவு பகலாய் வாட்டி வதைத்து வந்தன.

சிவப்பு — புத்தம் புதிய மனித ரத்தம் போன்ற சிவப்பு!

மஞ்சள் — செத்துப் போன மனித முகம் போன்ற மஞ்சள்!

சிவப்பு, மஞ்சள், சிவப்பு! இந்த இரு நிறங்களின் குமிழிகள் எந்நேரமும் அவரது மனக்கண்களில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சிவப்பு—மஞ்சள், மஞ்சள்—சிவப்பு நிறங்கொண்ட ஒளிக்கதிர்கள் ஏதோ ஒரு அபூதமான அதிசயமான சூரிய வட்டத்திலிருந்து பிறந்து அவர் கண்களில் விழுந்து மோதுவது போலவும், அந்தக் கதிர்கள் அவரது மூளையின் முகுளத்தலம் வரையிலும் உள்ளுருவி ஊடுருவிப் பாய்ந்து உறுத்துவது போலவும், கண்ணுக்குத்தெரியாத அந்தச் சிவப்பு, மஞ்சள் நிறங்கொண்ட கிரணங்கள் கூரிய ஊசிகளைப்போல் அவரது உடம்பு முழுவதையும் குத்தி வருத்துவது போலவும் அவருக்குத் தோன்றியது.

இரவானாலும், பகலானாலும், தூங்கினாலும், விழித்திருந்தாலும், நடந்தாலும், உட்கார்ந்திருந்தாலும், எங்கும் எப்போதும் எந்நேரமும் அந்தச் சிவப்பு மஞ்சள், மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் அவர் மனக்கண்முன்னால் தழற்பிழம்புகளாக நடனமாடின; ரௌரவ நகரத்திலிருந்து எழுந்து வந்த ராக்ஷஸ மிருகமொன்றின் அக்கினிப் பசி கொண்ட அழல் நாக்குகளைப் போல் அந்த வர்ணங்கள் சுழன்று திரிந்தன; மரக்கட்டைகளுக்குப் பதிலாக, மனிதப் பிணங்களையே குவித்துப்

போட்டு எரித்து, குளிர்காயும் ஒரு பூதபைசாசத்தின் கணப்புத் தீயைப்போல், அந்த நிறங்கள் அவரது கண்களை உறுத்தின. ஆயிரம் பிரேதங்களை ஒன்ருக அடுக்கி எரிக்கும் ஒற்றைச் சிதை நெருப்பைச் சுற்றி, லட்சோப லட்சக்கணக்கான கூளிப்பேய்க் கணங்கள் வட்டமிட்டுக் கூத்தாடிக் குலவை யிடுவது போலவும், அவையனைத்தும் ஏக காலத்தில் 'பழிக்குப்பழி! பழிக்குப்பழி!' என்று கோஷமிட்டுக் கொக்கரிப்பது போலவும் அவருக்குத் தோன்றியது.

பழிக்குப் பழி!

பழிக்குப் பழி!

பழிக்குப் பழி!

சிவப்பும், மஞ்சளும்!— மஞ்சளும், சிவப்பும்!—அக்கினிப் பிழம்பாகத் தோன்றும் இந்த இரு நிறங்களும் அவரது உடலிலும் உள்ளத்திலும் ஆத்மாவிலும் சர்வவியாபகமாக நிறைந்து நின்றன. அருணோதயப் பொழுதின் செக்கர் வானத்திலும், அந்தி மயக்கத்தின் மஞ்சள் வெயிலிலும் அவர் அந்த நிறங்களின் ஜ்வாலையைத்தான் கண்டார். அவரது உடம்பின் ரத்த நாளங்களிலெல்லாம் ரத்தத்துக்குப் பதிலாக அக்கினிக் குழம்பே பிரவகித்து ஓடியது. மனிதாம்சங்களையே தாம் இழந்து விட்டதாகவும், நரக வாயிலிருந்து வெளிப்பட்ட ஏதோ ஒரு பூத பைசாசமாகவே தாம் மாறிவிட்டதாகவும் அவர் பலமுறை தம்முள் தாமேஉணரத் தொடங்கினர்.

ஹரிதாஸ் புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டார் என்றுதான் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அவர் தம் நண்பர்களையும் இன பந்துக்களையும், யாரையுமே சந்திக்க விரும்பவில்லை. அவர்களோடு பேசவும் விரும்பவில்லை. யாருடனும் பேசாமல், தன்னந்தனியே தம்முள் தாமாக வாழ்வதைக்கண்டுதான், அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று அவர்கள் நினைத்தார்கள். பைத்தியம் பிடிக்கவில்லை யென்ருல் அவர் ஏன் ஒருவனுடனும் பேசாதிருக்கவேண்டும்? அவருக்கெதிரில் அமர்ந்து யாரேனும் சிலர் எந்த ஒரு விஷயத்தைப் பற்றி விவாதித்துக்கொண்டிருந்தாலும், அவரிடம் எவ்விதச் சலனமும் ஏற்படவில்லை. கல்லால் அடித்துவைத்த சிலையைப்போல், செத்து விறைத்துப்போன சவத்தைப்போல், குருடாய், செவிடாய், ஊமையாய்ப் போய்விட்ட ஜென்மத்தைப்போல் அவர் நிச்சலனமாயிருந்தார். எனினும் சந்தர்ப்ப வசமாக, அந்த மனிதர்களின் பேச்சு வகுப்புக் கலவரங்களையும், கோரக் கொலைகளையும் பற்றித் திரும்பி விட்டதென்ருல், உடனே அவருடைய கண்களில் கோபாக்கினியும், குரோத வேட்கையும் கொதித்து ஜ்வலிக்கும். அவர் வாய்திறந்துபேசாவிட்டாலும் கூட, சிவந்து கனன்ற அந்தக் கண்கள் ஆங்காரத்தோடு கோஷமிட்டுக் குமுறுவதுபோல் தோன்றும்.

பழிக்குப் பழி! பழிக்குப் பழி! பழிக்குப் பழி!

பஞ்சாப் மாகாணம் எல்லைப் பிரிவினையால் இருவேறு கூறுகளாக்கப்பட்டு, உள் நாட்டுக் கலவரம் என்னும் பயங்கரமான நெருப்புக் காளவாய்க்குள் தூக்கியெறியப்பட்ட காலத்தில், லயால்பூர் என்னும் நகரத்தில் ஹரிதாஸ் மிகவும் பிரபலமான வக்கீலாக வாழ்ந்துவந்தார் என்றும், பின்னர் நடந்த வகுப்புக் கலவரத்தின்போது நடந்த கொலைக் கூத்தில் அவரது குடும்பமே சர்வநாசமாகி விட்டது என்றும் லயால்பூரிலிருந்து வந்துள்ள அகதிகள் பேசிக்கொண்டார்கள். ஆனால், அந்த வகுப்புக் கலவரம் ஓய்ந்து பத்து மாதங்கள் கடந்துவிட்டன. காலம் எனும் சிறந்த வைத்தியன் அந்தப் பயங்கர நாட்களைப் பற்றிய நினைவால் மக்கள் மனத்தில் ஏற்பட்டிருந்த புண்களையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக ஆற்றிவந்தான். மேலும், ஹரிதாஸின் மனைவியும் மகளும் எந்தச் சமயத்தில் எப்படி உயிரிழந்தார்கள் என்பது பற்றி அந்த அகதிகளில் யாருக்குமே நிச்சயமாகத் தெரியவில்லை. தங்கள் கற்பையும் கௌரவத்தையும் காத்துக்கொள்வதற்காக எத்தனையோ மாதர்கள் ஆற்றில் விழுந்து உயிர் துறந்தார்களே, அதுபோல் அவர்களும் உயிரைப் பரித்தியாகம் செய்தார்களா, அல்லது அவர்கள் இருவரும் வெந்து குமைந்த அவர்களின் வீட்டோடு எரிந்து சாம்பலானார்களா, அல்லது வகுப்பு வெறியர்களின் கொலைவாளுக்கு இரையாகி மாண்டார்களா என்ற விவரமெல்லாம் யாருக்கும் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் இருவரும் மரணமுற்ற அலங்கோலத்தைப்பற்றி ஹரிதாஸ் யாரிடமும் வாய்விட்டுச் சொல்லவில்லை; அவருக்கு யாரிடமும் நம்பிக்கை இல்லை.

ஹரிதாஸ் உண்மையில் பைத்தியத்துக்கு ஆளாகவில்லை; தமக்குப் பைத்தியமேனும் பிடித்திருக்கக் கூடாதா என்று அவர் பலமுறை விரும்பியதுண்டு; எனினும் அவருக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. பைத்தியமாக மாறியிருந்தாலாவது கடந்துபோன சம்பவங்களையெல்லாம் அவரால் மறந்திருக்க முடியும். ஆனால் இப்போதோ அவர் மனத்தில் எல்லா விஷயங்களும் எல்லா விவரங்களும் பசுமரத்தாணிபோல் பதிந்துபோயிருந்தன. அவரது வீடு எவ்வாறு சூறையாடப் பட்டது, எப்படிச் சிவந்து குமைந்து சாம்பல் மேடாயிற்று, அவரது மனைவி எப்படி ஆற்றில் குதித்து உயிரை மாய்த்துக்கொண்டாள், அவரது நண்பர்களும் பந்து ஜனங்களும் எவ்வாறு கொலையுண்டு மாண்டார்கள் என்ற எல்லா விவரங்களும் அவர் மனத்தில் பதிந்து படிந்திருந்தன. ஆனால், எப்போதாவது அவர் தம் மகள் ஜானகியைப்பற்றி எண்ணும் போது மட்டும் அவரது மூளைத்தலத்துள் ஏதோ உளுக்கிச் சுளுக்குவது போல் இருந்தது. தொடர்பிழந்துபோய், முன்னுக்குப்பின் முரணாகக் காட்டப்படும் ஏதோ ஒரு சினிமாப் படத்தைப்போல், அவரது மனத்திரையில் பற்பல விதமான பயங்கர சித்திரங்கள் வரி

சையாகத் தோன்றி மறைந்தன.

சித்திரங்கள். அழகிய சித்திரங்கள். பயங்கர சித்திரங்கள்....

ஜானகி — பதினேழு வயதே நிரம்பிய பருவக்குமரி ஜானகி. தாயின் செல்வக் குழந்தையாகவும், தந்தையின் கண்ணின் கருமணியாகவும் விளங்கிய ஜானகி.

ஜானகி—மெல்லிய ரோஜா இதழைப்போன்று செவ்விய நிறம் அமைந்த மேனி; குவளை மலர்களையும் நாணித் தலை கவிழச் செய்யும் அழகிய வட்டக் கருவிழிகள்; தொட்டால் ஒடிந்து விழுந்து விடுமோ என்று ஐயுறும் வண்ணம் மென்மையும் ஒசிவும் நிறைந்த மெல்லிய பூங்கொடி உடல். லயால்பூரிலுள்ள யுவதிகளிலேயே அவள்தான் அறிவில் சிறந்தவள்; அழகில் ராணி.

பேதைமையும் பேரழகும் நிரம்பித் ததும்பும் ஜானகியின் திருமுக மண்டலம்.

பின்னர்—உதட்டின் நெளிப்பிலே பேய்ச்சிரிப்பும், கண்களிலே காமவெறியும் கொண்ட சில பயங்கரமான, அவலட்சணமான கோர முகங்கள்.

சூரிய ஒளியிலே மின்வெட்டிப் பளபளக்கும் கூரிய கத்திகளின் ஒளிவீச்சு; துப்பாக்கி முனைகளின் இருண்டு குமைந்த குருட்டுக் குழாய்க் கண்கள்.

அந்தப் பயங்கரமான பைசாச முகங்கள் மெல்ல மெல்ல, நிதானமாக, அடிமேல் அடிவைத்து ஜானகியை நெருங்குகின்றன.

அன்று தம் மகளின் உயிருக்காக மடிப்பிச்சைகேட்டு மன்றாடிய அந்த அவலக் குரல், பத்து மாதங்களுக்குப்பின் இன்றுங்கூட, மீண்டும் ஹரிதாஸின் செவிகளில் தெள்ளத் தெளிவாக எதிரொலித்து விம்மியது.

"என்னைக் கொன்று விடுங்கள்! என் மகளை மட்டும் விட்டு விடுங்கள்!"

மீண்டும் அந்தப் பயங்கர உருவங்கள் ஜானகியை நெருங்குகின்றன.

"இன்றே நான் முஸ்லிம் ஆகிவிடுகிறேன். என் மகளும் முஸ்லிம் மதத்தைத் தழுவிவிடுவிடுவாள். தயவுசெய்து அவளை ஒன்றும் செய்யாதீர்கள்!"

அந்தக் கொடிய, குரூர முகங்களில் எந்தவிதப் பரிவுணர்ச்சியும் பிரதிபலிக்கவில்லை. காமாந்தகார வேட்கை நிறைந்த அந்த மிருகங்களின் கண்கள் அவளை நோக்கி நெருங்கிக்கொண்டேயிருந்தன. தனது வசிய சக்தியால் ஸ்தம்பிக்கச் செய்து கட்டுப்படுத்திய இரைப்பிராணியை நோக்கி மெல்ல மெல்லச் செல்லும் நாக சர்ப்பத்தைப்போல் அந்தக் கண்கள் அவளை நெருங்கின.

"என் மகள் பருவயுவதி; அழகி. உங்களில் யாரேனும் ஒருவர் அவளை மதம் மாற்றி மணந்து கொள்ளுங்கள். தயை செய்து அவள் உயிரை மட்டும் பறிக்காதீர்கள்!"

அந்தக் கோர முகங்களிலெல்லாம் மகா கோரமான ஒரு முகம் தோன்றியது. பாசி படிந்த மஞ்சள் நிறப் பசிப்பற்கள், காமாக்கினி கொதிக்கும் மிருக வெறிக் கண்கள், பைசாச உத்வேகத்

தால் சிலிர்த்துக் குத்திட்டு நிற்கும் கரிய தாடி முதலியன கொண்ட அந்த முகம் ஜானகியை நெருங்கியது. அந்தக் குரூர முகத்துக்கும், அழகிய மென்மையான மலர்போன்ற ஜானகிக்கும் இடையே சிறிது தூரமே இருந்தது. பிறகு..........பிறகு, ஹரிதாஸினல் தம் மகளைப் பார்க்க இயலவில்லை. கன்னங்கறுத்த, அவலட்சணமான ஒரு கொடிய மேகம் சந்திர மண்டலத்தை மூடி மறைப்பது போல் தோன்றியது. அந்த மனித மிருகத்தின் கட்டுப்பாடற்ற காட்டுமிராண்டித்தனத்தின் காலடியில், ஜானகியின் புனிதமான பேதைமை அறைபட்டு மாள்வதற்கு முன்னே, ஹரிதாஸ் தம் மகளின் முகத்தை எறிட்டுப் பார்த்தார். ஜானகியின் அந்த முகத்தில், அந்தக் கண்களில்தான் எத்தனை உணர்ச்சிகள்! பயபீதி நிறைந்த விபரீத பாவம், வெறுப்பு, வெருட்சி, கெஞ்சக் கலவரம், நிராதரவுணர்ச்சி, மானப் பிச்சை கேட்டு மௌனமாக மன்றாடும் பரிதாபம், மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள இயலாது என்ற உணர்வினல் ஏற்பட்ட உள்ளக்குமைவு—சகல உணர்ச்சிகளும் அந்தக் கண்களில் கொந்தளித்தன; குழம்பிக் கலந்து பிரதிபலித்தன. பிறப்பளித்த தந்தையோ எதுவும் செய்ய இயலாதவராகமரத்தோடு மரமாய்க் கட்டப்பட்டுக் கிடக்கிறார். தம் மகளுக்கு இழைக்கப்படும் அநீதியை, அவமானத்தை, அலங்கோலத்தைக் கண்ணால் கண்டும்தடுத்து நிறுத்த இயலாதவராக, உயிரோடு உணர்வோடு கட்டப்பட்டுக்கிடக்கிறார். அவரால் இந்தக் கோரக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. அவர் தம் கண்களை இறுக மூடிக் கொள்கிறார்........அந்தப் பயங்கர சம்பவத்தைப் பற்றிய நினைவு எழும்போதெல்லாம் ஹரிதாஸ் தம்மையும் அறியாமல் தம் கண்களை இறுக மூடிக்கொண்டார்.

'என்காதுகளையும்கூட, நான் பொத்திக் கொண்டேனில்லையே; அப்படிச் செய்திருந்தால் அந்தக் கோரச் சப்தங்களை, கண்ணல் பார்ப்பதிலும் விடக் கோரமான, கர்ண கடூரமான அந்தக் கூக்குரல்களைக் கேட்காதிருந்திருப்பேனே' என்று அவர் பல முறை அங்கலாய்த்துப் பொருமியதுண்டு. ஆம். கோர சப்தங்கள் தான்! ஜானகியின் ஆடையணிகளை ஈவிரக்கமற்று இழுத்துப் பறித்துக் கிழித்து எறிந்த அந்த சப்தங்கள், காம வேட்கை நிறைந்த அந்த மனித மிருகத்தின் மூர்க்கத்தனமான நெடிய பெருமூச்சுக்கள், ஜானகியின் அழுகை, அலறல்கள், பொருமல் அனைத்தும் ஹரிதாஸின் செவிகளில் இன்றும் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

அவர் தமது கண்களை எவ்வளவுதான் இறுக மூடிக்கொண்ட போதிலும், அவரது மனக்கண் முன்னல் அந்தக் கோர முகங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாகத் தோன்றி மறைந்தன. ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு—ஐந்து முகங்கள்! ஜானகியின் நிராதரவான விம்மலும் பொருமலும் மெல்லமெல்ல மங்கி

மடிந்து, பூரண அமைதி நிலவியது. ஆனால், அந்த நிச்சுவாசப் பேரமைதியோ ரத்தத்தைச் சில்லிட்டு உறையச் செய்யும் அவளுடைய அவலக் கூக்குரலையும் விட, பயங்கரமாயிருந்தது. ஹரிதாஸ் தம் கண்களைத் திறந்து பார்த்தார்.

ஜானகியின் மலர்முகத்தை, மண்ணோடு மண்ணாய் மிதித்து நசுக்கப்பட்ட மலர்போன்ற முகத்தை, வண்ணத்தையும், வாசத்தையும், வாழ்வையும் இழந்த மலர்முகத்தைப் பார்த்தார். வரிசை குலைந்து போயிருந்த அவளது அளகபாரம் புழுதி மூடிக்கிடந்தது. அவளது ரோஜா மலர்க் கன்னங்களில், கொடிய விஷவெறிப் பற்கள் பதிந்து கடித்த குதைக் காயங்கள் தென்பட்டன. அவளது முக மண்டலத்திலிருந்து, அதிலுள்ள ரத்தக் காயங்களிலிருந்து, ரத்தம் கசிந்து வழிந்தது; வெளிறிச் சவமாகி விட்ட அவளது கன்னக்கதுப்புக்களுக்குச் செம்மை தீட்டுவது போல் அந்த ரத்தம் பரவிப் படர்ந்தது. அவளது உடம்பெங்கிலும் கூரிய கொடிய பற்கள் பதிந்து வெட்டிய வடுக்கீறல்கள்; அந்த வடுக்களிலிருந்து ரத்தம் வடிந்தது. கன்னத்தில் மட்டுமல்ல, காதுகளில், மூக்கில், கழுத்தில், திறந்த கோலமாயிருந்த அவளதுஇளம் மார்பகங்களில்—எங்கும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது! அந்த மனிதப் பிசாசு தீட்டிய அந்த ரத்த சித்திரம் ஹரிதாஸின் உள்ளத்தில் எப்போது பார்த்தாலும் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அவரால் அந்தக் காட்சியை மறக்கமுடியாது; அந்தச் செயலை மன்னிக்க முடியாது!

தம் மகளின் உடம்பைத் தகனம் செய்வதற்கு, ஹரிதாஸ் தமது கைகளாலேயே சிதை அடுக்கினார். அந்த மெல்லிய பூவுடலை அக்கினிதேவன் சீக்கிரமே ஆட்கொண்டு சுட்டெரித்தான்; அத்துடன் ஜானகியின் புனிதமான பேதைமையையும், அவள் உடம்பில் வடுப்பாய்ந்திருந்த ரத்தக் காயங்களையும், அவளுக்கு நேர்ந்த துர்க்கதியையும், மான பங்கத்தையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டான். ஹரிதாஸின் கண்களுக்கு இன்றும்கூட அந்தத் தகனக் காட்சி தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அந்தச் சிதையின் தழல் நாக்குகளை அவரது மனக் கண் கண்டறிந்தது. அந்தத் தழற் கொழுந்துகள் அவரது கண் முன்னே நடமிட்டன. சிவப்பு, மஞ்சள்—மஞ்சள் சிவப்புத் தீப்பிழம்புகளாக நடனமாடின. அந்தச் சிதையில் ஜானகியின் உடலுக்குப்பதிலாக, இந்திய நாட்டின் கௌரவமே எரியுண்டு மடிவதாக, மனித குலமே சுடு சாம்பலாவதாக, அன்பு, அனுதாபம், பரிவு, பண்பாடு முதலிய சகல நற்குணங்களுமே வெந்து கருகிப் பொடிந்து புழுதிமண்ணாய்ப் போவதாகத்தான் ஹரிதாஸுக்குத் தோன்றியது.

அந்தத் தகனத்தின் செந்தழற் பிழம்புகள் தணிந்து அவிந்து அடங்கின. ஆனால் ஹரிதாஸின் உள்ளத்திலும் இதய பீடத்திலும்

கொழுந்து விட்டு நின்றெரியும் வஞ்சத்தீ மட்டும் அவியவில்லை. என்றும் அந்த நெருப்பு அவிந்து அடங்கப் போவதில்லை. என்றும் எப்போதும், எந்தக்காலத்திலும் அந்த அக்கினி அழியப்போவதில்லை. ஒரு முஸ்லிம் யுவதியின் திறந்த கோலமாயுள்ள இளம் மார்பகங்களை ஒரு கத்தியால் வஞ்சம் தீரக் குத்திக் கிழித்துக் கொலைபுண்ண வேண்டும் என்ற ஹரிதாஸின் வஞ்சினம் நிறைவேறும் வரையிலும், அந்த நெருப்பு கூம்பிச் சாம்பிக் குமையப் போவதில்லை. அந்த வஞ்சின எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே ஹரிதாஸ், உயிர் வாழ்ந்தார்; அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வரையில்தான் அவர் உயிர்சுமந்து வாழ விரும்பினார். அந்த எண்ணம் நிறைவேறி விட்டால், மறுகணமே அவர் உயிரை விடவும் உறுதி பூண்டிருந்தார்.

பழிக்குப் பழி!
ரத்தத்துக்கு ரத்தம்!

தமது எண்ணத்தைச் சமயம் வாய்க்கும்போது நிறைவேற்றிக் கொள்வதற்காக, ஹரிதாஸ் தமது கோட்டுக்குள் ஒரு கூரிய பிச்சுவாக் கத்தியைப் பத்திரமாக ஒளித்து வைத்திருந்தார். ஆனால், பழி தீர்த்துக் கொள்ளக்கூடிய முஸ்லிம் யுவதியை அவர் எங்கே கண்டுபிடிப்பது? டெல்லி நகரத்திலுள்ள முஸ்லிம்களில் பலர் கொலையுண்டு போனார்கள்; பலர் பயந்தடித்துக்கொண்டு பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்கள்; எஞ்சிமிஞ்சிய சிலரும் முஸ்லிம்கள் வாழும் வட்டாரங்களைவிட்டு வெளியே வரவும் பயந்து கிடந்தார்கள்........தூ! கோழைகள்!

எனினும் ஹரிதாஸிடம் விதி விபரீதமாக விளையாடியது. அகதிகள் சகாய நிதியிலிருந்து ஹரிதாஸுக்கு முன்னூறு ரூபாய் பணம் கிடைத்தது. ஆனால் அவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு அவர் என்னதான் செய்வது? அவருக்கு வீடில்லை; வாசலில்லை; பெண்டு பிள்ளைகளும் இல்லை. மேலும் தமது உணவு உடை பற்றிய கவலைகளும் அவருக்கு இல்லை. வாழ்க்கையிலேயே அவருக்குப் பிடிப்பு இல்லாத போது, உணவையும் உடையையும் பற்றி அவர் ஏன் கவலை கொள்ளவேண்டும்? எனவே இவ்வளவு பணத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது? இந்தக் கேள்வியைப் பற்றியே சதா யோசித்துக் கொண்டு, ஹரிதாஸ் புது டெல்லியிலும், பழைய டெல்லியிலுமாகச் சுற்றித் திரிந்தார்.

கன்னாட் பிளேஸிலிருந்து, சாந்தினி சவுக் வரையிலும், சாந்தினி சவுக்கிலிருந்து ஜம்மா மசூதிவரையிலும் அவர் அலைந்து திரிந்தார். ஜம்மா மசூதியின் வெள்ளைக் கலசங்களையும், நீண்டுயர்ந்த ஸ்தூபிகளையும் அவர் கண்ட போது அவரது மனத்திலுள்ள வஞ்சின எண்ணம் தலை தூக்கியது; முஸ்லிம்களை, சகல முஸ்லிம்களையும் பழிதீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. ஜம்மா மசூதியிலிருந்து தார்கஞ்சுக்கு நடந்தார். ராஜகாட்

டுக்கும் சென்றார். ராஜ கட்டத்திலுள்ள மகாத்மா காந்தியின் சமாதித் தோற்றம்கூட அவரது இதயத்தை உருக்கி உருக்குலேத்துக்கொண்டிருக்கும் வஞ்சத் தீயை அணைக்கவில்லே; நீறச்செய்யவில்லே. 'காந்திஜி ஒரு மகான்; ஒரு மகாத்மா. நானே சாதாரண மனிதன். அவரால் தமது எதிரிகளே மன்னித்தருள முடியும். என்னல் இயலாது' என்று அவர் தமக்குத்தாமே எண்ணிக்கொண்டார். பின்னர் அங்கிருந்து எட்வர்ட் பார்க்குக்கு வந்தார். அங்கு ஒரு கற்குதிரைமீது கல்லாலான ராஜா சவாரி செய்து கொண்டிருந்தார். அந்தச் சிலேயைப் பார்த்ததும், "மாட்சிமை தங்கிய மன்னர் பிரானே! நீங்கள் போய் விட்டீர்கள்; எங்களே இந்த அலங்கோலத்துக்கு ஆளாக்கிவிட்டு விட்டுப் போய்விட்டீர்கள்!" என்று மெல்ல முணுமுணுத்துக் கொண்டார் ஹரிதாஸ்.

இரவும் வந்து விட்டது. கால் போன திசையெல்லாம் திரிந்து கடைசியாகத் தமக்குப் பழக்கமற்ற ஒரு புதிய இடத்துக்கு வந்து சேர்ந்தார் அவர். அந்த இடத்தின் வலது சாரையில் அவரைப் போன்று வீடு வாசல் சொத்துச் சுகத்தை இழந்து வந்த பல அகதிகள் தெரு வோரமுள்ள நடைபாதையில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஸெண்ட் வாசனே, வியர்வை நாற்றம், ஈரமண்ணின் வாடை, ஜலபாதைத் துர்க்கந்தம், மலர்வாசம் பெட்ரோல், பினைல் முதலியவற்றின் நாற்றம் முதலிய பற்பல விதமான கந்தங்கள் அந்த இடமெங்கும் நிரம்பிக் கனத்துக் கவிந்து நின்றன. அந்த இடத்தின் இடது சாரையில் வரிசை வரிசையாகப் பல கடைகள் இருந்தன. மிட்டாய்க் கடைகள், பால் கடைகள், ஹோட்டல்கள் முதலிய பல் வேறு கடைகள் இருந்தன. அவற்றில் சில மூடப்பட்டு விட்டன; சில மூடப்படாமல் திறந்திருந்தன. ஆனல், அந்த வழியாகச் செல்லும் ஒவ்வொருவனும் தலே நிமிர்ந்து மேலேயுள்ள மாடிகளிலுள்ள முன் மாடங்களின் மீது கண்ணேட்டம் விட்டவாறே சென்று கொண்டிருந்தான். அந்த மாடங்களில் பற்பல விளக்குகள் கவர்ச்சிகரமாகக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. வானமண்டலம் எங்கும் சங்கீதம் பரவி நின்றது. இது என்ன இடம்?

"பாபுஜி!"

எண்ணெய் வழியும் முகங் கொண்ட ஒரு மனிதன் விஷமம் நிறைந்த ஓரக்கண்ணல் ஹரிதாஸைப் பார்த்தவாறு அவரிடம் நெருங்கி வந்து பேசினன்: "பாபுஜி!நல்லசரக்காய் கொண்டு போய்க் காட்டட்டுமா?"

ஹரிதாஸினல் அவனது பேச்சைப் புரிந்துகொள்ள இயலவில்லே; எனவே அவர் மேலும் நடந்துசெல்லலானர். ஆனல் அந்த மனிதனே அவரை அவ்வளவு லகுவில் தப்பவிட விரும்பவில்லே. அவன் அவரது வழியையே மறித்துக்கொண்டான்! "பாபுஜி!

நீங்கள் பார்த்து உங்களுக்குத் திருப்தியில்லை யென்ருல், எனக்குச் சல்லிக்காசு தரவேண்டாம்!'' என்ருன், அவன். அவனது வார்த்தைகளில் இருந்த அர்த்த பாவத்தைவிட, அவனது முகத்தில் தோன்றிய அர்த்த பாவத்தின் மூலம் ஹரிதாஸ் விஷயத்தைப் புரிந்து கொண்டார்.

"நான் ஒரு அகதி, தம்பி!'' என்ருர் ஹரிதாஸ்.

"பாபுஜி! நானும் கூட ஒரு அகதிதான். நீங்கள் ஒரு அகதியானல், உடனே என்னுடன் வாருங்கள். இங்கு பக்கத்திலே ஒரு முஸ்லிம் யுவதி இருக்கிருள். வாருங்கள், காட்டுகிறேன். பாகிஸ்தானில் நீங்கள் படாத பாடு பட்டிருப்பீர்கள். அதற்கெல்லாம் மாற்ருக, இங்கே ஒரு பாகிஸ்தானி அழகு ராணியையே அனுபவிக்கலாம். வாருங்கள்!''

முஸ்லிம் யுவதி! பாகிஸ்தானி அழகு ராணி!

சிவப்பு, மஞ்சள்! — மஞ்சள், சிவப்பு! — மீண்டும் வஞ்சத்தீப் பிழம்புகள் அவரது கண்முன்னல் கோர நர்த்தனம் புரிந்தன.

போகின்ற வழியில் அந்த 'மாமா' அவளைப்பற்றி மேலும் பல விவரங்களைக் கூறினன். "அவள் ஒரு அபூர்வமான அழகுக் குட்டி, பாபுஜி! பதினேழு அல்லது பதினெட்டு வயதுதான் இருக்கும்!'' என்று கூறிவிட்டு, பின்னர் மேலும் கீழும் அக்கம் பக்கம் பார்த்தவாறு மெல்லிய குரலில் கிசுகிசுக்கத் தொடங்கினன்: "நாங்கள் அவளை ஜலந்தரிலிருந்து கொண்டு வந்தோம். யாரோ ஒரு பிரமுகரின் மகள், அவள். அவளை இந்தத் தொழிலில் இழுத்துப் பழக்கி விடுவதற்கு எங்களுக்குப் பத்துமாச காலம் பிடித்தது, பாபுஜி!''

'ஜானகி—அவளுக்கும் அதே வயதுதான், இல்லையா? அவளும் ஒரு பிரபல பிரமுகரின் புத்திரிதான். இல்லையா? என்ருலும் கூட, அந்தப் பயங்கரமான கொடிய மிருகங்கள் அணுவளவும் அனுதாபம் காட்டவில்லையே. ஒருவன, இருவரா? ஒன்று இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து—ஐந்து பேராகச் சேர்ந்து அந்த அறியாப்பேதையை, அன்றலர்ந்த மலரை, கன்னியெழிலைப் புழுதியோடு புழுதியாய் மிதித்து நசுக்கி விட்டார்களே! பின் நான் மட்டும் என் கருணை காட்ட வேண்டும்?' என்று எண்ணியவாறே, ஹரிதாஸ் தமது கோட்டுக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார்.

தாசி வீட்டின் வழக்கமான சூழ்நிலை. தரையிலே ஒரு அழுக்கடைந்த வெள்ளைத் துணி விரிப்பு; முகட்டிலிருந்து தொங்கும் லஸ்தர் விளக்குகள்; ஆளுயரமுள்ள இரண்டு நிலைக் கண்ணுடிகள். அம்மைத் தழும்புகள் விழுந்து அவலட்சணமாய்க் காட்சியளித்த பூத சரீரியான நாற்பது வயதுப் பெண் ஒருத்தி ஒரு மூலையில் அமர்ந்து வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை ஓரக்கண்ணுல் கூர்ந்து கவனித்துக்கொண்டும் இருந்

தாள். வீட்டுக் கூடத்தில், வாத்திய கோஷ்டியினர் சுற்றுச் சூழ அமர்ந்து வாத்தியங்கள் வாசித்துக் கொண்டிருந்தார்கள்; அவர்களுக்கு மத்தியில் அமர்ந்து அந்தப் பாகிஸ்தானி மோஹினி பாட்டுப் பாடிக் கொண்டிருந் தாள்.

ஹரிதாஸ் இதுவரையிலும் ஒரு மோஹினியைப் பார்த்ததில்லை; ஆனால் மோஹினிகளைப் பற்றிய வர்ணனைகளைக் கேட்டிருந்தார். அந்தப் பெண் உண்மையிலேயே ஒரு மோஹினிதான்! சந்தேக மில்லை. அவளது நிறம், ஜான கியின் மேனி நிறத்தைக் காட்டி டிலும் கூட, அழகாயிருந்தது. எனினும் அந்த மேனி வண்ணத் தில் அன்னதோஷ குணத்தின் வெண்பசலை புரையோடியிருந் தது. மிகுந்த லாகவமும் நளி னமும் நிறைந்த கொடிமேனி; கண்கள்—அகன்ற வட்டக்கரிய விழிகள்தாம்; எனினும், ஜான கியின் கண்களில் ததும்பிய ஜீவனும் ராஜ களையும் அந்தக் கண்களில் இல்லை. அதற்குப் பதிலாக, அந்தக் கண்களில் நிராதரவுணர்ச்சியின் கரிய நிழல்தான் படர்ந்திருந்தது.

அவள் பாடிக்கொண்டிருந் ததை ஹரிதாஸ் பார்த்தார்; எனினும், அவள் என்ன பாடிக் கொண்டிருந்தாள் என்பதை அவரது செவிகள் கிரகிக்க வில்லை. அந்த அறை முழுவதும் பல் வேறு மனிதர்கள் அமர்ந்திருப்ப தை அவர் கண்டார். எனினும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள், பணக்காரரா, ஏழைகளா, கன வான்களா, காலாடிகளா என் பதையெல்லாம் அவர் கவனிக்க வில்லை. ஒரு மூலையிலே முடங் கியிருந்தவாறு அவர் அந்தப் பாகிஸ்தானி மோஹினியையே வெறித்து நோக்கிக்கொண்டிருந் தார். ஆனால் அவரது கண்களில் காம வெறி பிரதிபலிக்கவில்லை. அதற்குப் பதிலாக பழிக்குப் பழி வாங்கும் வஞ்சின வேட் கையின் சிவப்பு மஞ்சள், மஞ் சள் சிவப்பு நெருப்புப் பிழம் புகள்தான் தோற்றமளித்தன.

மற்றவர்கள் அனைவரும் எழுந்து செல்லும் வரையிலும், அதா வது நடுநிசி வரையிலும் அவர் காத்திருக்க வேண்டும் என்ற விஷயத்தை அந்த 'டாபர் மாமா' முன்கூட்டியே அவரிடம் தெரி வித்திருந்தான். அன்றிரவுக்கு மட்டும் அந்தப் பெண்ணுக்குரிய 'வாடகை'ப் பணம் ரூபாய் இருநூறு என்று பேசி முடிவு செய்யப்பட்டது. மீதமுள்ள நூறு ரூபாய்களையும் அவர் என்ன செய்வது? எப்படிச் செலவழிப்பது? அந்தப் பணத் தால் அவருக்கு ஒரு பிரயோ ஜனமில்லை; ஏனெனில் மறுநாள் கூட அவர் உயிர் சுமந்து இருக்க விரும்பவில்லை. அன்றிரவு தான் அவரது வாழ்நாளிலேயே கடைசி இரவு. மறுநாள் அவர் சகலவற்றிலிருந்தும் விடுதலை பெற்றுவிடுவார். பணத்திடமிருந் தும், பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்திடமிருந்தும், மானிட வாழ்க்கையிலிருந்தும் விடை பெற்று, விடுபட்டு விடுவார். எனவே அவர் தம்மிடமிருந்த

நூறு ரூபாய்களையும், தடவைக்குப் பத்துப் பத்து ரூபாய் நோட்டாக, அந்தப் பாடகிக்குப் பரிசளித்துக் கொண்டிருந்தார். அவளது காலடியில் விழும் பத்து ரூபாய் நோட்டுக்களை அவள் ஒவ்வொரு முறை பொறுக்கும் போதும், அவருக்குச் சலாம் செய்து வணக்கம் தெரிவித்தாள். அவள் அப்படிப் பலமுறை தலைவணங்கிச் செல்வது, அவரது கசந்து கைத்துப்போன ஆத்மாவுக்குத் திருப்தி அளித்தது. முஸ்லிம் பெண்ணொருத்தியைத் தலை குனியச் செய்வதன் மூலம் அவர்தமது மகளுக்கு ஏற்பட்ட தலைக் குனிவுக்குப் பழி தீர்த்துக் கொள்வதாகக் கருதினார். ஆனால் அவரது பழிக்குப் பழிவாங்கும் பெருந்திட்டத்தில், இந்தச் செயல் மிகவும் சிறிதேயாகும்.

இமை தட்டாது நிலைகுத்தி நிற்கும் கண்களோடு, அவர் அந்தப் பெண்ணின் ஒவ்வொரு சிறு அசைவையும், சிறு உணர்ச்சியையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அவள் "தொழிலில்" கைதேர்ந்தவள் அல்ல என்பதை அவரால் கண்டு கொள்ள முடிந்தது. பாடும் போதே கண்களைச் சிமிட்டிக் கொள்வது, கைகளை நளினமாக அசைவுறச் செய்வது போன்ற 'தொழில் ரகசியங்களை' அவள் கையாண்டாலும் கூட, அவற்றை எந்தவித உணர்ச்சியுமற்று யாந்திரீக கதியில்தான் செய்தாள். சாவி கொடுத்து முடுக்கி விட்ட பொம்மை மாதிரிதான் நடந்து கொண்டாள். தாம் ஒரு உயிருள்ள மானிட யுவதியைப் பார்ப்பதற்குப் பதிலாக, மாந்திரீகனின் மந்திர சக்தியால் இயங்குகின்ற ஒரு பிரேதத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு அசூயை உணர்ச்சி ஹரிதாஸின் இதயத்தில் தோன்றியது.

மேலும் அவர் இன்னொரு விஷயத்தையும் கவனித்தார். அவளுக்குப் பணம் தரும் பாவனையில் அவளை எட்டிப்பிடித்துத்தொட்டு விளையாட எவரேனும் முனையும் போதெல்லாம், அவள் தன் கரங்களை மின்சார அதிர்ச்சியுண்டது போல் வெடுக்கென்று பின்னிழுத்துக்கொண்டாள். யாரும் தன்னைத் தொடுவதை அவள் விரும்பவில்லை. எனினும், அவள் முகத்தில் கோபமோ, கசப்போ, வேறு எந்த விதமான உணர்ச்சிகளோ, பிரதிபலிக்கவில்லை. அவளது முகத்திலிருந்து சகல உணர்ச்சி பாவங்களையும் பிழிந்தெடுத்து விட்ட மாதிரி தோன்றியது. எப்போதாவது யாரேனும் ஒரு ரூபாயையோ அல்லது ரூபாய் நோட்டுக்களையோ அவளிடம் கொடுத்தால், அவள் அந்த ரூபாய்களை அங்கு மூலையில் அமர்ந்து கொண்டிருந்த பூத சரீரியான கரிய 'தாய்க்கிழவி'யிடம் அநாயாசமாகச் சுண்டி விட்டெறிந்தாள். அப்போதும்கூட அவள் முகத்தில் எவ்வித உணர்ச்சி பாவமும் தோன்றவில்லை; எனினும் அவள் அந்தப் பணத்தை விட்டெறியும் போது மட்டும், அவளது மணிக்கட்டின் அசைவில் அடிமுடி

காணமுடியாத வெறுப்பு பாவத்தைக் கண்டுணர முடிந்தது. "எடுத்துக்கொள். என்னை இந்தச் சந்தையில் விலை சாட்டி விற்ற பணத்தை நீயே எடுத்துக் கொள். எடுத்துக் கொண்டு தொலைந்துபோ. எடுத்துக்கொள். எடுத்துக்கொள்!" என்று சொல்வதுபோலிருந்தது, அந்தக் கைகளின் பாவம்.

கொதிப்புற்றுக் குமையும் அந்த யுவதியின் பேதைமைத் தன்மை ஹரிதாஸின் மனத்துக்கு எப்படியோ பிடித்துப் போய் விட்டது. அவள் ஒரு கண்ணியமான செல்வந்தர் வீட்டுப் பெண் தான் என்பதை அவளுடைய நடவடிக்கைகள் புலப்படுத்தின. அவளது பாட்டுக் குரலிலிருந்த சுருதி சுத்தமும் வார்த்தைத் தெளிவும் அவள் கல்வியறிவு பெற்றவள் என்பதையும் புலப்படுத்தின. எப்படிப் பார்த்தாலும், ஜானகிக்கு நேர்ந்த அவமானத்துக்கும், அவமதிப்புக்கும் பழிக்குப் பழி வாங்குவதற்கு அவள் ஒரு லட்சிய பலிப் பொருளாகத்தான் தோன்றினாள்.

நடுநிசிக்குள் அங்கு கூடியிருந்த கூட்டம் முற்றும் கலைந்துவிட்டது. அன்றிரவு தனது 'வாடிக்கைப் பேர்வழி'யாக வரப்போகும் ஹரிதாஸைக் கண்ணெடுத்தும் பாராமலேயே, அவள் படுக்கையறைக்குள் சென்று மறைந்தாள். ஹரிதாஸ் தம்மிடமிருந்து இருநூறு ரூபாய் நோட்டுக்களை அங்கு நின்ற 'மாமா'வின் கையில் கொடுத்தார்; அவன் அதை வாங்கி, பூத சரீரியான அந்தத் 'தாய்க்கிழவி'யிடம் கொடுத்தான். அவள் அந்தப் பணத்தை வாங்கி, அந்த நோட்டுக்களை விளக்குக்கெதிரே ஒவ்வொன்றாகத் தூக்கிப் பிடித்து கூர்ந்து சரிபார்த்து எண்ணி எடுத்துக் கொண்டாள். பின்னர் அவள் மனம் நிறைந்த திருப்தி உணர்வோடு, ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அந்த 'மாமா' விடம் நீட்டினாள். அவன் அதைச் சலாம் செய்து பெற்றுக்கொண்டு அங்கிருந்து அகன்று சென்றான். அந்தத் 'தாய்க்கிழவி' பாசிபடிந்து நோய் பிடித்திருந்த தனது ஊத்தைப் பற்களைக் காட்டியவாறு, ஹரிதாஸை நோக்கி கண்களைச் சிமிட்டிக்கொண்டு பேசினாள்: "பாபுஜி! உள்ளே போங்கள். ஆனால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள். இவள் இந்த விவகாரத்துக்கே புதியவள்!"

மறுகணம் ஹரிதாஸ் படுக்கையறைக்குள் சென்றுவிட்டார்.

உள்ளே சென்றதும் அவர் ஜாக்கிரதையாக, தீர்மான புத்தியோடு, கதவைத் தாளிட்டுக் கொண்டார். பின்னர் அவர் அந்த யுவதியை நோக்கி நெருங்கிச் சென்றார். அந்தப் பள்ளியறையிலிருந்த சப்ரமஞ்சக் கட்டிலில் சுவரை நோக்கித் திரும்பியவாறு அவள் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளது சிந்தனைகளைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. ஹரிதாஸைக் கண்டவுடன் அவள் மரியாதையோடு எழுந்து தலைகுனிந்து கண்களைத் தாழ்த்தி நின்றாள். பின்னர் அவள் கீழே குனிந்து அமர்ந்து,

## எழுத்தாளர்களுக்கு!

நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழில் அது இருந்தது இது இருந்தது என்று பழம் பெருமை பேசிக்கொண்டிராமல் எது தேவையோ, அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்கவேண்டும். முத்தமிழ் முத்தமிழ் என்று முழக்கம் செய்கிறார்கள். இசைத் தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டை நூல்களைப் படித்து விட்டு நாம் பெருநாரை பெருங்குருகு என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகிவிடுமா? அந்த நாரைகளும் குருகுகளும் மறைந்து போய்விட்டது. இனி நம்முடைய வலைக்குள் அகப்படப் போவதில்லை. ஒரு ஏழை உண்ணச் சோறும், உடுக்கத் துணியும் இல்லாமல் தவிக்கிறான். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும் கொள்ளுப் பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாயிருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனால் என்ன பயன்?

— நாகர்கோயிலில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டில் கவிமணி தே. வி.

அவரது பாதரக்ஷைகளின் நாடாக்களை அவிழ்க்க முனைந்தாள். அப்படிச் செய்யவேண்டியது அவளுக்கிட்ட உத்தரவாயிருக்கலாம்.

"விடு காலை!" என்று ஹரிதாஸ் கரகரத்துச் சொன்னார். எனினும், ஒரு முஸ்லிம் யுவதி தன் காலடியில் விழுந்து கிடப்பதைக்கண்டு, அவர் மனம் பெரும் திருப்தி அடைந்தது.

"உன் ஆடைகளைக் களைந்து விடு!" என்று உத்தரவிட்டார் ஹரிதாஸ். நடுநடுங்கும் கரங்களோடு, அவள் தன் சேலையை அவிழ்த்து விட்டாள். அவளது உடம்பில் ரவிக்கையும் பாவாடையுமே மிஞ்சி நின்றன.

"இவற்றையும் அவிழ்த்தெறி!"

வெட்க உணர்ச்சி தாங்கமாட்டாமல், அவள் சுவரை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவளது பாவாடையும் தரையில் அவிழ்ந்து விழுந்தது. ஹரிதாஸ் தம்மிடமுள்ள கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

"நான் உன்னை முழு நிர்வாணமாகக் காண விரும்புகிறேன். தெரிந்ததா? இதெல்லாம் சும்மா இல்லை! உனக்காக, நான் இருநூறு ரூபாயாக்கும் கொடுத்திருக்கிறேன். தெரியுமா?"

அந்த யுவதி தன் முகத்தைத் திருப்பினாள். அவரது இதயத்தை இளகச்செய்யும் விருப்பம் கொண்டு, அவள் அவரைப் பரிதாபத்துடன் பார்த்தாள்; அவளது கண்களில் வார்த்தைக்குள் அடைபடாத கழிவிரக்க பாவம் பிரதிபலித்தது. ஒருவேளை அவர் தன்மீது அனுதாபம் கொள்ளமாட்டாரா, தன்னை முழு நிர்வாணமாகக் காண விரும்பும் எண்ணத்தைக் கைவிட மாட்டாரா என்ற நப்பாசையுடன் அவள் கெஞ்சுவது போலிருந்தது.

"ம்! சீக்கிரம்! எனக்கு நேரமில்லை; நான் காத்திருக்கமுடியாது!" என்று ஹரிதாஸ் சத்த

மிட்டார், சட்டைப்பைக்குள் அவரது கை தமது கத்தியின் கூர்மையைத் தொட்டுணர்ந்து கொண்டிருந்தது.

அந்த யுவதி மின்சார விளக்கின் ஸ்விட்ச் இருக்கும் பக்கமாக மெல்ல நகர்ந்தாள்.

"முடியாது!" என்று கூவிக் கொண்டே அவர் அவளை வழி மறித்தார்: "உன்னை நான் இருட்டில் அப்படிச் செய்யச் சொல்லவில்லை. தெரிந்ததா?" ஆம். அவரது மகள் ஜானகி பட்டப் பகலில் பஜார் வீதியில் அலங்கோலத்துக்கு ஆளாகவில்லையா?

அந்தப் பெண் தனது ரவிக்கையையும் களைந்து விட்டாள். இப்போது, அவளது உருண்டு திரண்ட மார்பகங்களின் எடுப்பான வளைவுகளைக் கோடிட்டுக் காட்டும் பாடீஸ் மட்டுமே அவளுடம்பில் இருந்தது.

"இதையும் களைந்துவிடு!" என்று அந்த பாடீஸைச் சுட்டிக் காட்டியவாறே உத்தரவிட்டார் ஹரிதாஸ். அவரது கை கத்தியை தயாராக, கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

அந்த யுவதி மீண்டும் தனது கரிய விழிகளில் நீர்ததும்ப, பரிதாபப் பார்வையோடு அவரைப் பார்த்தாள். ஜானகியும் அந்த இதயமற்ற ஈவிரக்கமற்ற மனித மிருகங்களை அப்படித் தானே பார்த்தாள்! ஆனல் அந்த மனித மிருகங்களோ அவளுக்குக்கிஞ்சித்தும் மனமிரங்கவில்லை! ஆம். அதுபோலவே ஹரிதாஸும் மனம் இளகப்போவதில்லை; கருணைகாட்டப் போவதில்லை.

அந்தப் பெண் தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்

### பொருளாதார நெருக்கடி!

காமன்ஸ் சபையில் நாட்டின் பொருளாதாரப் பிரசினையைப் பற்றி அங்கத்தினர்களுக்குள்ளே காரசாரமான விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. பார்வையாளர் காலரியிலிருந்த ஒருவன் அந்த விவாதத்தை வெகு நேரம் வரையிலும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, திடீரென்று எழுந்து வெளியே வந்தான். வந்தவன் நேராக, தேம்ஸ் நதிப் பாலத்துக்கு வந்து பாலத்தின் கைப்பிடிச் சுவர் மீது ஏறினன்.........

அதைக் கண்ட ஒரு போலீஸ்காரன் அவனிடம் ஓடோடியும் சென்று, "கீழே இறங்குங்கள் ஸார். நீங்கள் இப்படி மனம் ஒடிந்து போகக்கூடாது. வாருங்கள். நாமிருவரும் மனம் விட்டுப் பேசி, ஆகவேண்டியதையோசிக்கலாம்" என்று கூறியவாறு, அந்த ஆசாமியைக் கீழே இறக்கி, வேறிடத்துக்கு அழைத்துச் சென்றான்.

"நாம் எதைப்பற்றிப் பேசுவதாம்?" என்று சலித்துக் கேட்டான் அந்த ஆசாமி.

"எதிர் காலத்தைப் பற்றித் தான்!" என்றான் போலீஸ்காரன்.

பத்து நிமிஷங்களுக்குப் பின்னர் அந்த ஆசாமியும், அந்தப் போலீஸ்காரனும் கையோடு கைகோத்துக்கொண்டு மீண்டும் ஆற்றுப் பாலத்துக்கே வந்து சேர்ந்தார்கள்!............

— ஆர்கனி

கொண்டு, விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். அவளது கண்ணிலிருந்து பொங்கி வழிந்த கண்ணீர் அவளது பாடீஸின்மீது விழுந்து தெறித்தது.

ஹரிதாஸின் வலது கையில் கத்தியின் பளபளப்பு பளிச்சிட்டு மின்னியது; அவளது மார்பைக் கிழிப்பதற்காக, அவர் கையை ஓங்கிய போது அந்தக் கத்தியின் வெட்டிப் பிரகாசித்தது. ஒரு கையால் கத்தியை ஓங்கிப் பிடித்துக்கொண்டு, மறுகையால் அவர் அவளது கைகளை முரட்டுத்தனமாக இழுத்து விலக்கினார். ஜானகிக்கு இழைத்த கொடுமையை அவளே கண்கொண்டு கண்டது போல், தாம் செய்யப்போகும் காரியத்தையும் அந்த யுவதி கண்ணால் கண்டவாறே சாக வேண்டும் என்று அவர் விரும்பினார். இந்த ஒரு கணத்துக்காக, இந்த ஒரே சந்தர்ப்பத்துக்காகத் தான் அவர் பத்துமாத காலமாகத் தவம் கிடந்தார். அவரது கண் முன்னால் அதே சிவப்பு மஞ்சள், மஞ்சள் சிவப்புத் தீப் பிழம்புகள் கொண்டாட்டத்தோடு குலவையிட்டுக் கூத்தாடின.

ஒரு கையிலே கத்தியை ஏந்திப் பிடித்துக்கொண்டு, மறுகையால் தனது பாடீஸை எட்டிப் பிடிக்க நெருங்கும் ஹரிதாஸைக் கண்டவுடன் அந்தப்பெண் திடீரென்று கூச்சலிட்டு விட்டாள்; அவளது கண்களிலும் கொடிய பயபீதி குடிகொண்டு பிரதிபலித்தது. அந்தப் பார்வையில் ஹரிதாஸ் பயங்கர பயபீதியை மட்டும் காணவில்லை. அந்தக் கண்களில் பயமும், வெறுப்பும், நிராதரவுணர்வும், கெஞ்சியிரங்கும் இரக்க பாவமும் கலந்து பிரதிபலித்தன. ஜானகியின் கண்களிலும் அவர் அதே பாவங்களைத் தான் முன்னர் கண்டிருந்தார்.

ஆனால், அந்தப்பார்வை ஜானகியின் உயிரைக் காப்பாற்றவில்லையே!

மின்வெட்டும் வேகத்தில் ஹரிதாஸ் தமது இடதுகையால் அந்த யுவதி அணிந்திருந்த பாடீஸைப் பற்றிப்பிடித்துக்கிழித்தெறிந்தார். அந்த ஒரு கண நேரத்தில், அவர் அதை இழுத்தெறிந்த நேரத்தில் அந்த பாடீஸ் கனமாயிருப்பது போலத் தோன்றியது. அந்த பாடீஸோடு....

ஓங்கிய கத்தி அப்படியே உயரே நிலைத்து மலைத்து நின்றுவிட்டது! மான உணர்ச்சி தாங்க மாட்டாமல், அவர் தம் கண்களை அப்பால் திருப்பிக்கொண்டார்.

அவரது உதடுகளிலிருந்து ஒரே ஒரு வார்த்தை மட்டும் வெடித்துப் பிறந்தது:

“மகளே!....”

அவர் குத்தப்போன இடத்தில், அந்த பாடீஸுக்குள்ளே மார்பகங்களே இல்லை!..... ஒன்றுமே இல்லை!...இரண்டே இரண்டு பயங்கரமான வட்டவடிவமான வடுக்கள் மட்டுமே இருந்தன!★



# நமது இலக்கியம்

# பாரதி வசனம்

★

மு. சண்முகம் பிள்ளை

தமிழ்க் கவிஞர் பரம்பரையில் தனியிடம் பெற்று விளங்குகிறார் பாரதியார். இவர் தலைசிறந்த வசனகர்த்தராகவும் திகழ்கிறார் என்பதை இன்னும் யாவரும் நன்குணரவில்லை. கவிதைத்துறையில் எத்தகைய உயர்ந்த பல தனி நோக்கங்களைப் பாரதியார் கொண்டிருந்தாரோ, அவ்வாறே வசனத்திலும் தெளிந்த பல கருத்துக்களைக் கொண்டிருந்தார். தமது வாழ்க்கைத் தொழிலாக அவர் கொண்ட பத்திரிகைத் தொழில் பற்பல வசனங்களை எழுதும் வாய்ப்பை அவருக்கு அளித்தது. 'சுதேச மித்திரன்' 'இந்தியா' 'கர்மயோகி' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராக அவர் விளங்கினார்.

எல்லோருக்கும் விளங்கும் வகையில் உரைக்கும் பொருளைத் தெளிவாக எளிய நடையில் எழுத வேண்டும் என்பது பாரதியாரது பெரு விருப்பம். இதற்கு அவர் காட்டும் வழிவகைகளைப் பார்ப்போம். பாரதியார் சொல்லுகிறார்:

''கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி. ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம்- எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாக அமைந்துவிட்டால் நல்லது.

''வசன நடை கம்பர் கவிதைக்குச் சொல்லியதுபோல, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாயிருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் ஒட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக்கொண்டால் கை நேரான தமிழ் நடை எழுதும்.''

இவ் வகையான சீரிய கொள்கைகளைக் கொண்டு எழுதி வந்துள்ள பாரதியாரின் வசனப் பகுதிகள் ஒவ்வொன்றும் தனிப்படக் கற்று மகிழ்தற்குரியதாம்.

பாரதியாரது வசனங்கள் மூன்று பெருந் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சில ஆண்டு

களுக்கு முன்பு பாரதி பிரசுராலயத்தார், பாரதியார் வசனங்களில் தமக்குக் கிடைத்தவற்றையெல்லாம் தொகுத்து, 'வசனங்கள்' 'கட்டுரைகள்' என்ற இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். இவற்றில் சேராத பல கட்டுரைகள், கதைகள் முதலியனவெல்லாம் ஓராண்டிற்குமுன் 'பாரதி தமிழ்' என்னும் பெயரில் வெளி வந்திருக்கின்றன. இப் 'பாரதி தமிழைத்' தொகுத்து வெளியிட்டவர் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ பெரியசாமி தூரன் அவர்களாவர். இம் மூன்று தொகுதிகளிலும் இடம் பெற்றுள்ள வசனப் பகுதிகளை முறையே நோக்குவோம்.

'வசனம்' எனப் பெயரிட்டுள்ள பெருந்தொகுதியில் முதலில் அமைந்திருப்பது ஞானரதம். இது பாரதியாரின் கற்பனைச் சிருஷ்டிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. இதனையடுத்து வடமொழி நூல்கள் சிலவற்றிற்குப் பாரதியார் செய்துள்ள மொழி பெயர்ப்புக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றின் பின், தாம் செய்த பகவத் கீதை மொழி பெயர்ப்புக்குப் பாரதியார் எழுதிய முன்னுரை வருகிறது. இம் முன்னுரை ஆராய்ச்சி முறையில் அமைந்துள்ளது. கீதை காட்டும் வழியைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இதன்பின்வரும் ''சந்திரிகையின் கதை'' நாவல் என்னும் நவீன இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும். நூல் பூர்த்தியாகாது பாதியோடு நிற்கிறது. இவ்விலக்கியம் முற்றுப் பெறுமுன் ஆசிரியர் காலமாகி விட்டார். கதை நடத்திச் செல்லும் அழகும், அவரது எளிய நடையின் ஆற்றலும் இதில் கண்டு மகிழத்தக்கன. இதன் பின் வரும் பகுதி முழுவதும் கதைகளாக அமைந்துள்ளன. 'நவ தந்திரக்கதைகள்' பஞ்ச தந்திரக் கதைகளை நினைவூட்டுகின்றன. 'கதைக் கொத்து' என்ற பகுதியில் பல் வேறு வகைப் பட்ட கதைகள் அடங்கியிருக்கின்றன. இடையிடையே சில வேடிக்கைக் கதைகளும் உள்ளன. 'தராசு' என்ற பகுதி நடு நிலையில் நின்று செய்திகளை ஆராய்ந்து எழுதியதாகும். 'சித்தக் கடலும்' 'சில சங்கற்பங்களும்' பாரதியாரின் சுயசரிதம் பற்றி அமைந்தன.

'கட்டுரைகள்' என்னும் பெருந் தொகுதியில் 105 கட்டுரைகள் உள்ளன. இவை யாவும் கட்டுரைகள் அல்ல. இடையிடையே சில சிறு கதைகளும் தொடர்கதைகளும் வருகின்றன. செய்திக் கோவைகளும் அங்கங்கே உண்டு. எனவே, இத் தொகுதிக்குக் 'கட்டுரைகள்' என்ற பெயர் மிகுதி பற்றி வைக்கப்பட்ட பெயரே யாகும். இது தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. 'தத்துவம்' பற்றிய முதற் பகுதியில் கடவுள் வழிபாடு, தியானம் முதலிய பக்தி யொழுக்கங்களை விவரிக்கும் கட்டுரைகளோடு, பிறமத உண்மைகளும் பிற நாட்டு ஞானிகளின் அறிவுரைகளும் அடங்கியுள்ளன. 'மாதர்' என்ற இரண்டாம் பகுதியில் நம் தேசத்துப் பெண்களின்

நிலையும், வெளிநாட்டுப் பெண்களின் முன்னேற்றமும் பற்றிக் கூறும் 17 கட்டுரைகள் உள்ளன. 'கலைகள்' பற்றிய பகுதியில் முற்பகுதிக் கட்டுரைகள் அத்தலைப்பிற்குப் பொருந்துவனவாகத் தோன்றவில்லை. இவை சில சமூகப் பழக்க வழக்கங்களும், உயரிய லட்சியங்களைப் பற்றிய கதைகளும் கட்டுரைகளுமாம். பிற் பகுதியில் 'கவி' 'சங்கீதம்' 'அபிநயம்' முதலியன பற்றிய கட்டுரைகள் உள்ளன. 'சமூகம்' பற்றிய இறுதிப் பகுதியில் அரசியல், கல்வி, சமுதாயப் பழக்க வழக்கங்கள், ஜாதி பேதங்கள், தொழிலாளர் நிலை, பொருளாதாரம் முதலியன பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 'தேசியக் கல்வி' பற்றிப் பாரதியார் எழுதியுள்ள பகுதி இந்நாளில் கல்விச் சீர்திருத்தம் செய்ய முற்படுவோர் கவனிக்கவேண்டிய தொன்றும்.

சமீப காலத்தில் வெளியாகியிருக்கும் 'பாரதி தமிழ்' தொகுயில் சுமார் 18 கட்டுரைகளும் 4 கதைகளும் இடம் பெற்றுள்ளன. தாகூர் வியாச மொழிபெயர்ப்பு 4 தரப்பட்டிருக்கின்றன. இவை தவிர ஏனைய வெல்லாம் செய்திக் கோவைகளே. இவைகள் சரித்திரச் சான்றுகளாகப் பயன்படும். இக்காலச் செய்திப் பத்திரிகைகளுக்கு ஒரு முன் மாதிரியாகவும் கொள்ளத் தக்கன. கட்டுரை முதலியன வெல்லாம் ஆண்டு மாதம் நாள் வரிசைப்படி முறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இதனுல் காலப்போக்கில் பாரதியாரின் உரை நடைப்போக்கை அறியப் பேருதவியாகும்.

மேற்குறித்த மூன்று தொகுதிகளிலும் இடம் பெருத சில வசனங்கள் பழம் பத்திரிகைகளில் இன்னும் புதையுண்டு கிடைக்கின்றன என்று தெரியவருகிறது. இவற்றுள் திட்டமாய்த் தெரியவருவது 'சின்னச் சங்கரன் கதை.' இக்கதை முற்றுப் பெறவில்லை. ஆறு அத்தியாயங்கள் ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் நடத்திவந்த 'ஞானபானு' பத்திரிகையில் பிரசுரமாயின. இக்கதை தற் கூற்று நடை. பாரதியாரின் இளமைப் பருவ வாழ்க்கை, பள்ளிப் படிப்பு, சமஸ்தானத்தில் ஜமீன்தாரது வாழ்க்கை, அவரது அவைக்களப் புலவர்கள் - இவைபற்றியெல்லாம் சித்திரித்துள்ளார். இதில் தன்னுடைய குறைகளையும் மறைக்காமல் அவர் வெளியிட்டிருப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

பாரதியார் வசன நடையில் அமைந்த சிறப்பான அம்சங்களில் சிலவற்றை இனிக்காண்போம். பாரதியார் வசனம் எளிய வசனம்; பல்லுடைக்கும் சொல்லடுக்குக்கள் இல்லாத வசனம்; பொருள் தெளிவுடைய வசனம்; சின்னஞ்சிறு தொடர்கள். பொருளுக்குத் தக்கபடி அமைந்து செல்லும் புதிய நடை. ஆரம்பகால வசனங்களில் நீண்ட வாக்கியங்களும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. ஆனுல் பிற்கால வசனங்களில் இவை அருகியே தான் காணுதல்கூடும். பொருள் தெளிவும் தட்டுத் தடையின்றி வாசிக்க இன்னேசை பயந்து நிற்பதும் இவரது வசனங்களுக்குரியதோர் தனி இயல்புகளாம். சொல்லக்கருதிய

பொருளுக்குத் தக்கபடி சொற்களையும் தொடர்களையும் அழுத்தம்பெற அமைக்கின்ற திறத்தை அங்கங்கே காணலாம். சொற்களை எத்தனை சுருக்கமாக உபயோகிக்கக் கூடுமோ அத்தனை வார்த்தைச் செட்டு இவரது வசனத்தில் உண்டு. ஒரு சில உதாரணங்கள்:

"பொதிகைமலைச் சாரலில் வேளாண்குடி என்றொரு அழகான கிராமம் இருக்கிறது. அதற்கருகே, ஒரு சிறிய நதி ஓடுகிறது. நான்கு திசைகளையும் நோக்கினால், நீலமலைச் சிகரங்களும் குன்றுகளும் தோன்றும். ஊரெங்கும் தோப்புக்கள். எனவே, காலையில் எழுந்தால் மாலை வரை ரமணீயமான பக்ஷிகளின் ஒலிகள் கேட்டுக் கொண்டேயிருக்கும்".

இது வேளாண்குடிக் கிராமக் காட்சி.

"வஸந்த காலம், நிலாப்பொழுது; நள்ளிரவு நேரம். புரசைப்பாக்கம்முழுதும் நித்திரையிலிருந்தது. இரண்டு ஜீவன்கள்தான் விழித்து இருந்தன: நான் ஒன்று; மற்றொன்று அவள்."

இது 'ஆறில் ஒரு பங்கு' என்ற தொடர்கதையில் வரும் தலைவன் கூற்று.

"வேதபுரத்தில் தர்மவீதியில் வாத்தியார் பிரமராய அய்யர் என்றொரு பிராமணர் இருக்கிறார் .... ... இவர் 'சுத்த சைவம்'. அதாவது, ஆட்டுக்குட்டியை மாம்ஸம் தின்னும்படி செய்தாலும் செய்யலாம்; இந்த வாத்தியாரை மாம்ஸம் தின்னும்படி செய்ய முடியாது."

பிரமராய வாத்தியாரின் சைவ ஒழுக்கத்தை இங்கே காண்கிறோம்.

இங்கு எடுத்துக் காட்டிய பகுதிகளில் ஓரிரு வட சொற்களும் உடன் கலந்துள்ளன. இச் சொற்கள் அடிபட்ட வழக்காகப் பயின்று வருவன. இம் மாதிரி வரும் ஒரு சில இடங்களைக் கொண்டு பாரதியார் நடையை 'மணிப்பிரவாள நடை' எனச் சிலர் சொல்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. இவ்வகையான நடைப் போக்கை வேதநாயகம் பிள்ளை, இராஜமையர், மாதவையா முதலியோர் வசனங்களிலும் காணலாம்.

இங்ஙனமாகப் பாரதியார் வசனம் மரபுவழிப்பட்டுச் செல்லுகிறது. ஆனால் இலக்கணத்திற்கு ஒரேயடியாக அடிமைப்பட்டதன்று. பொருள் விளக்கமே அவருக்குப் பெரிது. பொருள் விளக்கத்திற்காக இலக்கண வரம்பை மீறவும் அவர் தயங்குவதில்லை. மொழியின் வளர்ச்சியில் இலக்கண மரபுகளும் மாறிவருதல் இயல்பு தானே! ஓரிடத்தில் இலக்கண மரபுபற்றி வேடிக்கையாக எழுதுகிறார் பாரதியார். அது வருமாறு:

"பக்கத்து வீட்டு மெத்தைச் சுவரின்மேல் நாற்பது காக்கை உட்கார்ந்திருக்கிறது. 'நாற்பது காக்கைகள் உட்கார்ந்திருக்கின்றன என்று பன்மை சொல்ல வேண்டாமோ?' என்று எண்ணிச் சில இலக்கணக்காரர்கள் சண்டைக்கு வரக் கூடும். அது பிரயோஜனமில்லை. நான் சொல்லுவதுதான் சரியான பிரயோகம் என்பதற்குப் போகர் இலக்கணத்திலே ஆதாரமிருக்கின்றது. 'போகர் இலக்கணம் உமக்கு எங்கே கிடைத்தது?' என்று கேட்கலாம். அதெல்லாம் மற்றொரு சமயம் சொல்லுகிறேன்."

இது 'காக்காய்ப் பார்லிமெண்ட்' என்ற கதையில் வரும் ஒரு பகுதி. இக் கதையில் மற்றோரிடம்:

"கேட்டீர்களா, காகங்களே! அந்த ருஷியா தேசத்து ஜார் சக்கரவர்த்தியை இப்போது அடித்துத் துரத்தி விட்டார்களாம். அந்த ஜார் ஒருவனுக்கு மாத்திரம் கோடானு கோடியான சம்பளமாம். இப்போது நம்முடைய தேசத்திலே கூட, திருவிதாங்கூர் மகாராஜா, மைசூர் ராஜாக்களுக்கூட எல்லா ஜனங்களும் சேர்ந்து பெரிய பெரிய ஆஸ்தி வைத்திருக்கிறார்கள்."

இவ் வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகள் முறை மாறிக்கிடக்கின்றன. அவைகள் முறைப்பட வருவதுதான் இலக்கண நெறி யென்று வாதிக்கலாம். ஆனால், இப்படி மாற்றிச் சொல்லும்போது உண்டாகும் உணர்ச்சியும் நயமும் வேறு வகையினால் வராது என்பது இடம் நோக்கி உணரலாம்.

சின்னஞ் சிறு தொடர்களை ஆற்றலோடு உள்ளத்தைப் பிணிக்கும் வகையில் சிற்சில இடங்களிலே அவர் அமைக்கும் திறம் வியப்பூட்டுவன. ஓர் உதாரணம்:

"ஓம், ஓம், ஓம் என்று கடல் ஒலிக்குது. காற்று சுழித்துச் சுழித்து வீசுது. மணல் பறக்குது. வானம் இருளுது. மேகம் சூழுது. கடற் கரையில் காற்று வாங்க வந்த ஜனங்கள் கலைந்து வீட்டுக்குத் திரும்புகிறார்கள்."

இப் பகுதியில் வீசுது, பறக்குது, இருளுது, சூழுது என்பன குறைச் சொற்கள். வீசுகிறது, பறக்கிறது என்றாற் போல்வனவே நேரிய சொற்பிரயோகம். இப் பகுதி செய்யுளைப் போன்ற கட்டுக்கோப்பில் அமைந்திருப்பதால் ஓசை நயம் கருதி இக் குறைச் சொற்களைக் கையாண்டார் என்று கொள்ளலாம். பாரதி பாடல்களிலும் 'காற்றடிக்குது, கடல் குமுறுது' முதலிய பிரயோகங்கள். வந்துள்ளன. இப் பகுதி போன்ற அவரது வசன நடையில் கவிதை போன்ற அமைப்புக்களையும் சொல்லமைதியையும் சிற்சில இடங்களில் காணலாம். ஞாயிறு, காற்று, கடல் முதலியன பற்றிய வசனங்கள் அவரது கவிதைத் தொகுதியிலேயே "வசன கவிதை" என்ற தலைப்பில் இப்பொழுது அமைந்திருக்கிறார்கள். வசன கவிதைக்கு ஒரு மாதிரி வருமாறு:

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி.

மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து—

இவையெல்லாம் நினது நிகழ்ச்சி. கண் நினது வீடு.

புகழ், வீரம்—இவை நினது லீலை.

அறிவு நின்குறி. அறிவின் குறி நீ.

நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய், வாழ்க.

உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்.

வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்.

நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க.

இது ஞாயிறு பற்றிய வசனத்தில் ஒரு பகுதி.

கவிதை நடை போன்று வசன நடை அமைக்கும் பாரதியார் தமது உரைகளின் இடையிடையே பொருத்தமான கவிதைகளையும் கவிதைத் தொடர்களையும் எடுத்தாளுகிறார். தமது

சொந்தக்கவிதைகளையும்தாயுமானவர் பாடல், திருக்குறள் தேவாரம் முதலிய முன்னையோர் பாடல்களையும் அங்கங்கே காட்டியுள்ளார். சில கவிதைப் பகுதிகளை வசனமாக ஆக்கியும் எழுதுகிறார். ஆனால் அப் பகுதிகள் அவருடைய வசனத்தோடு வேற்றுமையின்றி இழைந்து செல்லுகின்றன. பழமொழிகளையும் அங்கங்கே பொருத்தமான இடங்களில் கையாளுகிறார். ஒரு சில இடங்களில் தாம் காட்டும் மேற்கோட் செய்யுட்களுக்குத் தெளிவான உரை வகுத்தும் விளக்கம் தந்துள்ளார். இவ் வுரைப் பகுதிகளும் 'பாஞ்சாலி சபதத்தின்' முதற் பகுதிக்கு அவர் எழுதியுள்ள பொருள் விளக்கங்களும் சிறந்ததோர் உரையாசிரியர் என்னும் சிறப்பை அவருக்கு நல்கியுள்ளன.

பாரதியார் பிறருக்கு எழுதிய கடிதங்களும் அவரது வசன நடையில் தனிப்படக் குறிக்கத் தக்கவை. இவை வெறும் செய்திக் குறிப்புக்கள் அல்ல. கடிதங்களில் கூடத் தமது எண்ணங்கள் லட்சியங்கள் முதலியவற்றைச் சுவைபட எழுதிச் செல்லுகின்றார். ஒரு சில கடிதங்கள் இப்பொழுது பிரசுரமாகியுள்ளன. பரலி ஸ்ரீ. நெல்லையப்ப பிள்ளையவர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

''எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக.........

''ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வட நாட்டுப் பாஷைகள் தெரிந்திருந்து, அந்தப் பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்துகொள்ள முடியுமானால்—தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்!''

''தமிழ், தமிழ், தமிழ்-என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை புதிய புதிய உண்மை, புதிய இன்பம் — தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்.''

இக் கடிதத்தில் பாரதியார் தெரிவித்துள்ளபடி அவரது வசனங்களிலேயே புதிய புதிய செய்திகளும், யோசனைகளும், உண்மைகளும், இன்பங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. அக்காலத்தில் பாரதியார் கண்ட லட்சியக் கனவுகளை இவற்றிடையே காணலாம். பாரதியாரது வசனங்களை உற்று நோக்கினால், பாரதியார் ஓர் சிறந்த சிந்தனையாளர்; பெருங் கவிஞர்; தமிழில் தலை சிறந்த வசனகர்த்தர்; கட்டுரையாளர்; கதாசிரியர், நாவலாசிரியர், மொழி பெயர்ப்பாளர் உரையாசிரியர் என்னும் புகழுக்கெல்லாம் இருப்பிடமாய் ஒளி சிறந்து விளங்குவதைக் காணலாம்.

பாரதியார் வசனங்கள் நமது மொழிக்குக் கிடைத்த அரும் பெரும் செல்வங்கள். இச் செல்வங்களை நாம் எல்லோரும் துய்த்துப் புதிய புதிய செல்வங்களை ஈட்ட முற்படுவோமாக. சில வகை வசனங்களைப் படித்து ஏமாற்றமடையும் இன்றைய இளைஞருலகத்திற்கு பாரதியாரது வசனங்களை வாசிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும். இவரது வசனங்களை மாணவர் பயின்றால் தமிழினிடத்துச் சிறந்த பற்றும் அன்பும் உடையவராவர் என்பது உறுதி.




# மழை இரவு

அகிலன்

**கா**ற்றும் மழையும் ஒன்றாய்ச் சேர்ந்து அன்றைக்குத் திருச்சி நகரத்தையே கதி கலங்க அடித்து விட்டது.

தென்னூர் போகிற வழியில் ராமகிருஷ்ணா டாக்கீஸை அடுத்தாற்போல் ஒரு நாற்றம் பிடித்த வாய்க்கால். எத்தனையோ கிளைச் சாக்கடைகளின் சங்கம தீர்த்தம் அது. பரம்பரையாய் அதைச் சுற்றிக் குடிசை வாசிகளே குடியிருந்து வருவதால், நாளது தேதிவரை அந்த நாற்றத்தைப் போக்க ஒரு நாதியும் காணோம்.

மழை பெய்வதற்கு முன்னால் வானம் கறுத்துப்போய் கடமுடாவென்று உருட்டிக்கொண்டிருந்தது. அந்த வாய்க்கால் பாலத்தில் உட்கார்ந்து கொண்டு மாடசாமி பீடிப் புகையின் வெதுவெதுப்பில் தன்னை மறந்திருந்தான். மடியில் நாலைந்து பீடிகளும், ஒரு நெருப்புப் பெட்டியும், மூன்றணாவும் இருந்தன. இதுவரை கூலிக்கு விறகு தூக்கிப்போட்டு வந்ததில், பகல் சாப்பாடுபோக மிச்சமிருந்த வருமானம் அது.

திடீரென்று வானம் பொத்துக்கொண்டு பெய்யவே பக்கத்தில் இருந்த டீக்கடையில் புகலிடம் தேடினான் மாடசாமி. அரை மணி நேரம் ஆயிற்று. அதற்குமேலும் அங்கு வெட்டியாய் இடத்தை அடைத்துக் கொண்டு நிற்க அவன் விரும்பவில்லை.

''கரம் சா ஒண்ணு கொண்டா; நிறைய அஸ்கா போட்டுக் கொண்டா!'' என்று ஆர்டர் கொடுத்தான்.

மடியின் கனத்தில் ஒன்றரையணாவைக் குறைத்து விட்டு, 'கரம் சா' உள்ளே புகுந்தது. அதற்குப் பிறகு அந்த இடத்தில் கொஞ்ச நேரம் தெம்போடும் நிற்கலாமல்லவா?

மழை பொழிந்து தள்ளி விட்டது. தெருவெல்லாம் வெள்ளக்காடு. டீக்கடைக்குள்ளேயே தண்ணீர் குபுகுபு பாயத் தொடங்கியது.

''அட ! நம்ம வீடு மறந்தே போச்சே! இன்னேரம் எப்படி யிருக்குதோ?''

வீட்டு நினைவு வந்தவுடன், மடியிலுள்ள பிடிகளைப் பத்திர மாய்ச் சுருட்டி வைத்துக் கொண்டு, குபீரென்று வெளி யில் பாய்ந்தான். டவுன் ஸ்டே ஷன் பக்கம் அவனுடைய வீடு. தெப்பக்குளத்தைத் தாண்டி, கடைத்தெருவைத் தாண்டி, ஒரு இடத்திலும் நிற்காமல் ஒரே ஓட்டமாய் ஓடினான்.

மழை நேரே முகத்தில் அடித் தது. முழங்காலுக்குமேல் தெருவில் தண்ணீர். மடியை மட்டும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஓடினான்.

என்ன அதிசயம்! — அங்கே போய்ப் பார்த்தால் அவன் வீட் டைக் காணோம்.

டவுன் ஸ்டேஷன் போகிற வழியில், கீழப்பொலிவார் ரோட்டை ஒட்டியிருந்த அவன் வீட்டை அந்த இடத்திலே காணோம். வீட்டின் அடையா ளங் கூடத் தெரியவில்லை. எங் கும் நீக்கமற நிறைந்திருந்தது தண்ணீர்.

''தம்பீ! அப்பா, மாடசாமி! தம்பீ!''

திரும்பிப் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் வன்னி மரத்தடி மேடையில் ஒரு சிறு கூட்டம் ஒதுங்கியிருந்தது. அதில் அவனுடைய ஆயா இருந் தாள். அவளுடைய குரல்தான் அது.

கூட்டத்தில் உள்ள மற்றவர் களைப்போலவே அவளும் சொட் டச் சொட்ட நனைந்திருந்தாள். உடம்பெல்லாம் கந்தல் துணி ஈரமாய் ஒட்டிக் கொண்டிருந் தது. பற்கள் தந்தியடித்தன கிழவியானாலும் இன்னும் பொக்கை வாய்க் கிழவியாக வில்லை.

''வீடே முழுகிப் போச்சுடா, தம்பி! நான் என்னடா செய் வேன்?'' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள் ளப் போனாள்.

''இந்தா, உன் ஒப்பாரியை நிறுத்தப் போறியா என்ன?''

மாடசாமி வாய்விட்டுச் சிரித் தான்: ''உன்னோட பங்களா விலே அமெரிக்காக்காரன் அணு குண்டைப் போட்டுட்டானாக் கும்! தவியாத் தவிக்கிறியே? சும்மா கிட!''

''ராத்திரிச் சோத்தை எங்கே பொங்கறது? — எங்கேடா படுத்துத் தூங்கிறது?''

''ராத்திரிச்சோறுதிங்காட்டி செத்தா போவே? எல்லாம் நான் கவனிச்சுக்கிறேன். நீ கவ லைப் படாதே.''

அவர்களுடைய வீடு அந்தத் தெருவோரத்தில் உள்ள பாழ டைந்த குளத்திற்குள் இருந் தது. குளத்தை குப்பை கொட்டி மூடத் தொடங்கியவர் கள் ஏனோ பாதியில் நிறுத்தி விட்டார்கள். கிழக்கு மூலையில் கொஞ்சம் தண்ணீர்த் தேக்கம். அதில் வெங்காயத் தாமரை படர்ந்து ஒரே பச்சையும் ஊதா வுமாய்க் கண்ணைப் பறித்தது. ஆனால் குடலைப் புரட்டும் தண் ணீர் நாற்றம்.

அந்தக் குளத்திற்குள் முளைத் தெழுந்த மூன்று குடிசைகளில் ஒன்றுதான் ஆயாவினுடையது. வீட்டைச் சுற்றிலும் சொறி நாய்களும், சாக்கடைப் பன்றி களும் உலவின. பக்கத்துக்

குடிசைக் காரர்கள் கோழி வளர்த்தார்கள்.

ஆயாவுக்கும் மாடசாமிக்கும் உறவொன்றும் கிடையாது. ஆயாவின் மகன் கருப்பண்ணன் அடிதடி வழக்கில் சிறைக்குப் போகும்போது, புதுச் சிநேகிதனை மாடசாமியிடம் தன் தாயரைப் பார்த்துக்கொள்ளச் சொன்னான். மாடசாமி ராமநாதபுரம் ஜில்லாக்காரன். திருச்சிக்குப் பிழைக்க வந்தவன். அவன் பிழைப்பும் வந்த இடத்தில், "தாழ்வாரமில்லை, தனக்கொரு வீடில்லை" என்றிருந்ததால் இந்த ஏற்பாட்டுக்கு இணங்க வேண்டியதாயிற்று.

ஆரம்பத்தில் அந்தக் குடிசையை அருவருப்போடு பார்த்தவன், அதி சீக்கிரம் அதற்குப் பழக்கப்பட்டுப்போனான். வயிறு காய்ந்தால் எந்தப் பழக்கமுமே சீக்கிரம் படிந்து போகும்.

மழை நின்றது. வன்னிமரத்தடிக் கூட்டம் கரைந்து தெருவில் பரவியது. மாடசாமியும் ஆயாவும் ஈரத்துணியைப் பிழிந்துவிட்டுக்கொண்டு கொஞ்சநேரம் அங்கேயே நின்றார்கள். இனி வீட்டைத் தேடிப் புண்ணியமில்லை. தண்ணீர் வற்றுவதற்கு ஒரு வாரத்திற்கு மேலாகும். வற்றிய இடத்தில் வீட்டின் சுவட்டைக் கூடக்கண்டு பிடிக்கமுடியாது.

முதல் வேலையாகத் தன்னிடம் மீதமிருந்த ஒன்றரையணுவுக்கு, ஆயாவை அழைத்துக் கொண்டுபோய்ச் சுடச் சுட, 'தேத்தண்ணி' வாங்கிக்கொடுத்தான். நடுங்கும் உடம்பும், தந்தியடித்த பல் வரிசைகளும் ஒரு வழியாய் நிதானத்துக்கு வந்தன.

"என்கிட்டே ரெண்டணுக் காசிருக்கு. நீயுஞ் சாப்பிடு, தம்பி."

"அதை ராத்திரிச் செலவுக்கு வச்சுக்க. நாலு இட்டிலி போதாது? பொழுது விடிஞ்சாப் பார்த்துக்கொள்ளலாம்."

"உனக்கு என்ன பண்ணுவே?"

"எனக்குப் பசிக்கலே."

"பொய் சொல்லாதே தம்பி"

"நெசமாத்தான் சொல்றேன். கடையிலே சாயங்காலம் மசாலை தோசை சாப்பிட்டது வயித்தை என்னமோ பண்ணுது."

சாமர்த்தியமாய்ச் சொன்ன பொய்யை அவள் நம்பிவிட்டாள். அவளுடைய பசி அதை நம்பச் சொல்லியது.

நன்ருய் இருட்டிப்போய் மலைக்கோட்டை மணி எட்டடிக்க பிறகு ஆயாவுக்கு இட்டலி வாங்கிக் கொடுத்தான் மாடசாமி. சாப்பாடு முடிந்தவுடன் இருவரும் படுக்க இடம் தேடி அலைந்தார்கள்.

இடம் தேடுகிற வேட்டையில் இரண்டு மணி நேரம் வீணுய்ப் போனதுதான் மிச்சம்.

முன் காலத்தில் பிச்சைக்காரர்களை உற்பத்தி செய்து விட்டு அவர்களுக்காகத் திண்ணை கட்டி வைத்தார்கள் என்று சொல்ல முடியாது. இப்போது பிச்சைக்காரர்களுக்கு யாரும் திண்ணையை ஒழித்துக் கொடுப்பதில்லை. தீராத வயிற்றுப் பசியை மறப்பதற்காக அவர்களில் பலர் திரக்கூடிய உடற்பசி விவகார ரகளைகளில் நள்

ளிரவின் கும்மிருட்டில் இறங்கி விடுகிறார்களல்லவா? இந்த வம்புக்கு யார் ஈடுகொடுப்பது?

மாடசாமி போன இடத்தி லெல்லாம் விரட்டப்பட்டான். ஒரு புண்ணியவான் மடமட வென்று அவன்மேல் தண்ணீரை ஊற்றினார். அபிஷேகம் முடிந்ததும் அர்ச்சனை வேறே நடந்தது.

பொறுத்திருந்த மழை மீண்டும் திரும்பியது.

அலைந்தார்கள், அலைந்தார்கள், அப்படி அலைந்தார்கள்.

இருவரும் தெருத் தெருவாய், வீடு வீடாய் அலைந்து களைத்தார்கள்.

ஒண்டிக்கொள்ள ஒரு கூரை கிடைக்கவில்லை.

மெயின் கார்டுகேட் என்று சொல்லும் கோட்டை வாசலுக்கு இருவரும் கடைசியில் வந்து சேர்ந்தார்கள். போக்கு வரத்துக் குறைவாக இருந்தால் அங்கே மழைக்கு ஒதுங்கலாம். ஆனால் படுக்க முடியாது.

திடீரென்று மாடசாமிக்கு அணு குண்டு ஞாபகம் வந்தது.

''எனக்கு அதிகாரம் இருந்தால் இந்த ஊரையே அழிச்சுப் புடுவேன், ஆயா! ஒரே ஒரு அணு குண்டு போதும்!''

''பாவண்டா, தம்பி! அப்படி நினைக்கிறதே பாவம். வீண் பொருமை கூடாதுடா!''

''அரமணையைப் போல வீடும் உன்னோட அழகான குடிசையும் அக்கம் பக்கத்திலே இருந்தால் எப்படி ஆயா பொறுக்க முடியும்? பொருமையாமில்ல, பொருமை! உபதேசம் பண்ணுற பயல்கள் உன்னோடே குடிசையிலே ஒரு நாள் வந்து தங்குவான்களா? நான் இந்த ஊரைச் சுட்டுப் பொசுக்கப் போறேன். ஆயா, சுட்டுப் பொசுக்கப் போறேன்!''

''அடப் பாவி!''

''நானு பாவி? கொஞ்ச நேரம் இங்கே நின்று வேடிக்கை பார்; தெரியும்.''

கிழவி நின்றுகொண்டு பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவனுக்கு மட்டும் தெரிந்தது.

தேவர் ஹாலில் அன்றைக்கு யாரோ இரண்டு ''குமாரி''கள் நடனமாடினார்கள். ஐம்பது ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை டிக்கட். புத்தம் புதுக் கார்கள் அந்தப் பக்கம் தேவர் ஹாலை நோக்கிச் சாரை சாரையாய் இழைந்து சென்றன. கார்களுக்குள்ளே ஒரே பட்டுப் புடவைகள், வைரக்கம்மல்கள், சில்க் ஜிப்பாக்கள், ஜரிகை அங்கவஸ்திரங்கள்.

''இதுவா ஏழைநாடு?... ஹ்ஹா...த்தூ!'' என்று காரித் துப்பினான் அவன்.

''பார்த்துத் துப்பையா! பக்கத்திலே மனுஷன் நிற்கிறது தெரியலே?''

''மனுசன் கூடவா இந்த ஊரிலே இருக்கான்?''

மாடசாமி வெறுப்போடு திரும்பிப் பார்த்தான்.

அடுத்தாற்போல் இருபத்தைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு இளைஞன் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. கறுப்பாக ஒல்லியாக இருந்தான். சுத்தமான வெள்ளைச் சட்டையும் வேஷ்டியும் உடுத்திருந்தான்.

படிப்பின்களை முகத்தில் தென் பட்டது. அவனும் அங்கே மழைக்கு ஒதுங்கியிருக்க வேண்டும்.

மாடசாமியை அவன் சட்டை செய்யாதிருக்கவே, "கோவிச்சுக்காதிங்க; இருட்டிலே கவனிக்கலே" என்ருன்.

"பரவாயில்லே; பகல்லேயே ரொம்பப் பேருக்குக் கண்ணு தெரியமாட்டேங்குது. குருட்டுப் பயல்கள், செவிட்டுப்பயல்கள், நெஞ்சில்லாத பாவிப்பயல்கள் நிறைஞ்ச நாடு இது. மூளை இருந்தாப் போதுமா? நெஞ்சு வேண்டாமா?"

ஆச்சரியத்தோடு அவனை மாடசாமி உற்றுக் கவனித்தான். தன்னைக் கடைத்தேற்ற வந்த குருநாதராகவே அவனுக்கு அந்த நோஞ்சல் உருவம் தோன்றியது.

இளைஞன் தனக்குள், "ஐம்பது லக்ஷம்!......ஹூம்......" என்று முணுமுணுத்துக் கொண்டே பெரு மூச்சு விட்டான். "இந்த ஐம்பது லக்ஷத்தை வைத்துக்கொண்டு எத்தனை நல்ல காரியம் செய்யலாம்! பைத்தியக்கார உலகம்......"

"என்னங்க அம்பது லக்ஷம்? குறுக்கெழுத்துப் போட்டியிலே பஸ்டுப் பிரைசுங்களா?"

இளைஞன் சிரித்தான்: "அந்த விவகாரமா? ஐம்பதாயிரம் முட்டாள் வாயிலே மண்ணைப் போட்டு, அஞ்சு முட்டாள் வாயிலே சர்க்கரையைத் தூவுகிற ஜேப்படி வித்தை அது. நான் அதைச் சொல்லலே."

"பின்னே என்னங்க?"

"உனக்குத் தமிழ் படிக்கத் தெரியுமா?"

"தெரியும்"

"இப்போ கண்ணு தெரியுதா?"

"தெரியுது."

"அதோ எதிரிலே சுவத்தைப் பாரு."

சுவரொட்டி விளம்பரம் ஒன்றில் அரை நிர்வாண அழகி ஒருத்தி ஆடிக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் இம்மாதிரி எழுதி இருந்தது.

**'ஐம்பது லக்ஷ ரூபாய் செலவு செய்து, ஐந்து வருஷம் கடுமையாக உழைத்து, தலை சிறந்த தமிழ்க் கலைஞர்கள் இந்தத் திரைப்படத்தை உருவாக்கியிருக்கிருர்கள். இன்றே காணத் தவருதீர்கள்:— அற்புத சுந்தரி! ஒப்பற்ற தமிழ்ப்படம்.**

இளைஞன் வாயைத் திறந்தான்.

"இந்தப் படத்திலே இதே மாதிரி கண்ணுடித்துணியைக் கட்டிக்கிட்டு இவ ஒரு மணி நேரம் குதிக்கிரு. அப்புறம் காரிலே ஏறி, காலேஜ் படிக்கிற ஒரு மாணவனேடெ 'ரேஸ்' விட்ரு. இதுதான் தமிழ் நாட்டுக் கலை! தமிழ்ப் பண்பு! இந்தக் கலைச் சேவைக்காக ஐம்பது லக்ஷம் செலவழிக்க வேண்டியது அவசியந்தானே? கலையும் நாடும் முன்னேறுகிற லட்சணம் இது. குடிக்கக் கூழைக்காணும். கொப்பளிக்கச் சாராயம் கொடுக்கிருனுக!"

"சினிமா புடிக்காதுங்களா உங்களுக்கு?"

ஏன் புடிக்காது? கொள்ளையடிக்கிற புத்தியை விட்டுட்டு நல்ல படமா எடுத்தா என்ன? மனுஷனை மிருகமாகவும் ஒரு சமூகத்தைக் காலிக் கூட்டமாக

வும் மாற்றித்தானு பணம் பறிக்கணும்? நம்ம நாட்டிலே பணம் படைச்சவன் என்ன வேணுமானுலும் செய்யலாம். அயோக்கியனுக்கு இங்கே அதிகச் சுதந்திரம்; முட்டாளுக்கு முழுச் சுதந்திரம்' ஜனநாயகம் பார்!''

''எனக்கு ஒண்ணும் புரியலிங்க.''

''உனக்கு மாத்திரந்தானு புரியலே? பள்ளிக்கூடத்திலே படிக்கிற பையன்களிலே கால் வாசிப்பேருக்கு நாட்டின் பிரதம மந்திரி பேர்கூடத் தெரியாது. ஆனுல் இந்த அற்புத சுந்தரி எத்தனை அங்குலத்திலே உள் பாவாடை கட்டியிருக்காங்கிறது எல்லோருக்கும் தெரியும். இதை அளந்து சொல்வதற்கு நம்மிடம் எத்தனை பத்திரிகைகள் இருக்கின்றன, தெரியுமா?''

''பாவம்! என்னைப்போல நீங்களும் கஷ்டப்பட்றிங்க போலேருக்கு.''

''இந்தாப்பா, இரக்கப்படாதே! யாருக்கும் இரக்கப்படாதே! இந்தச் சமுதாயத்தில் இரக்கப்பட்டால் நீ வாழ முடியாது. ...சரி, நான் வாரேன். மழை அதிகமில்லை.'' அவன் போய் விட்டான்.

குருதேவர் அருளிச் செய்த மந்திரச் சொல்லாக அந்த இளைஞனின் கடைசி உபதேசத்தை இறுகப் பிடித்துக் கொண்டான் மாடசாமி: ''இரக்கப் படதே, இரக்கப்படாதே, இரக்கப்படாதே!''

அவர் சொல்றதும் உண்மை தான். ஊரிலே எவனுவது ஒருத்தன் நமக்காக இரக்கப் பட்டானு? —ஒண்டிக்கொள்ள ஒரு கூரையில்லாமல், இந்தக் கொட்டுற மழையில், வேட்டை நாய் துரத்துற முயல் மாதிரி தெருத்தெருவாய் ஓடினேமே!—'

''தம்பி, மாடசாமி, தூக்கம் வருதுடா.''

கிழவி ஒருத்தி பக்கத்தில் நிற்பது அவனுக்கு அப்போதுதான் ஞாபகத்தில் வந்தது. அவளுக்கு இடம் தேடித் தருவதற்காகச் சுற்றுப்புறங்களைக் கூர்ந்து கவனித்தான். எங்கும் திறந்த வெளி.

எதிரில் சுவரின் பிளவில் ஏதோ கறுப்பாய்த் தெரிந்தது. பக்கத்தில் போய் உற்றுப்பார்த்தான். அவனுடைய ஆனந்தத்திற்கு எல்லை இல்லை. கிழவிக்கு இடம் கிடைத்து விட்டது!

பழைய காலத்து அந்தக் கோட்டை வாசல் சுவரின் மத்தியில் மலைப் பிளவு மாதிரி வெடித்துப்போன பாகம் ஒன்று தெரிந்தது. சுமார் மூன்றடி நீளம் இரண்டடி அகலத்திற்குச் சுவர் இடிந்து போய்ச் சிறிய குகை போல் வாய்திறந்து கொண்டிருந்தது. குளிருக்கு அடக்கமாய் முடக்கிக்கொண்டு ஒரு பிராணி நிம்மதியாகத் தூங்கலாம்.

ஆனுல் ஏற்கனவே அங்கொரு பிராணி அதைச் செய்து கொண்டிருந்தது. பெண்பிள்ளை ஒருத்தி அங்கே கருவில் கிடைக்கும் சிசு மாதிரி சுருண்டு கிடந்தாள்.

''இந்தா, யாரது? எளுந்திருச்சு இடம் கொடு.''

அது எழுந்திருக்கவுமில்லை; இடம்கொடுக்கவுமில்லை.

''ஏ, புள்ளே! எளுந்திருக்கிறியா, எதாவது வேணுமா?''

ஊஹூம்! அது அசையக்காணோம்.

''மரியாதையா எளுந்திருச்சுடு சும்மாத் தூங்கிருப்புலே பாசாங்கு பண்ணுதே.நான்கோவக்காரன்''

'இரக்கப்படாதே' என்ற குருவின் வேத வாக்கை அவன் நினைத்துக்கொண்டான். பட்டென்று அவளுடைய தோளில் கையை வைத்து அவளை வெளியே இழுத்தான்.

''ஓ! நீ ஒரு ஆம்பிள்ளையாட்ட!'' என்று சிறிக்கொண்டே அவள் தலைவிரி கோலமாய் எழுந்தாள்.

''வேண்டாண்டா தம்பி. அவ வயசுப் பொண்ணு; அவளைப் போய்த் தொந்தரவு பண்ணுதே நம்ப வேறே இடம் போகலாம்'' என்றாள் ஆயா.

''நீ சும்மாகிட!'' என்று கிழவியை அடக்கிவிட்டு, ''இதோ பார், மரியாதையாச் சொல்றேன், வயசான கிழவிக்கு இந்த இடத்தை விட்டுவிட்டு நீ எங்கேயாச்சும் போ'' என்றான் அவளிடம்.

''எங்கே போறது? உங்கப்பன் எனக்காக வீடு கட்டி வச்சிருக்கானோ?''

''உங்கப்பனும் எங்கப்பனும் வீடுகட்டி வாழ்ந்திருந்தாத்தான் நம்ம ரெண்டு பேரும் ஜோரா, அஞ்சு ரூவாயாச்சும் கொடுத்து அந்தக் குட்டியோட ஆட்டம் பார்க்கப் போயிருப்போமே.''

''என்கிட்ட ஒண்ணும் நடக்காது; என்னோடே இடத்தை விடமாட்டேன்.''

''பொம்பளேன்னுகூட நான் இரக்கப்படமாட்டேன், பார்த்துக்க!''

''நீ என்னடா செய்வே? நானும் உனக்கெல்லாம் பயந்தவள் இல்லே.''

பளீர், பளீர், பளீர்,...

வெறி கொண்டவன் போல் கை ஓயுமட்டும் அறைந்தான் மாடசாமி. அவளுடைய மூக்கிலும் வாயிலும் ரத்தம் வந்துவிட்டது. ஓவென்று கதறியழுதுகொண்டே அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள். பதினொரு மணிக்குமேலானதால் ஜன சந்தடியே அங்கில்லை.

கிழவியைத் தூக்கி அந்தப் பிளவை மூடுவது போல் உள்ளே தள்ளினான். நன்றாய்ப் படுக்கவைத்தான்.

''பேசாமல் தூங்கு. கணப்புச் சூடு மாதிரி இடம்; கம்முன்னு இருக்கும்.''

அவனுடைய கோபம் அத்துடன் தீரவில்லை. அந்தப் பெண் பிள்ளையை அப்படியே கழுத்தை நெரித்துக் குளத்தில் தள்ளாமல் போய் விட்டோமே என்று ஆத்திரப்பட்டான்.

யார் யார்மேலோ, எது எதன் மேலோ அவனுக்கு ஆத்திரம். அவனை வஞ்சித்து வாழும் இந்தப் பரந்த ஜன சமுத்திரத்தில் அவளும் ஒரு அற்பத்திவலை தானே? அவள் ஏன் உலகத்தில் பிறந்திருக்க வேண்டும்? ஏன் அந்தக் கிழவிக்குக் கிடைக்க வேண்டிய இடத்தை அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?

சிந்தித்துச் சிந்தித்து அவனுக்கு மூளை குழம்பியது.

கடைசியில்தான் அவன் அந்தப் பெண் பிள்ளைக்காக இரக்கப் பட்டான். கீழே ஒரு குத்துக் கல்லில் உட்கார்ந்துகொண்டு தன்னையே நொந்து

கொள்ளத் தொடங்கினான். வெளி வேஷம் போடும் உளுத்துப்போன சமூகத்தின் பிரதிநிதியா அவள்? எதிரியைக் காரித் துப்ப நினைத்தவன் தன்னையே துப்பிக்கொண்டால் எப்படி இருக்கும்? அந்த நிலை அவனுக்கு.

நேரம் ஆயிற்று.

நடனம் முடிந்து கார்கள் திரும்பின. மனிதர்களும் கூட்டம் கூட்டமாய் வீடுகளுக்கு விரைந்தார்கள். மழை பொசு பொசுத்துக் கொண்டிருந்தது. சற்றுக்கழித்து, சினிமாக் கொட்டகை கூட்டமும் கலைந்து சென்றது.

இரவு இரண்டு மணிக்கு மீண்டும் அந்த இடத்தில் பயங்கரமான அமைதி. விளக்கு வெளிச்சம் மழையில் அழுது வடிந்தது. சாக்கடைத் தண்ணீர் ஓடும் ஓசையையும், மெல்லிய மழையோசையையும் தவிர வேறு ஏதோ ஓர் சத்தமும் அங்கு கேட்கத் தொடங்கியது. மாடசாமிக்குத் தூக்கம் வரவில்லை. உட்கார்ந்து கொண்டே தூங்கப் பார்த்தான். முடியவில்லை.

சத்தத்தை உற்றுக்கேட்டான். யாரோ விம்முகிறமாதிரியும் தேம்புகிறமாதிரியும் ஒலி எழுந்தது. எழுந்துபோய் சுவரின் வளைவருகில் நின்று பார்த்தான்.

அங்கே அவள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு குப்புறக் கவிழ்ந்த தலையோடு தேம்பிக் கொண்டிருந்தாள்.

"யாரது?"

"யாரா இருந்தா உனக்கென்ன? உன் காரியம் முடிஞ்சு போச்சு. நீ இங்கே நிற்காதே!"

அவன் அவளருகில் உட்கார்ந்தான். வலுக்கட்டாயமாய் அவள் முகத்தை நிமிர்த்தினான். கண்ணீரின் வெதுவெதுப்பு அவனுடைய முரட்டுக் கையில் படிந்து அவன் உள்ளத்தை இளக்கியது. அந்த முகத்தையே உற்றுப் பார்த்தான். மூக்கின் கீழ் இரத்தக் கறை தெரிந்தது. அவனுடைய ஆத்திரத்தின் பிரதிபலிப்பு அது.

ஐந்து நிமிஷங்கள் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தவனுக்குக் கரகரவென்று கண்ணீர் கொட்டியது.

"நான் தெரியாமல் அறைஞ்சிட்டேன்."

தன் முகத்தை அவள் விடுவித்துக்கொண்டாள்.

"உன் மேலே கோவமில்லே. நான் பொறந்த வேளை அது. எத்தினியோ பேர் என்னை அடிச்சுட்டான்; இந்த இருபது வயசிலே நான் எவ்வளவோ கண்டாச்சு. சாகவும் மனசு வல்லே; பிழைக்கிறதுக்கும் உடம்பிலே திராணி இல்லே."

எதையாவது அவளுக்கு ஆறுதலாய்ச் சொல்ல நினைத்தான். எதைச் சொல்வதென்று மாடசாமிக்குத் தெரியவில்லை.

"நீ இந்தப் பொழைப்புப் பொழைக்கலாமா? தப்பில்லையா?"

"எனக்கு வேறே வழியைச் சொல். பிழைக்கிறதுக்கு என்ன வழி! சுகத்துக்காக நான் சோரம் போகலே; சோத்துக்காகப் போறேன். நாளைக்கே நீ என்னைக் கட்டிக்க. அப்புறம் உனக்குத் துரோகம் பண்

ணிறு, என்னை ரெண்டு துண்டா வெட்டிப் போடு.''

அவன் அவளுடைய கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு இன்னும் நெருங்கி உட்கார்ந்தான். நீண்ட நேரம் மௌனத்தில் சென்றது.

''எனக்குத் தூக்கம் கண்ணைச் சுத்துது. குளிரு தாங்க முடியலே.''

அவன் அவளை இறுக அணைத்தான்.

''இன்னமா குளிர்?''

''ஆமா!'' — அவள் சிரித்தாள்.

அவன் தன்னை மறந்தான்.

இருவரும் பின்பு ஒருவரில் ஒருவர் அதே இடத்தில் குளிர் காய்ந்தார்கள். உள்ளத்து நெருப்பு உடலில் பரவி அவர்களை விழுங்கியது. மழையும் நின்று விட்டது.

மாடசாமிக்கும் அவளுக்கும் அப்புறம் நல்ல தூக்கம். பொழுது விடிந்து ஜன நடமாட்டம் தொடங்கிய பிறகுதான் இருவரும் கண் விழித்தார்கள். மாடசாமி பரக்கப் பரக்க ஆயாவைப்பார்த்தான். தனக்கு முன்னே அவள் விழித்துக் கொண்டு தன்னுடைய நிலையைக் கவனித்து விட்டாளோ என்ற தவிப்பு அவனுக்கு.

ஆனால் அவள் எழுந்திருக்கவில்லை. பல முறை சத்தம் போட்டுப் பார்த்தான். அந்தப் பெண் பிள்ளையும் அவனருகில் வந்து உரிமையோடு நின்று கொண்டு கூப்பிட்டாள். ஆயா அசையக் காணோம்.

மெதுவாகக் கிழவியின் தோள் பட்டையில் கையை வைத்தான் மாடசாமி. அது சில்லிட்டிருந்தது. கெட்டியாகப் பற்றித் தோளைத் திருப்பினான். கண்கள் மூடியிருந்தன. சாரை சாரையாய்ச் சிற்றெறும்புகள் இரு கண்களைச் சுற்றியும் வந்து குவிந்தன. கை கால்கள் மடித்தது மடித்தபடி விறைத்துப் போய்விட்டன.

''ஐயோ! பாம்பு!'' என்று அலறினாள் அந்தப் பெண்.

விரியன் பாம்புக்குட்டி ஒன்று வேகமாக நெளிந்து கொண்டு அந்தப் பிளவுக் குள்ளிருந்து வெளியேறியது. மாடசாமி தாவிச் சென்று தன் காலால் அதன் தலையைத் தரையில் அழுத்தித் தேய்த்தான். அதன் பிறகு அவன் கிழவி உயிருடன் இருப்பதாய்ச் சந்தேகப்படவில்லை.

'முட்டாள்! நெருப்புக் குச்சியைக் கிழிச்சு உள்ளே பார்த்திட்டு, கிழவியைப் படுக்க வைக்காமல் போனேனே!' என்று அவனுக்குக் கடைசியில் தோன்றியது,

அவனுக்கு அது முன்னால் தோன்றியிருக்கலாம். விரியன் பாம்புக்குட்டியும் அப்போதிருந்தே அங்குதான் இருந்தது.

திடீரென்று அந்தப் பெண் அவனுடைய வலது தோளைக் கட்டிக்கொண்டாள்:

''நீங்கதான் கடவுளாட்ட வந்து என் உயிரைக் காப்பாத்தினிங்க; கடைசி வரை என்னைக் கைவிட்டுவிடாதீங்க.'' ★




# கட்டபொம்மு துரை கதை

ரகுநாதன்

வானம் பொழியுது, பூமி விளையுது
மன்னன் என் காணிக்கு ஏது பணம்?
காலமழையில் முப்போகம் விளையுது
கட்டன் என் காணிக்கு ஏது பணம்?
கோடைமழையில் முப்போகம்விளையுது,
கொற்றவன் காணிக்கு ஏது பணம்?
மாரிகள் பெய்தும் பெய்யாமலும்
போவதை
மாற்றுதற்கோ பணம் வாங்குகிறீர்?

சுமார் ஒரு தலைமுறைக்கு முன்பெல்லாம் நமது நாட்டில் இந்தப் பாடலை யாருமே பாடக் கூடாது. பாடினால் ராஜத் துரோகம். ஏனெனில் இந்தப் பாடல் வரிகொடா இயக்கத்துக்கு, ஒத்துழையாமைப் போராட்டத்துக்கு வலுவூட்டுவதாக நம்மை ஆண்டு வந்த வெள்ளையர்கள் கருதினார்கள். வெள்ளையர்கள் அஞ்சி நடுங்கும்படியான வேகத்தைக்கொண்ட இந்தப் பாடல் 'கட்டபொம்முதுரை கதை' என்னும் நாடோடி இசை நாடகத்தில் வரும் ஒரு பாடலாகும்.

கும்பினியானின் கோட்டைக்குள்ளேயே, கும்பினி அதிகாரியான மேஜர் ஜாக்ஸனின் முன்னின்று கப்பம் கட்ட மறுத்த கட்டபொம்முவின் வீரவாசகத்தையே மேலே கண்ட பாடல் கூறுகிறது. நாடு பிடிக்கும் பேராசையாலும் நய வஞ்சகத்தாலும் நம்மை அடிமை கொள்ள முனைந்த பரங்கியரின் சன்னிதானத்தில் தலை வணங்கிப் பணிந்து போக மறுத்த வீரப் புதல்வன் கட்டபொம்மு. எனவே தான் வெள்ளையர்கள் கட்டபொம்முவைச் சிறைப் பிடித்தவுடனேயே அவனை ஈவிரக்கமின்றித் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். விதேசியர் ஆக்கிரமிப்பை எதிர்த்த அந்த வீரனைத் தூக்கேற்றுவதன் மூலம் அவனது சுதந்திர கோஷத்தை, விடுதலை ஆவேசத்தை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று அவர்கள் கனவு கண்டார்கள். ஆனால் சுதந்திர தாகம் என்பது தனியொரு வீரனோடு மடிந்து மறைவதல்ல என்பதைச் சரித்திரம் நிரூபித்து விட்டது. 1799-ம் ஆண்டில் கட்டபொம்மு மறைந்தான். எனினும் அவனது சுதந்திர முழக்கம் நூற்றாண்டுக் காலத்துக்குப் பின்னும் அடங்கவில்லை; ஒடுங்கவில்லை. அவனது விடுதலை முழக்கமும் வீர பாரம்பரியமும் கதைகளாகவும் காவி

யங்களாகவும் பரிணமித்து ஒலித்தன. அதன் காரணமாக, பழகு தமிழ்ச் சொல்லருமையுடன் கிராமியப் பண்ணில் அமைந்த 'கட்டபொம்மன் கும்மி', 'கலியுகப் பெருங்காவியம்' என்னும் இதிகாசம், 'கட்டபொம்முதுரை கதை' என்னும் இசை நாடகம் முதலிய ஏடுகள் பிறந்தன. இவை தவிர, ஏடுகளில் ஏறு எழுதாக் கிளவியாக பற்பல விதமான நாட்டுப்பாடல்களும் கதைகளும் எழுந்தன. எனினும் இவை யனைத்தும் அன்னியராட்சியின் அடக்குமுறையால் தமிழ்ப் பெரு மக்கள் எல்லோரும் அறிந்துணரும் வாய்ப்பிழந்து அஞ்ஞாத வாசம் புரிந்து வந்தன. 'கட்ட பொம்மு துரை கதை'யும் அம்மாதிரியான நிலைமைக்கு உள்ளான ஒரு நூல்தான்.

'கட்டபொம்முதுரை கதை' பல்வேறுவிதமான சந்த விந்நியாசங்கள் நிறைந்த கிராமிய நாடகம். இந்த நாடகத்தைத் திருநெல்வேலிச் சீமையில், குறிப்பாக, கோயில்பட்டித் தாலுகாவில் கிராம மக்கள் நாடக ரூபமாகவே நடித்து அனுபவித்து வந்திருக்கிறார்கள். அன்னியரின் நேரடி ஆட்சிக்காலத்திலும்கூட, கம்பளத்தார் வாழும் பிரதேசங்களில் இந்த நாடகம் தெருக்கூத்தாக நடிக்கப் பெற்றதுண்டு. எனினும் இப்போது இந்தக் கூத்து நடைபெறுவது மிகவும் அரிதாகி விட்டது. சீரழிந்து வரும் கிராமப் பொருளாதாரத்தாலும், பஞ்சம் பட்டினி போன்ற கோரங்களாலும்,கிராம மக்களின் வாழ்க்கை சீர்கேடடைந்துள்ளதைப் போலவே, அவர்கள் போற்றி வளர்த்த கிராமிய நாடகக் கலையும் நலிந்து மெலிந்து கவனிப்பற்றுக் கிடக்கிறது.

கிராமிய நாடகம் என்றால் அதன் பண்பும் பாணியும் பந்தாவும் தனிதான். கிராமத்தின் எல்லைப்புறத்திலுள்ள அம்மன் கோயில் முன்னிலையிலோ அல்லது கூரைப் பள்ளிக்கூடத்தின் நிழலிலோ, அல்லது மந்தை வெளியிலோ இந்த நாடகம் நடைபெறுவதுண்டு. நாடக மேடையில் சீன் அலங்காரங்களோ, வர்ண விளக்குகளின் ஒளி ஜாலமோ கிடையாது. பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையிலிருந்து எடுத்துப்போட்ட சரப் பலகைகளையும் ஊருக்குள் சேகரித்த பெஞ்சுகளையும் கொண்டு மேடை அமைக்கப்பட்டிருக்கும். மேடையைச் சுற்றிலும் நாலு மூலைகளிலும் கால்கள் நட்டு, அவற்றினூடே வேப்பிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். நாடக மேடையின் முன்னே தீப்பந்தங்களாவது அல்லது 'கியாஸ்லைட்டு' களாவது வெளிச்சத்துக்காக ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். திறந்த வெளியில் நடைபெறும் அந்த நாடகத்தை யாரும் இலவசமாகப் பார்க்கலாம். கிராமத்திலுள்ள ஆண் பெண், பாலர் விருத்தர் யாவரும் நாடகம் பார்க்க வந்து விடுவார்கள். இரவு பத்து மணிக்குமேல் ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளையும் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு வந்து குழுமத் தொடங்குவார்கள். வெற்றிலைப்பாக்குப்

புகையிலையை வாய் நிறைய ஒதுக்கிக் குதப்பிக்கொண்டு ஊர் விவகாரம் பேசுவதும், இராக் காற்றின் குளுமையிலே உடலும் மனமும் சொக்கிப்போய் 'கட்டையைக் கிடத்தி' சடை வாறுவதும், மெல்ல மெல்ல சுக நித்திரைக்கு ஆளாகி, 'சாமி ஆடு' வதும் நாடகம் ஆரம்பிக்கும் வரையிலும் நடக்கின்ற காரியங் கள். நாடகம் தொடங்கி விட்டா லே அவர்களின் தூக்கக் கலக்க கமும் அலுப்பும் பேச்சும் போகு மிடம் தெரியாது. அத்தனை உற் சாகம்அவர்களிடம்குடிகொண்டு விடும். நாடகம் தொடங்கு வதற்கு நேரம் காலம் எது வும் நிர்ணயம் கிடையாது. நாட் டாண்மைக்கார நாயக்கர் தமது அடியாட்கள் புடைசூழ வந்து 'சமூகம் தந்து' விட்டாரானல் நாடகம் தானகவே தொடங்கி விடும். அப்புறம் விடிய விடியக் கூத்தும் கும்மாளமும்தான்.

என்னையாண்டவளே சக்கதேவி!
எங்களை முக்காலும் காருமம்மா!
கொத்துப் பல்லாரியை ஆண்டவளே
கூடையில் கூடவே வந்தவளே!
கூடையில் கூடவே வந்தவளே!
கொப்பாடுநூல்கொண்ட சக்க தேவி!
பாஞ்சைப்பதியிலே கட்டபொம்மு
பச்சம் இலங்கிய சக்கதேவி!
வாய்பேசாப் பாண்டியன்
ஊமைத்துரை வல்லபம்பேசிட வந்
தருள்வாய்!
வல்லபம் பேசிட வந்தருள்வாய்!!
வஞ்சனை வல்வினை தீர்ப்பவளே

என்று நடிகர்கள் சக்கதேவி வணக்கம்பாடி கதையைத் தொ டங்குவார்கள். அவர்கள் பாட லுக்குப் பின்னணி சங்கீதமாக மேடையருகிலிருந்து பம்பையும், உருமி மேளமும், தாளமும், பக்கப் பாட்டுக்காரனின் ஹூஉங் காரத் தொனியும் முழங்கிக் கொண்டிருக்கும். தெய்வங்களை வாழ்த்தி வணங்கியபின், காலில் கட்டிய சல்லடங்கள் பாட்டின் தாளலயத்துக் கிசைந்து குலுங் கிக்கிணுகிணுக்க,பழையகாலத்து பாலாக் கம்புகளையும் ஈட்டி வேல்கம்பு முதலியவற்றையும் தாங்கியவாறு நடிகர்கள் மேடை மீது தாவி வந்து நடிக்கத் தொடங்குவார்கள்.

'கட்டபொம்மு துரை கதை'யின் கதாம்சத்துக்கும் சரித் திரம் கண்ட உண்மைகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அதைப்பற்றிய ஆராய்ச்சி இங்கு தேவை இல்லை. எனினும், கதை முழுவதும் பண்டைப் பாஞ்சை மக்களின் வீராவேசத்தையும் கட்டபொம்மு, ஊமைத்துரை முதலியோரின் தீர சாகஸங் களையும் எடுத்துக் காட்டுவதா கவே இருக்கும். பல்லாரி நாட் டிலே வாடிக் கோட்டையிலே சக்க தேவியைக் குலதெய்வ மாகக் கொண்டு குடிவாழ்ந்த கம்பளத்தார் என்பார் பஞ்சம் பிழைப்பதற்காக தென் திசை நோக்கி வருகிறார்கள். அவர்க ளின் தலைவனை செல்லபொம் முவும் அவன் தம்பி காளைபொம் முவும் சில நாள் கழித்து கம் பளத்தாரைத் தேடித் தாமும் தெற்கே வருகிறார்கள். அவ்வாறு வந்த சகோதரர் இருவரும் குருமலைச்சாரலில் கன்று காலிக ளோடு குடிவாழ்ந்து வரு கிறார்கள்.

அங்கு அவர்கள் வாழ்ந்து வந்த காலத்திலே எட்டையா புரத்தைச் சேர்ந்த அரண்மனைக்

காவல்காரர்கள் செல்லபொம்மு வின் ஆடுகள் எட்டையாபுரத் துக்குச் சொந்தமான நிலத்தில் அத்துமீறி மேய்ந்ததாகக் கூறி, ஆடுகளைக் கைப்பற்றிச் செல் கிறார்கள். இதனால் செல்ல பொம்முதுரை எட்டயபுரம் ராஜாவைச் சந்தித்து, பஞ்சம் பிழைப்பதற்காக அவர்கள் தென் திசை வந்த செய்தியையும், குருமலை அடிவாரத்தில் குடி வாழ்ந்து வரும் தகவலையும் தெரி வித்து எட்டயபுர அதிபதியின் தயவையும் ஆதரவையும் கோரு கிறான். எட்டயபுர மன்னனும் மனமுவந்து,

நல்லது நல்லது உன் மனம்போல்
நடப்போம்ஒன்றுக்கும்அஞ்சவேண்டாம்
மாதமொரு கிடாய் கொம்புடனே
வந்தவுடன் பேட்டி காணவேணும்;
பால்குடம் ஏழும் வரவேணும்; பண்ணை
யில் ஆடுகள் மேய்க்கவேண்டும்;
இந்தப்பிரகாரம் செய்திரானல்
எந்நாளும் அங்கே வசித்திடலாம்!

என்று உத்தரவு போட்டு வழி யனுப்புகிறான். இவ்வாறு அனு மதி பெற்றுக் குடிவாழ்ந்து வந்த செல்லபொம்முவின் பேரனுகப் பிறக்கிறான் கட்டபொம்மு. கட்டபொம்முவும், அவன் தம்பி ஊமைத்துரையும் பருவமெய்தி வாலிப தசையை அடைந்தபின் அவன் தந்தையான கொண்ட பொம்மு எட்டயபுர மன்ன னுக்கு, தான் வழக்கமாகக் கட் டிவரும் கப்பத்தைப்பற்றிப் பிரஸ் தாபிக்கிறான். கட்டபொம்மு கப் பம் கட்டும் வழக்கத்தையே நிறுத்தவேண்டும் என்கிறான். எனினும் கொண்டபொம்மு அந்த ஆண்டின் திறையைச் செலுத்துவதற்காக எட்டயபுரம் செல்லும் போது தனது புத்திரர் இருவரையும் உடன் அழைத்துச் செல்கிறான். எட்டயபுரம் ராஜ சபையிலே கட்டபொம்முவும் ஊமைத்துரையும் மன்னனை வணங்காது நிற்கின்றனர். இதைக்கண்டதும் எட்டயபுர மன்னன் கோபித்துக்கொள் கிறான். கட்டபொம்மு மன்னன் கோபத்துக்கு மசிந்து விடவில்லை.

**கட்டனும் கப்பம் கொடுத்திடவோ?**
**மட்டில்லா வீரம்படைத்திடவோ?**
**மன்னவன் கப்பம் கொடுத்திடவோ**
**வையகத்தார்கள் நகைத்திடவோ?**
**எம்மை வர வேண்டாமென்று**
**சொன்னல்,இங்கேஎதற்குவாரமையா**
**இங்கே எதற்கு வாரமையா?**
**இப்போதே நாங்களும் போறேமையா!**

என்று கூறியவாறு திரும்பிவிடு கிறான். எட்டயபுரத்தாருக்கும் பாஞ்சைப்பதியாருக்கும் ஏற் பட்ட பகைமையின் காரணம் கதையில் இவ்வாறு சிருஷ்டிக் கப்பட்டுள்ளது.

எட்டயபுரத்துக்குச் சொந் தமான குருமலைப் பிரதேசத்தில் மேலும் வாழ முடியாத கட்ட பொம்முவும் அவன் குடும்பத்தா ரும் செக்காரகுடியில் வாழ்ந்து வந்த கம்பளத்தாரிடம் வந்து சேர்கிறார்கள். கம்பளத்தாரும் அவர்களை வரவேற்று உபசரிக் கிறார்கள். பின்னர் கட்டபொம் முவுக்கும் எட்டயபுரத்தாருக்கும் இடையே தகராறுகள் நேர்ந்து கொண்டேயிருக்கின்றன. இது அவர்களுக்கிடையே மூண்ட பகையை மேலும் வளர்க்கிறது. இவ்வாறு கட்டபொம்முவும் ஊமைத்துரையும் கம்பளத் தாருக்குத் தலைமை தாங்கி வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள்

கட்டபொம்மு முயல் வேட்டைக்குச் செல்கிறான். முயல் வேட்டையில் முயலைத் துரத்திச் சென்ற நாய்களை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்தவுடன் முயலே எதிர்த்து விரட்டுகிறது. முயலுக்கு அத்தனை சக்தி பிறந்ததற்குக் காரணம் அந்த இடத்தின் விசேஷம்தான் என்று கருதுகிறான் கட்டபொம்மு. எனவே அந்த இடத்தில் கோட்டை வளைந்து குடியாள எண்ணுகிறான் அவன்.

**நாயை முயல் வெற்றிகொண்டதனால்**
**நாமிதில் கோட்டைகள் போட**
**வேண்டும்;**
**ஓங்கிய பாஞ்சாலி பக்கத்திலே ஓடுங்**
**குறிச்சியைச் சேர்க்கவேண்டும்;**
**தங்கச் சிம்மாதனம் போடவேண்டும்:**
**தாழ்ச்சியில்லாதரசாள வேண்டும்!**

என்று தன் தம்பி ஊமைத்துரையிடம் கூறுகிறான் பாஞ்சை நகர் எனும் பாஞ்சாலங்குறிச்சி தோன்றுகிறது.

இதன்பின் கட்டபொம்முவின் வீர வாழ்க்கையில் பிரியாத்துணையாக நின்ற பாதர் வெள்ளையை (பகதூர் வெள்ளை) கட்டபொம்மு அனாதைச் சிறுவனாகக் கண்டெடுக்கிறான். உளைச் சேற்றில் அகப்பட்டு உயிருக்கு மல்லாடிய சிறுவனைக் கட்டபொம்மு காப்பாற்றி அவனுக்குப் பாதர் வெள்ளையென்று பேருமிட்டுத் தன் பராமரிப்பில் வைத்துக்கொள்கிறான். பின்னர் கட்டபொம்முவுக்கு கட்டக் கருப்பண்ணன் சுந்தலிங்கத்தின் உறவும், தானாபதி சுப்பிரமணிய பிள்ளையின் சேவையும் கிட்டுகிறது. இவ்வாறாக, கட்டபொம்மு ஆயிரம் கம்பளம் நூறு பரிவாரத்துடன் அரசு செலுத்தி வருகிறான். இதற்குள் கும்பினியார் ஆட்சி நாட்டில் பரவிவரத் தொடங்குகிறது. கட்டபொம்முவைப்பற்றிக் கும்பினியாருக்குப் பல புகார்கள் போகின்றன. இந்தப் புகார்களை அனுப்புவதில் எட்டயபுரத்தார்தான் முதன்மையானவர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனவே கும்பினி அதிகாரியான ஜாக்ஸன் கட்டபொம்முவைப் பேட்டிக்கு வரச்சொல்லுகிறான். ஜாக்ஸன் மேஜரைச் சந்திப்பதற்காக, கட்டபொம்மு தனது தம்பியுடனும் தானாதியுடனும் பாதர்வெள்ளை முதலிய பரிவாரங்களுடனும் குற்றாலம், திருச்சுளி, சங்கரன்கோயில் சீவில்லிபுத்தூர் முதலிய இடங்களுக்குச் சென்று ஏமாந்து, கடைசியில் ஜாக்ஸனை ராமநாதபுரத்தில் சந்திக்கிறான். ராமநாதபுரம் பேட்டியிலே கட்டபொம்முவுக்கும் ஜாக்ஸனுக்கும் இடையே வார்த்தைகள் வலுக்கின்றன; பேச்சு தடிக்கிறது.

ஜாக்ஸன் :

ஆத்தூர் அருமங்கலத்தை உனக்கு
ஆர்கொடுத்தது கட்டபொம்மு?

கட்டபொம்மு :

எனக்கு நானே கொடுத்ததல்லாமல்
இன்னும் ஒருவர் கொடுப்பதுண்டோ?

ஜாக்ஸன் :

அருங்குளத்திலே கம்பங்கதிரை
நூறு கட்டுகள் ஏனெடுத்தாய்?

கட்டபொம்மு :

காடைக்கிரையில்லை நானெடுத்தேன்,
கன்னக்களவா? வழிப்பறியா?

ஜாக்ஸன் :

எப்பலக்கொண்டான்
காட்டு நாயக்கன்பட்டி
எல்லையில் மாட்டைப் பத்தலாமோ?

கட்டபொம்மு :

காட்டை உழுதிடத்தான்! ஏதேனும்
காரணமில்லாமல் பற்றுவேனே?

ஜாக்ஸன் :

எட்டயபுரம் பண்ணை மாட்டை
எதற்குப் பத்தினீர்? பத்தலாமா?

கட்டபொம்மு :

பிள்ளைப்பாலுக்காகப் பத்தினதல்லால்
பேதகம் செய்வேனே கட்டபொம்மு!

ஜாக்ஸன் :

எங்கட் களித்திடும் கப்பங்களை
ஏழுவருடம் ஏன் ஈயவில்லை?

ஜாக்ஸன் மேஜர் இந்தக் கேள்வியைக் கேட்டதும்தான் கட்டபொம்முவுக்குக் கோபம் எல்லை மீறுகிறது. "வானம் பொழியுது, பூமி விளையுது மன்னன் என் காணிக்கு ஏது பணம்?" என்று குமுறிப் பேசத் தொடங்குகிறான். கட்டபொம்மு தனக்குப் பணியாததைக் கண்டு ஜாக்ஸனுக்கும் கோபம் மூளுகிறது. "கோட்டைக் கதவைச் சாத்துங்கடா!" என்று தனது படையினருக்கு உத்தரவு போட்டு, கட்டபொம்முவைச் சிறைப்பிடிக்க எண்ணுகிறான். சூழ்ச்சியை உணர்ந்த கட்டபொம்மு அங்கிருந்து தப்பித்துச் செல்ல எண்ணுகிறான். ஜாக்ஸன் கட்டனைப் போகவிடாதவாறு முந்தியை எட்டிப் பிடிக்கிறான். அண்ணனின் மடியைப்பிடிப்பதைக் கண்ட ஊமைத்துரை,

கோபம் பிறக்குது கண்களிலே
கொற்றவன் முந்தியைத் தொட்டதினுல்
மீசை துடிக்குது பார்க்கையிலே,
விட்டு விடு முந்தி தொட்ட கையை

என்று சீறுகிறான். பக்கத்திலே, நிற்கும் பாதர் வெள்ளையும்,

பேசாமல் போவேனே பாதர் வெள்ளை?
பின்வாங்கி நிற்பேனு சண்டையிலே!
அல்லாக்காய்ப் புல்லாக்காய்ப்
பாய்ந்தேனென்றுல்
ஆயிரம் வந்தாலும் கண்டிடுமோ?
கம்படி குஸ்திகள் செய்தேனென்றுல்
கண்டவர் சண்டைகள் போடுவரோ?

கொண்டயன்கோட்டை மறத்திபெற்ற
கொடுமுடி வெள்ளையன் நானல்லவோ

என்று வீரவார்த்தை பொழிகிறான். சிங்கத்தின் குகைக்குள்ளே புகுந்து அதனோடு பலப்பரீட்சை நடத்தியது மாதிரி, கட்டபொம்மு ராமநாதபுரம் மாளிகையில் வீரசாகஸம் புரிந்து விட்டு வெளியேறிவிடுகிறான்; கட்டபொம்முவைப் போலவே அவனது சகாக்களான ஊமைத்துரையும் பாதர்வெள்ளையும் ஜாக்ஸனின் கையில் சிக்காமல் தப்பித்து விடுகிறார்கள். ஆனுல் தானுபதிப்பிள்ளை மட்டும் ஜாக்ஸனின் மாளிகையில் அகப்பட்டுக்கொள்கிறார். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்துக்கொள்ள வெள்ளையர்களுக்குப்பைத்தியமா என்ன? தானுபதிப்பிள்ளையும் சில நாட்களில் தாமாகவே பாஞ்சைநகர் வந்து சேர்கிறார். பின்னர் பாதர் வெள்ளையின் திருமணம் நடக்கிறது. வெள்ளையரின் சிறையிலிருந்து திரும்பிவந்த தானுபதிப்பிள்ளை தம்முடைய மகளுக்குக் கல்யாணம் செய்யவேண்டும் என்றும், அதற்கு நெல்வேண்டும் என்றும் கட்டபொம்முவிடம் 'கேட்கிறார். கட்டபொம்முவும்,

உமக்குப்பிள்ளை யென்றுற்றதனுல்
எமக்கும் பிள்ளைதான் தானுபதி!
அருமைப்பிள்ளைக்குத் தாலி கட்ட
ஐநூறு கோட்டை நெல்போதாதா?

என்று வாஞ்சையுடன் கேட்கிறான். தானுபதிப்பிள்ளையோ,

ஐநூறுகோட்டை நெல் தந்தாலும்
அப்பளப் பந்திக்குக் காணுது!
முந்நூறுகோட்டை நெல் தந்தாலும்
முறுக்குப் பந்திக்குக் காணுது!

தொண்ணூறு கோட்டை நெல் தந்தா
லும் தோசைப்பந்திக்குக் காணாது!
என்குலத்தார்க்கு விருந்து வைத்தால்
எண்ணற்ற கோட்டை நெல்
வேண்டுமையா!

என்று கூறுகிறார். கட்டபொம்மு தற்போது தம் கைவசம் அவ்வளவு நெல் இல்லையென்றும், அறுவடையானதும் வேண்டிய நெல் தருவதாகவும் கூறுகிறான். ஆனால் தானாபதிப் பிள்ளையோ அது வரையிலும் பொறுத்திருக்கவில்லை. கட்டபொம்முவின் தம்பி ஊமைத்துரையுடன் கலந்தாலோசித்து ஸ்ரீவைகுண்டத்தில் கும்பினியாருக்குச் சொந்தமாகச் சேரில் குவித்து வைத்திருந்த நெல்லைக் கொள்ளை கொள்ளுவதுடன், அங்கு காவல் காத்து வந்த பாண்டியத்தேவனையும் கொன்று விடுகிறார். பாண்டியத் தேவனின் கொலையால் கட்டபொம்முவுக்கும் கும்பினியாருக்குமிடையே நிலவிய பகைமை முற்றி, போர்வெறியாக வெடிக்கிறது. கட்டபொம்மு மீது போர்தொடுத்து அவனைச் சிறைப்பிடிக்க எண்ணி கும்பினிப் பட்டாளம் காலன் துரை, பிற்கட்டு மேஜர் முதலியோரின் தலைமையில் படை திரண்டு வருகிறது.

போர் மூண்டு விடுகிறது. கட்டபொம்முதுரை கதையிலேயே போர் நடக்கும் கட்டங்களும் போர்க்களத்திலே நடக்கும் சம்வாதங்களும்சவால்களும் தான் சுவாரசியம் மிக்கவை. எனவே கொஞ்சம் நஞ்சம் தூக்கத்துக்கு ஆளாகிச் சொக்கிக்கொண்டிருந்தவர்கள் கூட, கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு நாடகத்தைக் கவனிக்கத் தொடங்குவார்கள். பாஞ்சாலக் குறிச்சி எல்லையிலே கும்பினிப் பட்டாளம் டேராப் போட்டு விட்டது. அதைக் கண்ட கட்டபொம்முவும் தனது பட்டாளத்தை திரட்ட முனைகிறான். வல்லநாட்டுக்குச் சென்றிருந்த பாதர்வெள்ளைக்குத் தாக்கல் அனுப்பப்படுகிறது. கர்ணனைப்போன்று மித்திர விசுவாசம் கொண்டிருந்த பாதர்வெள்ளை யுத்தத்துக்குச் செல்வதற்காக, தன் மனைவியிடம் விடைபெறுகிறான். வெள்ளையனுக்கும் அவன் மனைவிக்கும் நடக்கும் சம்வாதம் நாடகத்திலே ஒரு முக்கிய கட்டம்.

மாதரசே சொல்லக் கேளடி நீ!
மன்னவன் கட்டபொம்மேந்திர துரை
பெற்றகுழந்தைக்கு மேலான
உற்றகுழந்தைபோல் காப்பவண்டி!
பூமியிலென்னை நடக்கக் கண்டால்
பொற்சதங்கைப்பாதம் நோகுமென்று
தண்டியல்மேல் வரவேண்டுமென்று
சண்டை பிடிக்கின்ற சிங்கமடி!
சிங்கமழைத்திடும் நாளையிலே
செல்வதற்குத் தடைசெய்ய
வேண்டாம்

என்று கூறுகிறான் வெள்ளையன். ஆனால், வெள்ளையன் மனைவிக்கோ ஒரே மனக்கிலேசம். கணவனைத் தடுத்து நிறுத்தவெண்ணுகிறாள்.

மனைவி: போகாதே போகாதே என்
கணவா! பொல்லாத சொப்பனம்
கண்டதனால்!
வெள்ளை: கண்ட கனவினைச் சொல்லா
விட்டால் கத்தியால் வெட்டுவேன்
இச்சணமே!
மனைவி: சொல்லப் பதறுதே நெஞ்சமையோ! தொந்தரை என்னென்ன
வந்திடுமோ?

வெள்ளை: தொந்தரை என்னென்ன வந்
தாலும், சிந்தை கலங்குமோ
சொல்லு சும்மா!

கணவனின் வற்புறுத்தலுக்கிணங்கி, மனைவியும் தான் கண்ட கெட்ட கனவைக் கூறத் தொடங்குகிறாள்;

குளிக்க மஞ்சள் அறைக்கயிலே
வழிக்கையில் கரி ஆச்சுதையா!
பாஞ்சை நகரம் அழியக் கண்டேன்;
பாழூராகவே போகக் கண்டேன்!
பட்டத்து யானைகள் விறிடவே
பந்தயக் குதிரை சாகக் கண்டேன்!
கூகை நின்று குழறக் கண்டேன் !
கோபத்தில் ஆந்தை அலறக் கண்டேன்!
மேகமில்லாமல் இடிக்கக் கண்டேன்!
வீரனே உன் தலை போகக் கண்டேன்!
இவ்விதம் சொப்பனம் கண்டதனல்
எவ்விதம் போவது பாஞ்சை நகர்?

ஆனல் பாதர்வெள்ளையோ மனைவியின் பயபீதிக்குஇரையாகி விடவில்லை. அதற்குப்பதிலாக யுத்த சன்னத்தனுகப் புறப்பட்டு விடுகிறான்.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து
உலகிலே உயிர் வாழலாமா?
ஆறிலும் சாவு பின் நூறிலும் சாவெனும்
ஆன்றோர் பழமொழி கேட்டிலையோ?

என்று கூறியவாறு மனைவியை விட்டுப்பிரிந்து பாஞ்சைக்குவந்துகட்டபொம்முவைச் சந்தித்து, போருக்குச் செல்ல அனுமதி கோருகிறான். கட்டபொம்முவும் யுத்த தந்திர ஆலோசனைகள் கூறி வழியனுப்பி வைக்கிறான். யுத்த களத்திலே காலன் துரையும் வெள்ளையனும் நேருக்கு நேராகச் சந்திக்கிறார்கள்.

சிட்டுப் பறக்காத சீமையிலே சிட்டுப்
பறக்கவும் காலமுண்டோ?
காகம் பறக்காத பாஞ்சையிலே காகம்
பறக்கவும் நீதியுண்டோ?
வெள்ளையனென்று விளம்பையிலே
மேதினியெங்கும் நடுங்கிடுமே!
கட்டபொம்மு என்று விளம்பையிலே
கண்டவர் நெஞ்சு திடுக்கிடுமே!
ஊமைத்துரை என்று பேசையிலே
ஊக்கம் பிறக்குமே சண்டையிலே!

ஆறுலுமாகுது போனலும் போகுது
அஞ்சாமல் சண்டைகள் செய்திடுவேன்!

என்று ஆர்ப்பரிக்கிறான். காலன்துரையும்,

நில்லடா நில்லடா பாதர்வெள்ளை!
நியாயம் தெரியாத சண்டாளா!
குண்டுக்கு நேர் நிற்கமாட்டாமல்
கூசாமலோடுது உன்னுயிர்பார்;
பீரங்கி நேர் நிற்கமாட்டாமல்
பேசாமலோடுது உன்னுயிர்பார்!

என்று சவால் கூறுகிறான்.

காலன்துரைக்கும் பாதர்வெள்ளைக்கும் நடந்த போரில் பாதர் வெள்ளை குண்டடிபட்டு மாண்டு விழுகிறான். பாஞ்சைப்பதியிலே அழிவு காலடி வைக்கத்தொடங்கி விடுகிறது. கணவன் இறந்ததைக் கேட்டுக் களத்துக்கு ஓடிவந்த வெள்ளையன் மனைவி மிகவும் உருக்கமாக ஒப்பாரி வைத்துப் புலம்புகிறாள்.

மீசை முறுக்கழகா வில்லேந்தும் கை
யழகா
வில்லேந்தும் கைகளிலே வேந்தனிட்ட
கங்கணமும்
வேந்தனிட்ட கங்கணத்தில் வீராதி வீர
னென்று
பாந்தமிட்ட உங்களையே பாதர்வெள்ளை
என்றழைக்கும்
போதெதிர்த்துப் பேசையிலே
பொன்னுலே தேன்சொரியும்

என்றும்,

ஆலை வாய்க் கரும்பு போலே
வேலைவாய்த் துரும்பு போலே
ஆற்றில் தட்ட கோரை போலே
காற்றிலிட்ட பட்டம் போல
ஆண்டி பரதேசி போலே
தூண்டில்பட்ட மீனைப்போல
ஆவிழந்த கன்று போலே சோடிழந்த
அன்றில் போலே
ஆனேனே சாமிகளே அறியாரோ
பூமியிலே

என்றும் புலம்பித் தவிக்கிறாள்.

பாதர்வெள்ளையின் மரணத்தைத் தொடர்ந்து கட்டபொம்மனின் மீது மேலும் மேலும் தாக்குதல் நடத்துகிறார்கள் வெள்ளைக்கும்பினியார். வெள்ளை

யரின் நவீன யுத்த சாதனங்களைக் கட்டபொம்முவால் சமாளிக்க இயலவில்லை. எனவே கட்டபொம்முவும் அவன் பரிவாரமும் கோட்டையைவிட்டு வெளியேறுகிறார்கள். வெள்ளையரின் வேட்டைக்குத் தப்பி, காடுமேடு சுற்றிக் கடைசியில்புதுக்கோட்டைத் தொண்டைமான் சீமைக்கு வந்து அடைக்கலமாகிறான் கட்டபொம்மு. ஆனால், தொண்டைமானோ, கட்டபொம்முவைக் கும்பினியாரிடம் காட்டிக் கொடுத்து விடுகிறான். வெள்ளையரின் கையில் சிக்கிய கட்டபொம்முவுக்கு மரணம் ஒன்றுதான் காத்து நிற்கிறது. வெள்ளையர் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்ட அந்த வீரன் கயத்தாற்றிலே கட்டைப் புளியமரத்திலே தூக்குண்டு இறக்கிறான். கட்டபொம்முவின் மரணத்துக்குப் பின்னர் ஊமைத்துரையும் பிடிபட்டுச் சிறை செல்கிறான். எனினும் அவன் தனது வீரசாகஸத்தால் சிறை மீண்டு வெளிவந்து, மீண்டும் கோட்டை வளைந்து வெள்ளையரை எதிர்க்கிறான். எனினும் அவனுக்கும் மரணமே காத்து நின்றது.

கட்டபொம்மு ஊமைத்துரை முதலியோரின் வீரவாழ்க்கையை 'கட்டபொம்முதுரை கதை' இவ்வாறுதான் சித்தரிக்கிறது.

கட்டபொம்மு, ஊமைத்துரையின் வீரத்தைக்கண்டு ஆங்கிலேயர்கள் மலைத்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே அவர்களுக்குச் சிம்ம சொப்பனம் போல் தோன்றியது எனவே பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையையே இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்; அந்த இடத்தில் காட்டு ஆமணக்கை விதைத்து அந்த நிலத்தைத் தரிசுக் காடாக்கினார்கள்; பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரையே சர்க்கார் ஏடுகளிலிருந்து நீக்கினார்கள். இன்று பாஞ்சாலங் குறிச்சியில் மிஞ்சியிருப்பதெல்லாம் பழைய கோட்டையின் அஸ்திவாரம்தான். வெள்ளைக் கும்பினியார் கட்டபொம்முவின் வீர வாழ்க்கையை இவ்வாறெல்லாம் மறைக்கப் பாடுபட்டாலும் கூட, அது பலிக்கவில்லை. கட்டபொம்முவைப்பற்றி வீர காவியங்கள் எழுந்தன; மக்கள் அவனுக்கு வீர வணக்கம் புரிந்தார்கள். கயத்தாற்றில் கட்டபொம்முவைத் தூக்கிலிட்ட புளியமரத்தடி மக்களின் வணக்கத்துக்குரிய புனித ஸ்தலமாக மாறியது. பாஞ்சாலங்குறிச்சி மண்ணுக்கும் கூட மக்கள் ஒரு பவித்திரத்தன்மையைஉருவேற்றி விட்டார்கள். இன்றும் தாய்மார்கள் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் சேனை (சேய்நீர்) யில் பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் சிறிது கலந்து கொடுக்கிறார்கள்; அந்த மண்ணில் அந்தனை வீரம் புதையுண்டிருக்கிறதாம்! அதுபோலவே குஸ்தி பழகும் வஸ்தாத்துக்கள் தங்கள் கோதாவிலே பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் ஒரு பிடி எடுத்துவந்து போட்டுக்கொள்வார்கள். சண்டைச் சேவல்களைப் பழக்குபவர்களும் இதுபோலவே பாஞ்சை மண்ணைப் பயன்படுத்திக்

கொள்வதுண்டு. எனவேதான் பாஞ்சாலங்குறிச்சியின் 'வீர மண்'ணில் யாரேனும் ஒரு பிடி அள்ளுவது கூட, வெள்ளையராட்சிக் காலத்தில் ஒரு குற்றமாகக் கருதப்பட்டது.

வெள்ளையரின் பல்வேறு விதமான அடக்குமுறையையும் தப்பி, கட்டபொம்முவின் வீரத் திருநாமமும் விடுதலைப்போராவேசமும் நாட்டில் நிலைத்து நின்று வளரத்தொடங்கின. அவனது வீர பாரம்பரியம் மேலும் மேலும் தலைசிறந்த தேசபக்த வீரர்களைப் பிறப்பித்தது. பாஞ்சாலங்குறிச்சிக்கு ஒன்றரை மைல் தூரத்திலே உள்ள ஓட்டப்பிடாரம் என்னும் ஊரிலேதான் தேசபக்தச் செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளை தோன்றினார்; கட்டபொம்முவிடம் பகைமை பாராட்டி, வெள்ளையருக்குச்சாதகமாக இருந்து வந்த எட்டயபுரம் சமஸ்தானத்திலேதான் இரணியன் வீட்டில் பிரஹலாதன் பிறந்ததுபோல் மகாகவி பாரதியார் தோன்றினார். தமிழ்நாட்டின் விடுதலைப்போரில் கட்டபொம்முவின் வீரவாழ்க்கை அரவான் பலியாகத்தான் அமைந்திருக்கிறது. ★

## அடுத்த இதழில்......

பிரபல சினிமா வசனகர்த்தா இளங்கோவன் எழுதும் கட்டுரை

**"படங்கள் படும் பாடு"**

'புதுமைப்பித்த'னின் இதுவரை வெளியிடப்படாத கதைக் கடிதம்

**"ஓநாயும் ஆட்டுக்குட்டியும்"**

கவிமணியிடம் கண்டு பேசிய பேட்டி விவரங்கள்

**"கலை இலக்கியம் பற்றிக் கவிமணி"**

ஆசிரியர் ரகுநாதன் எழுதும் அருமையான சிறுகதை

**"விச்சுளி"**

**"பௌர்ணமி நிலவிலே" "இன்றைய சந்தையில்"**

**"ஏழு காசுகள்"**

முதலிய சிறந்த சிறு கதைகள்

மற்றும் பல அம்சங்கள் நிறைந்து தயாராகிறது.

★

ஜனவரி முதல் தேதி உங்களுக்குக் கிடைக்கும்.

# சாந்தி

○

"தமிழ் ஒளி"

○

கவினுலகக் காட்சிகளிற் கனவுதரும் சாந்தி!

கலகலென வருமிசையிற் கவிதைதரும் சாந்தி!

புவிமகிழ வரும்நிலவிற் புதுமைதரும் சாந்தி!

புதுமையிலோர் புதுநினைவாய்ப் பொலிவுபெறும் சாந்தி!

அவிழுமலர் அரும்புகளில் அழகுநகை காட்டி

அதிமதுர மொழியுதிர ஆசைதனை மூட்டி

செவிகுளிரும் இசைதவழ வரும்தென்றற் காற்றின்

சிலுசிலுப்பில் நடைபழகும் தேவமகள் சாந்தி!

கதிரவனின் சுடரொளியில் காணுநெறி சாந்தி!

கலைவளர வருமுலகக் கருணைமழை சாந்தி!

முதிர்ந்த நறுந் தமிழ்க் கவியில் முகிழ்க்குமுயிர் சாந்தி!

மூர்க்கவெறிப் போர்ஒழிய ஆர்க்குமொலி சாந்தி!

எதிர்ப்பவரும் பகைவெறியால் இறப்பவரு மின்றி

இணைகின்ற ஒருலகின் இளமுறுவல் சாந்தி!

புதியனவும் பழையனவும் போற்றுவது சாந்தி!

புகழ் மலரைச் சூடிவரும் புவியரசி சாந்தி!

★ குட்டிக்கதை

# தாய் உள்ளம்

●

முன்னொரு காலத்திலே........

ஒரு தாய் தனது ஒரே பிள்ளையான தன் மகன் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தாள். அவன் வளர்ந்து அழகிய வாலிபன் ஆனான்.

அந்தக் காலத்திலே அழகி ஒருத்தி இருந்தாள். அவள் சாதாரண அழகியல்ல; அழகு ராணி.

அந்த அழகிய வாலிபன் அந்த அழகு ராணியைக் காதலித்தான். ஆனால் கர்வம் பிடித்த அந்த அழகு ராணியோ அவனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

தன் காதலை அவள் ஏற்றுக் கொண்டால், அவளுக்குப் பளிங்கு மாளிகைகள் கட்டித் தருவதாகவும், ரத்தினாபிஷேகம் செய்வதாகவும், உலகத்துச் செல்வங்களை அவள் காலடியில் கொண்டுவந்து கொட்டுவதாகவும் அவன் அவளிடம் கூறினான். ஆனால், அவளுக்கோ இவையனைத்திலும் விருப்பமில்லை. அவள் அவனிடம் ஒரு சிறு பொருளைத்தான், அவனால் கொண்டு வருவதற்குச் சாத்தியமான ஒரு பொருளைத்தான் கேட்டாள். அந்த வாலிபனுடைய தாயின் இருதயத்தையே அவள் காதல் பரிசாகப் பெற விரும்பினாள்.

அந்த வாலிபன் அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான். எனவே அவன் ஒரு கத்தியால் தன் தாயைக் குத்திக் கொன்றான்; அவளது மார்பைப் பிளந்து அதனுள் இருந்த இருதயத்தைப் பதனமாக எடுத்துக் கைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்; பின்னர் அந்த இருதயத்தைத் தன் ஆசைக் காதலியிடம் வெகுமதியாக அளித்து அவள் காதலைப்பெறும் ஆர்வத்தோடு ஓடினான். அவன் அப்படி ஓடும்போது, திடீரென்று ஒரு மரத்தின்வேர் அவன் காலைத் தட்டியதால், அவன் தடுக்கித் தலைகுப்புற விழுந்தான். அவனுடைய கைக்குள் அடங்கியிருந்த அவனது தாயின் இருதயம் பிடி நழுவி, தூரப்போய் விழுந்தது. அந்த இருதயத்தை அவன் அவசர அவசரமாகக் கையில் எடுப்பதற்காக ஓடிச்சென்றான்.

அவன் கீழே குனிந்து அந்த இருதயத்தைக் கையிலெடுக்கும் போது, அந்த இருதயம் மிகுந்த பரிவோடும் பரிதாபத்தோடும் அவனை நோக்கிப் பின்வருமாறு கேட்டது:

“அருமை மகனே! பார்த்துப் போகக்கூடாதா? கீழே விழுந்து விட்டாயே. பலமாக அடிபட்டு விட்டதோ?” ★

# புத்தக விமர்சனம்



**விமர்சனத்துக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.**

## விஞ்ஞானமும் நாமும்

[ஆசிரியர்: கு. ராஜாராம், பி. எஸ்ஸி. பி. எல். பிரசுரம்: பண்புப்புத்தகம்; கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், சென்னை – 5. விலை ரூ. 1—4—0]

முகம் பார்ப்பதற்குக் கண்ணாடி, கண் கெட்டுப்போனால் பார்வையைத் தெளிவாக்கக் கண்ணாடி, பால் குடிக்கக் கண்ணாடி தம்ளர், படமடைப்பதற்குக் கண்ணாடித் தகடுகள். கண்ணாடி எவ்வளவு வழவழப்பாகவும், கவர்ச்சிகரமானதாகவும் இருக்கிறது! ஆனால் இது எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்றும் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

குளிர்காலத்தில் கம்பளியால் உடலைப் போர்த்துக் கொண்டு தூங்குகிறோம். கோடைகாலத்தில் வியர்வையைப் போக்க விசிறிக்கொள்ளுகிறோம். வசதி படைத்தவர்கள் வீடுகளில் மின்சார விசிறி சுழலுகிறது. இவையெல்லாம் சாதாரணமான அனுபவங்கள். சரீரத்தில் வெப்பம் ஏற்படுவது எப்படி, அதை ஏன் பாதுகாக்க வேண்டும் என்ற கேள்விகள் நமக்குப் பட்டதுண்டா?

சின்னஞ்சிறு கடைகளில்கூட கண்ணாடிப் புட்டிகளில் நிறம் நிறமான திரவங்களை வைத்து சோடாக்கலர் என்று விற்பனை செய்கிறார்கள். இதை நாம் பார்த்திருக்கிறோம். சில வேளைகளில் வாங்கியும் குடித்திருக்கிறோம். நாம் வெளிவிடும் மூச்சு சோடாத் தண்ணீர் தான் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?

கலியாண மாப்பிள்ளைகள் மணப் பெண்ணுக்கு வைரத் தோடு வாங்கித் தரவேண்டும் என்று மாமனாரிடம் கண்டிப்பாகப் பேசுகிறார்களே, வைரம் விலையுயர்ந்தது என்பதற்காகத் தானே. வைரமும், அடுப்புக் கரியும் அமைப்பில் ஒன்றுதான். கரிதான் வைரம், வைரம்தான் கரியென்றால் யாராவது ஒப்புக் கொள்ளுவார்களா?

மேற்கூறிய சாதாரணப் பொருள்களின் உற்பத்தி, பண்புகளைப்பற்றியும் சாதாரண நிகழ்ச்சிகளின் காரணங்களைப் பற்றியும் இந் நூலிலுள்ள கட்டுரைகள் விளக்கம் தருகின்றன. பெரும்பான்மை கட்டுரைகள் யாருக்கும் விளங்கும் மிக எளியநடையில் மேலும்

கற்றுக் கொள்ள வேண்டு மென்ற ஆர்வத்தை உண்டாக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதும் தமிழ் எழுத்தாளருக்குச் சில சங்கடங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் எழுத்தறிவு மிகக்குறைவு. எழுத்தறிவுள்ளவர்களிலும் விஞ்ஞானத்தின் அரிச்சுவடிகூட அறியாதவர்கள் ஏராளம். அவர்களுக்குப் புரியும்படியாக விஞ்ஞான உண்மைகளையும், கொள்கைகளையும் விளக்குவது சுலபமல்ல. மேலும் தமிழில் இல்லாதபல நுண்கலைச்சொற்களைத் தமிழில் ஒருவாறு புதிய சொற்களை அமைத்து எழுதிவிடலாம். "ஹைட்ரோகார்பன்" என்பதை 'கரிநீரகம்' என்று எழுதலாம். ஆனால் இது எதைக்குறிக்கிறது என்பதை அறியாதவர்களுக்கு இரண்டும் பொருள் விளங்காத சொற்களே. இச்சொற்கள் வருமிடங்களில் கருத்தையும் விளக்க வேண்டியதிருக்கிறது.

இச் சங்கடங்களை பல கட்டுரைகளில் ஆசிரியர் திறமையாக வென்றிருக்கிறார். ஆனால் "ஒலியின் வேகம்" ஒளியின் வேகம்" "ராடர்" ஆகிய மூன்று கட்டுரைகளில் பல நுண்கலைச் சொற்களைப் பொருளை விளக்காமல் நுழைத்து வாசகர்களுக்கு அசதியுண்டாக்குகிறார். சில உதாரணங்கள்:

"ராமெருக்கு அயனத்தின் விட்டத்தினுடைய அளவு சரியாகத் தெரியாததாகையால் அவர் ஒளியின் வேகம் விநாடிக்கு 192,000 மைல் என்று கணக்கிட்டார்" (பக்கம் 12)

"சிறிய சத்தமாயிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட யானத்தில் (**medium**) ஒரே வேகத்தில்தான் செல்லும்' (பக்கம் 15)

"வாயு திடரூபங்களில் உள்ள கரிநீரகப் பொருள்களில் கலந்து உண்டான திரவமே பெட்ரோலியம்" (பக்கம் 45)

விஞ்ஞான உண்மைகளில் ஒன்றிரண்டு தவறுகளும் உள்ளன. உதாரணமாக "சாதாரணக் கரியும், வைரமும் ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவைதான்" என்றுஎழுதியுள்ளார். சிலபண்புகளில் ஒற்றுமையுள்ள வேறு வேறு மூலப் பொருள்களின் தொகுப்பையே 'குடும்பம்' என்றழைக்கிறார்கள். ஆனால் கரியும், வைரமும் ஒரேமூலப்பொருளின் இரண்டு மாற்றுருவங்கள். "ஒலீக் ஆசிட்" என்று சொல்லப்படும் அமிலத்தின் திரட்சிதான் கொழுப்புச்சத்தாக விளங்குகிறது." இதுதவறு. ஒலிக் ஆசிட் போன்ற மூன்று அமிலங்கள் 'கிளிசரால்' என்ற பொருளோடு கூடிக் கிடைக்கும் பொருள்தான் கொழுப்பு.

இக் குறைபாடுகள் அடுத்த பதிப்பில் நிச்சயமாக நீக்கப்படுமென எதிர்பார்க்கலாம். மொத்தத்தில் நமது சுற்றுப்புறத்திலுள்ள பல பொருள்களைப் பற்றியும் அவற்றின் விஞ்ஞானத் தன்மைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளும் ஆர்வத்தை இந் நூல் தூண்டி வளர்க்கும் என்பது உறுதி. வரவேற்கத் தகுந்த நன்முயற்சி.

நா. வானமாமலை




# டாக்டரின் கோபம்

**சி. வி. எஸ். ஆறுமுகம்**

டாக்டருக்கு அன்று கடுங்கோபம் வந்துவிட்டது.

டாக்டருக்குக் கோபம் வந்தால் ஆஸ்பத்திரியிலுள்ளவர்களுக்கு தஞ்சாவூர் ஜில்லாவில் புயல் புகுந்தமாதிரிதான். கம்பவுண்டர்களும் நர்சுகளும் ஆர்டர்லிகளும் நோயாளிகளும் புயலிலகப்பட்ட வாழைக் கன்றுகள் போல் படாத பாடு படுவார்கள்.

டாக்டருக்கு அன்று கோபம் வருவதற்கு நான்குகாரணங்கள் இருந்தன.

ஒன்று: ஆஸ்பத்திரியைப் பார்வையிட, அன்று மேலதிகாரி விஜயம் செய்வதாக இருந்தது.

இரண்டு: ஆண்கள் வார்டில் எட்டாவது படுக்கையிலிருந்த ஒரு நோயாளி பலத்த அட்டகாசம் செய்தது.

மூன்று: ''அவுட் பேஷியண்ட்ஸ்' என்று சொல்லப்படும் சிறு வியாதிக்காரர்களின், அல்லது நோயாளிகளுக்காக மருந்து வாங்க வந்தவர்கள் கொஞ்சம்கூட 'நாகரிகம் தெரியாமல்' நடந்து கொண்டது.

நான்கு: உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப்போல், முன் கோபம் டாக்டரின் பிறவிக் குணமாக அமைந்திருந்தது.

காலை டாக்டர் காரை விட்டிறங்கி, 'கன்ஸல்டிங் ரூ'முக்குள் பிரவேசிக்கும் போது, கடற்படை அணிவகுத்து நின்று ராணுவ மரியாதை செய்வது மாதிரி, 'பேஷியண்ட்ஸ்' 'குட் மார்னிங் ஸார்!' என்று கூறி மரியாதை செய்யவேண்டுமென்று டாக்டரின் விருப்பம்; கண்டிப்பு.

ஆனால் வருகிற 'கண்ட்ரி புரூட்ஸ்'களுக்கு இந்த ஞானம் ஏற்படுவதில்லை. ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கிக் குடிப்பதைவிட, தலை போகிற காரியம் வேறு ஏதோ தமக்காகக் காத்துக் கிடப்பதுபோல், டாக்டர் வந்தவுடனேயே அவசரப்பட்டுக் கொண்டு முன்னேறுவார்கள்.

கம்பவுண்டர் மிகுந்த சிரமப்பட்டு உருவாக்கியிருந்த 'க்யூ' வரிசை தடம்புரண்ட ரயில் வண்டி மாதிரியாகிவிடும். உடனே டாக்டர் துர்வாச முனிவராகி விடுவார். கோபம் மூக்குக்கு மேலே பொத்துக்கொண்டு வந்துவிடும்.

டாக்டருக்குக் கோபம் வந்துவிட்டால், அவர் தமது கோபத்தைத் தவிர வேறு எல்லாவற்றையும் மறந்து விடுவார்.

ஜனங்களுக்காகத்தான் ஆஸ்பத்திரி இருக்கிற தென்பதையும் அவர்களுக்கு மருந்து கொடுப்பதற்காகவே சர்க்கார் தமக்குச் சம்பளம் கொடுக்கிறது என்பதையும் அவர் அடியோடு மறந்து விடுவார். 'இந்தப் புத்திகெட்ட ஜனங்கள் சாகிறதுக்குப் பள்ளிவாசல் இல்லாமல்' அலைந்து வீணில் வந்து தமக்குத் தொல்லை கொடுப்பதாகவும் நினைத்துக்கொள்வார்.

டாக்டர்தான் இப்படி என்றால், வருகிற ஜனங்களும் அப்படி தான். தங்களுக்காகத்தான் அந்த ஆஸ்பத்திரியும் டாக்டரும் என்ற உணர்வு ஏற்படா விட்டாலும், சர்க்கார் ஆஸ்பத்திரி என்று கொட்டை எழுத்தில் போர்டு போட்டிருப்பதைப் பார்த்தாவது கொஞ்சம் தைரியமாக நடந்து கொள்ளலாம். ஆனால் அந்த அப்பாவி ஜனங்களோ ஏதோ புண்ணியத்துக்குத் தானம் கொடுக்கிற இடத்தில் தர்மம் வாங்க வந்த அகதிகளைப் போலத்தான் நடந்து கொள்வார்கள்.

டாக்டருக்குக் கோபம் வந்துவிட்டது.

"வே, ஈசுரம்பிள்ளை!" என்று இரைந்தார் டாக்டர்.

கம்பவுண்டர் ஈஸ்வரன் பிள்ளை பில்டரில் மருந்து பிடித்துக் கொண்டிருந்தார். ஆருயிர்க் கணவனின் கூப்பிடு குரலைக் கேட்டு அந்தரத்திலே உலக்கையை விட்டுவிட்டு வந்த பதிவிரதையைப்போல், அவர் எல்லாவற்றையும் அப்படியப்படியே விட்டு விட்டு ஓடோடியும் வந்தார்.

"வே, இது என்ன ஆசுபத்திரியா? இல்லெ, கருவாட்டுச் சந்தையா?" என்று கம்பவுண்டரைப் பார்த்தவாறு கோபமாகக் கேட்டார் டாக்டர்.

"ஆஸ்பத்திரிதான்!" என்ற நியாயமான பதிலை ஈஸ்வரன் பிள்ளை சொல்லியிருக்கலாம். அப்படிச் சொன்னால் டாக்டரின் கோபம் பின்னும் அதிகமாகும் என்பது அவருக்குத் தெரியும். எனவே மௌனமாக நின்றார்.

டாக்டருக்கு அன்று வேலை அவசரம். எனவே கோபத்தை மேலும் காட்டாமல், அப்படியே நாற்காலியில் போய் உட்கார்ந்


**சாந்தி**

**மாத இதழ்**

✱

| | |
|---|---|
| தனிப்பிரதி | 0–6–0 |
| ஆறுமாதச்சந்தா | 2–4–0 |
| ஆண்டுச் சந்தா | 4–8–0 |

சந்தாதாரர்களுக்குத் தபால் செலவு இனம்!

நிர்வாகி: 'சாந்தி'

81. ஹைரோடு.
திருநெல்வேலி ஜங்ஷன்
என்ற விலாசத்துக்குச் சந்தாத்தொகை அனுப்ப வேண்டும்.

தார். கூட்டம் இதற்குள் ஒவ்வொன்றாக வரிசைப்பட்டு நின்றது. ஆயினும் டாக்டரின் கோபத்துக்கு மரியாதை கொடுக்கவேண்டி, அந்த 'க்யூ' வரிசையை மேலும் ஒரு தடவை சரிப்படுத்தினார் கம்பவுண்டர்.

''சரி, சரி போம். அங்கேயும் வந்துகூட்டம் சேரப்போவுது!'' என்று சலித்துக்கொண்டார் டாக்டர். கம்பவுண்டர் பேசாமல் திரும்பிப் போனார்.

வரிசை ஒரு அடி முன்னே நகர்ந்தது.

முதன் முதலாக டாக்டரிடம் சீட்டைக் கொடுத்தவன் ஒரு திக்குவாய்ப் பிறவி.

''எ...எ...என்...ப...பப்...... பையனுக்கு....வவ்...வவ்......''

''என்னவே, வவ்வவ்! கேலியா பண்ணுதே?''

''இ...இ... இல்லிங்க...வவ்... வவுத்து வலிங்க.''

''போய்த் தொலையும்!''

சீட்டை எழுதி எறிந்தார் டாக்டர்.

அடுத்த ஆள் ஒரு நாட்டுப்புற ஆசாமி,

''எசமான்! போன விசாளக் கிளமையிலேருந்து வயத்துக்குள்ளே சும்மா பெரட்டிப் பெரட்டி...''

''இனிமே பெரட்டாது, போம்!''

சீட்டை வீசினார் டாக்டர்.

''ஐயோ, இப்போ வயத்து வலி நின்னுடுச்சிங்களே! வயித்துப் போக்கில்லா, சும்மா...''

''அதையும்தான் கேட்கும், போமையா!'' என்று கூறிவிட்டு அடுத்த ஆளிடம் சீட்டை வாங்கினார், டாக்டர். கூட்டம் விறுவிறு என்று முன்னேறிக் கரைந்து கொண்டிருந்தது. வயிற்று வலி, காய்ச்சல், இருமல் இளைப்பு......

டாக்டர் மளமள வென்று சீட்டுக்களை எழுதித் தள்ளிக் கொண்டிருந்தார். காலனை உதைத்த பரமசிவனுக்குக்கூட, டாக்டரிடம் இருந்த துணிச்சல் இருந்திக்க முடியாது. அவ்வளவு அநாயாசமாக அவர் நோய்களின்மீது தமது அஸ்திரங்களான சீட்டுக்களைப் பிரயோகித்துக்கொண்டிருந்தார்,

டாக்டர் நோயாளியைப்பார்க்காமலே சீட்டு எழுதிக் கொடுத்துக்கொண்டிருந்தா ரென்றால், கம்பவுண்டர்சீட்டுக்களைப்பார்க்காமலே மருந்தை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சற்றுமுன் அவர் பில்டரிலிருந்து பிடித்த மருந்து சர்வேராக நிவாரணி போலும்! திருநீற்றை அள்ளிக்கொடுத்து தீராத நோய்களை யெல்லாம் தீர்த்து வைத்த சைவ நாயனார்கள்கூட, அந்தக் கம்பவுண்டரைக் கண்டால் திடுக்கிட்டுப் போயிருப்பார்கள்!

கூட்டம் ஒரு மட்டும் கலைந்தது. டாக்டர் காரை எடுத்துக்கொண்டுபோய், பக்கத்திலுள்ள ரெஸ்டாரெண்டில் காபி சாப்பிட்டு, சிரம பரிகாரம் செய்து கொண்டு திரும்பி வந்தார்.

அன்று ஆஸ்பத்திரியைப் பார்வையிட மேலதிகாரி வருவதாக இருந்ததால், வார்டுகள் சுத்தமாக்கப்பட்டன.

வார்டுகளில் மூன்று பிரிவுகள் உண்டு. ஒன்று ஆண்களுக்கு;

மற்றென்று பெண்களுக்கு. மூன்றுவது வார்டு ஸ்பெஷல் வார்டு. ஆண் பெண் இருபாலாருக்கும் தனித் தனியே வார்டுகள் இருக்கும்போது மூன்றுவது வார்டு எதற்காக என்று கேட்கிறீர்களா?

மக்கள் யாவரும் சமம் என்ற அழகிய வாசகம் அரசியல் சாசனத்திலே இடம் பெற்றிருந்தாலும், மக்களோடு ஒத்துப் போக முடியாத தெய்வப் பிறவிகள் சிலருக்கு, ரயிலில் முதல் வகுப்பு என்றும், ஜெயிலில்கூட 'ஏ' கிளாஸ் என்றும் ஒதுக்கி வைத்திருக்கிறுர்கள் அல்லவா? அந்த ஏற்பாடு மனித வாழ்வின் அந்திம எல்லையாகிய ஆஸ்பத்வரையிலும் உண்டு என்பதற்கு அத்தாட்சிதான் அந்த ஸ்பெஷல் வார்டு. அந்த வார்டில் 'ஸ்பெஷல்' மனிதர்கள்தான் அனுமதிக்கப்படுவார்கள்.

வார்டுகள் சுத்தமாக்கப்பட்டன; படுக்கைகளுக்குப் புதிய விரிப்புகளும் உறைகளும் தலையணைகளும் வழங்கப்பட்டன; மோசமான நோயாளிகளில் சிலர் வெளியேற்றப்பட்டார்கள்; இன்னும் நடைபாதை, முற்றம் முதலியன யாவும் சுத்தமாக்கப்பட்டன.

டாக்டர் எல்லாவற்றையும் பார்வையிட்டுக்கொண்டு வந்தார். ஆண்கள் வார்டில் எட்டாவது படுக்கையண்டை வந்ததும் நின்றுர்.

அந்த நோயாளி டாக்டருக்கு ஒரு தீராத தலைவலியாக இருந்து வந்தான். அவன் உள்ளூர்ப் பிரமுகர் ஒருவரின் சிபாரிசின் பேரில் ஆஸ்பத்திரியில் இடம் பெற்றிருந்தான். இல்லாவிட்டால் அவனும் வெளியேற்றப்பட்டிருப்பான்.

அவன் ஓயாமல் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தான். எந்த நேரமும் 'ஹா' 'ஹூ' என்று அனற்றிக் கொண்டிருந்தான், சில சமயம் நோயின் உபாதை பொறுக்க முடியாமல் வாய் விட்டு ஊளையிடவும் செய்தான்.

அவனது தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் டாக்டர் அவனுக்கு ஏதோ ஒரு ஊசி போட்டார். அதுவே அவனுக்குப் பெரிய ஆபத்தை விளைவித்து விடும் போல் தோன்றியது. ஊசி போட்ட கை பெரிதாக வீங்கி விட்டது. உபாதையும் வலியும் நிற்கவில்லை. வலி பொறுக்கமாட்டாமல், அவன் பெருங் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான்.

''அவனை என்ன செய்யலாம்?'' என்று டாக்டர் யோசித்தார். மேலதிகாரி வந்து பார்த்து விட்டுப்போகும் வரையிலாவது அவனுடைய தொல்லையைத் தவிர்க்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். ஏனென்றுல் அவனுடைய அனற்றலும் பினற்றலும் வரவிருக்கும் மேலதிகாரிக்குத் தொந்தரவாக இருக்கும் என்று நினைத்தார். தவிரவும் ஊசி போட்டதிலும் ஏதோ கோளாறு நிகழ்ந்து விட்டது......

டாக்டரின் யோசனையைத் தப்பிதமாக அர்த்தம் பண்ணிக் கொண்டார், அந்தப் படுக்கையின் அருகே நின்ற கிழவர். அவர்தாம் அந்தப் பையனின் தகப்பனுர். பையனைப் பற்றிய கரிசனைதான் டாக்டருக்கு ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணி, உள்ளம் பூரித்து டாக்டரையே

நன்றியறிதலுடன் பார்த்துக் கொண்டு நின்றார். இதையெல்லாம் தூரத்திலிருந்த செடிமறைவில் நின்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பையனின் தாய்.

நோயாளின் பக்கத்தில் ஒரே ஒரு ஆள் மட்டுமே இருக்கலாம் என்று அனுமதித்திருந்தார், டாக்டர். முந்திய நாள் தாயும் தகப்பனுமாகச் சேர்ந்து, தங்கள் பையனின் அருகே நிற்பதைக் கண்டு, டாக்டர் மிகவும் கோபப்பட்டு விட்டார். எனவே அந்தத் தாய் அங்கேயுள்ள செடிமறைவைப் புகலிடமாகக் கொண்டு நின்றாள்.

டாக்டர் ரொம்ப நேரமாக, தன் பையனின் படுக்கையருகிலேயே நிற்பதைக் கண்ட அந்தத் தாய், மெதுவாகத் தன் மறைவிடத்தை விட்டு வெளியே வந்து, டாக்டருக்குப் பின்னால் வந்து நின்றாள். அவள் என்ன செய்வாள்? பெற்ற மனசு அவள் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறதே!

"பிள்ளையைக் கொஞ்சம் கவனிச்சிப் பாருங்க, டாக்டர். இன்னிக்கு ரொம்பக் கூடுதலா இருக்குங்க!'' என்று தன்னை மறந்து வாய்விட்டுக் கூறிவிட்டாள் அந்தத் தாய்.

டாக்டர் திரும்பிப்பார்த்தார், உடனே சிந்தனையால் உள்ளடங்கி யிருந்த கோபம் திடீரென்று சீறிக் கிளம்பியது.

"நீ எதற்கு உள்ளே வந்தே? கூடுதலா இருக்கிறதும் குறைவா இருக்கிறதும் எங்களுக்குத் தெரியாது? போ வெளியே!'' என்று அதட்டினார் டாக்டர்.

"உள்ளே வராதேன்னு சொன்னாத் தெரியலே? உங்களிடம் எத்தனை தரம்தான் சொல்லித் தொலைக்க?'' என்று கம்பவுண்டரும் சேர்ந்து அதட்டினார்.

பாவம், அந்தத் தாயின் பாடு மிகவும் சங்கடமாகிவிட்டது.

அவள் தன் உயிரையே விட்டுவிட்டுப் போவதுபோல், தயங்கித்தயங்கி வெளியே சென்றாள்.

"டேக் ஹிம் டு தி போஸ்ட் மார்ட்டம்!'' என்று கம்பவுண்டரிம் ஆங்கிலத்தில் கூறிவிட்டு, அப்பால் சென்றார் டாக்டர்.

'போஸ்ட் மார்ட்டம்' என்று சொல்லப்படும் அந்தத் தனிக் கொட்டடி பிரேதபரிசோதனைக் கிடங்குதான் என்பது அந்தத் தாய் தந்தையருக்கோ, அந்தப் பையனுக்கே தெரியாது. அவ்வளவு நேரம் டாக்டர் யோசனை செய்ததையும், பையனை வேறு இடத்திற்கு மாற்றிப் போடுவதும் ஏதோ விசேஷ சௌகரியத்துக்குத்தான் என்று கருதி அவர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்.

ஆனால் பையனின் நிலைமையோ அன்றைக்குப் பார்த்து மிகவும் மோசமாக இருந்தது. முன்போல் அனற்றவும் பினற்றவும் கூட, அவனுக்குச் சீவனில்லை. கிழித்துப் போட்ட வாழைநார் போலத் துவண்டு சுருண்டு கிடந்தான்.

ஆஸ்பத்திரியிலுள்ள மற்ற நோயாளிகளும் நிலைமையை உணர்ந்து கொண்டு மூச்சுப் பேச்சு காட்டாமல் அடங்கி விட்டார்கள். ஒரு தும்மலோ இருமலோ கூடப் போடாமல், அவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

கம்பவுண்டர்களேயும் நர்சுகளேயும் பற்றிக் கேட்கவேண்டியதில்லே, அவர்கள் பூமியில் கால்படாமல் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தார்கள்.

ஒருமட்டும் மேலதிகாரி வந்து சேர்ந்தார்.

டாக்டர் அவரைப் பஞ்சணையில் வைத்து ஏந்தியது போல் கூட்டிச் சென்று பார்க்கவேண்டிய இடங்களை யெல்லாம் காட்டினுர். ஆஸ்பத்திரியைப் பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயம் விழுந்து விட்டது என்ற உண்மையை அவரது முகக்குறியிலிருந்து கண்டுணர்ந்து, டாக்டர் மனம் விம்மிதமுற்ருர்.

எல்லாவற்றையும் பார்வையிட்டபின் இருவரும் ஆபிஸ் அறைக்குள் வந்து உட்கார்ந்தார்கள். அதிகாரி எல்லாவற்றையும் பார்த்து முடித்து விட்டு, ஆஸ்பத்திரியையும் அதன் நிர்வாக மேன்மையையும் பற்றித் தமது அபிப்பிராயத்தை எழுதுவதற்கு முனேந்தார்.

திடீரென்று ''ஐயையோ!'' என்ற ஓலம் பிறந்தது.

டாக்டருக்கு நாராசமாக விழுந்த அந்த அவலக்குரலுடன் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் எதிரொலியும் சேர்ந்து விம்மி இரைந்தது. தொடர்ந்து ஒரே அழுகைக்குரல்; கூக்குரல்.

''என்ன கூச்சல் அங்கே?'' என்று இருகாதுகளேயும் பொத்திக்கொண்டார் அதிகாரி.

டாக்டருக்கு எல்லே காண முடியாத கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அதே கோபத்துடன் எழுந்து, துர்வாச முனிவரைப்போல் ''என்ன கூச்சல் இது?'' என்று இரைந்து கொண்டே, வெளியே வந்தார். அழுதரற்றிக் குமுறுகின்ற அந்தத் தாயின் முன்னிலேயிலே கம்பவுண்டர்களும் நர்சுகளும் செய்வதறியாமல் செயலிழந்து நின்று கொண்டிருந்தார்கள். அதைக் கண்டதும் டாக்டரின் கோபம் மேலும் அதிகரித்தது.

''இதென்ன ஆஸ்பத்திரியா, இல்லே, உங்க வீடா?'' என்று சீறினுர் டாக்டர்.

அதே சமயம் அந்தத் தாய் டாக்டரைக் கண்டு விட்டாள். நேற்றுவரை அவரைக் கண்டால் புழுவாய்க் கூனிக்குறுகி நெளிந்து போன அந்தத் தாய் உடனே புலிப்போல் மாறி விட்டாள்.

''சண்டாளப்பாவி! என் மகனே உசுரோடே தூக்கி, சவக்கிடங்கில் தள்ளிக் கொன்னுட்டையே! நீ விளங்குவியா?'' என்றுஅலறிக்குமுறிக்கொண்டு புடைபுடைத்து எழுந்தாள். அவள் கண்களில் மின்னிய உக்கிரம் டாக்டரின் உடம்பை நடுங்க வைத்தது.

டாக்டரின் இன்னது செய்வதெனத் தெரியாமல் திடீரென்று திரும்பி விரைவாக நடந்தார்.

பிள்ளேயைப் பறிகொடுத்த அந்தத் தாயின் அழுகுரல் ஆஸ்பத்திரிச் சுவர்களில் மோதி எதிரொலித்து, டாக்டரை விரட்டி விரட்டிச் சென்றது. ★

**தணிக்கை**

சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களேத்தான் பிரசுரிக்கலாம் என்ருல், அதிகாரம்தான் உண்மைக்கு உரைகல் ஆகிவிடும்.

— டாக்டர் ஜான்ஸன்

## எழுத்தாளர்களைப்பற்றி......

**திருச்சிற்றம்பலக் கவிராயர் :** குத்தலும் கிண்டலும் நிறைந்த புதுமுறைக் கவிதைகள் பல எழுதியுள்ளவர். இவரது பாடல்களைக் கண்டு பரவச மடைபவர்களும் உண்டு; பயப்படு பவர்களும் உண்டு. பல கவியரங்கங்களில் பங்கு கொண்டவர்.

**சுந்தர ராமசாமி :** நாஞ்சில் தமிழகத்தைச் சேர்ந்தவர். தமிழ் ஆங்கிலம் மலையாளம் சமஸ்கிருதம் முதலிய மொழி களைப் பயின்றுள்ளவர். மூன்று ஆண்டுகளுக்கு முன் 'புதுமைப் பித்தன் நினைவுமலர்' ஒன்றைப் பாராட்டத்தக்க முறையில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

**கே. ஏ. அப்பாஸ் :** ஆங்கிலத்திலும் உருதுவிலும் எழுதும் பிரபல இந்திய எழுத்தாளர்; சினிமாக் கதை வசன கர்த்தா; சினிமா டைரக்டர். சமீபத்தில் சோவியத் ருஷ்யாவுக்குச் சென்ற திரையுலகக் கலைஞர்கள்கோஷ்டியின் தலைவராக, ருஷ்யா சென்று திரும்பியவர்.

**மு. சண்முகம்பிள்ளை:** தமிழ் வித்துவான். சென்னை அரசாங்க கலைஇயற் கல்லூரியில் போதகாசிரியராகப் பணியாற்றிவருகிறார்.

**அகிலன் :** எளிய இனிய நடையில் கதைகள் எழுதும் பிரபல தமிழ் எழுத்தாளர். கலைமகள் நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். 'வழி பிறந்தது' 'அமராவதிக் கரையில்' முதலிய ஏழு சிறு கதைத் தொகுதிகளையும் 'பெண்' 'சிநேகிதி' முதலிய நாவல் களையும் எழுதியுள்ளார்.

**ரகுநாதன் :** 'சாந்தி'யின் ஆசிரியர். 'ரகுநாதன் கதைகள்' 'நீயும் நானும்' 'புயல்' 'பஞ்சும் பசியும்' 'புதுமைப்பித் தனின் வாழ்க்கைவரலாறு' இலக்கியவிமர்சனம்' முதலிய நூல்களை எழுதியிருக்கிறார். மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' முதலிய தலை சிறந்த இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழாக்கியிருக்கிறார்.

**'தமிழ் ஒளி :** இன்றைய இளங்கவிஞர்களில் குறிப்பிடத் தக்கவர். 'சிலைக்கு எதிரில்', 'வீராயி' முதலிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

**நா. வானமாமலை :** கல்லூரிப் பேராசிரியர்; அதிபர். டால்ஸ் டாயின் 'இருளின் வலிமை' என்ற நாடகத்தைத் தமிழாக்கியிருக் கிறார். தமிழில் விஞ்ஞானக் கட்டுரைகள் பலவும் எழுதி வருகிறார்.

**சி. வி. எஸ். ஆறுமுகம் :** வளர வேண்டும் என்ற ஊக்கமும் ஆர்வமும் உள்ள இளம் எழுத்தாளர். தமிழ் நாட்டுப் பிரபல பத்திரிகைகள் பலவற்றிலும் பல சிறு கதைகள் எழுதியுள்ளார்.

'சமரன்' ஆசிரியர் இஸ்மத் பாஷா எழுதியுள்ள நூல்கள்

## கற்காலத் தமிழர்கள்

கதை — விலை 1—4—0

## கற்காலத்திலிருந்து தற்காலம் வரை

முதல் பாகம் — விலை 2—4—0

## வாழ்வுப் போராட்டம்

சிறு கதைகள் — விலை 1—0—0

கிடைக்குமிடம்:

**சமரன் அலுவலகம்**

கும்பகோணம்.

படியுங்கள்

## "டில்லி ஒப்பந்தம்"

நேரு—கோத்தலாவலையின் டில்லி ஒப்பந்தத்தையும்
இலங்கை இந்தியப் பிரச்சினையின்
உண்மை நிலையையும் விளக்கும் நூல்.

*இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்:*

தோழர்: பீட்டர் கெனமன் M. P.

*பாராளு மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு.*

முப்பது பக்கங்கள் — விலை அணா 2,

கிடைக்குமிடம்

**தேசாபிமானி காரியாலயம்**

91, கோட்டா ரோடு :: கொழும்பு-8.

"SHANTHI" Edited and Published by T. M. C. Ragunathan at 81, h Road, Tirunelveli Jn. Printed by S. Ramiah at Sri Lakshmi Press, High Road, Tirunelveli Jn.

அழகுக்கு அழகு செய்ய...

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் ஐம்பெருங்காப்பியங்களையும் அணிகலன்களாகப் பெற்ற பாக்கியவதி என்று தமிழன்னையைப் புலவர்கள் பாராட்டுகிறார்கள். ஆம், நல்ல நகைகள் அழகுக்கு அழகு செய்யும் சிறப்புடையவை.

★

திருவாங்கூர் கொச்சியில் உயர்தரமான
தங்கம், வெள்ளி, வைர நகைகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்

# ஜுவல் மான்ஷன்

50 ஆண்டுகளாகப் பொது மக்களின்
நம்பிக்கையைப் பெற்றுள்ள ஆபரண மாளிகை

★

உரிமையாளர் :

**எம். சி. சுப்பிரமணியன் செட்டியார்**

" ஜுவல் மான்ஷன் "

:: திருவனந்தபுரம்

ted at Shanti Press, Madras - 1